REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 10 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 86 | April 10, Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-


## இளவரசர் பிலிப் காலமானார்



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் 99 வயதில் நேற்று காலமானார். இவர் உடல் நலக்குறைவால் நேற்று காலமானதாகவும் வின்ஸ்டர் அரண்மனையில் அவரது உயிர் பிரிந்ததாகவும் எலிசபெத் மகாராணி அறிவித்துள்ளார்.

மறைந்த இளவரசர் பிலிப், 06










## நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க பல்வேறு ஏற்பாடுகள்

- புதிதாக 196 பொலிஸ் நிலையங்களுக்கு 10,000 பேர் இணைப்பு
- மத அடிப்படைவாத சிந்தனை புத்தகங்களுக்குத் தடை



சட்டம் மற்றும் அமைதியை பாதுகாக்கும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் நாட்டில் புதிதாக 196 பொலிஸ் நிலையங்களை அமைக்கவும் பொலிஸ் சேவைக்கு ஆண், பெண் இரு பாலாரிலிருந்தும் 10,000 பேரை இணைத்துக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி 06

புதுவருட பண்டிகைக் காலத்தில் வடக்கில்

## மக்களை அவதானமாக இருக்க ஆளுநர் கோரிக்கை



வடமாகாணத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் பெருமளவு குறைந்து தற்போது மீண்டும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலை நீடித்து மக்கள் வழமை நிலைமைக்கு திரும்ப வேண்டுமானால் சகல தரப்பினரதும் 06

## மணல் மாபியா குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார் சாணக்கியன்



மணல் மாபியாக்களின் செயற்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

பாதுகாப்பு ஆலோசனைக்குழுக் கூட்டம் வியாழக்கிழமை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே இவ் விடயம் தொடர்பாக இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். வவுனியா மற்றும் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு குறித்தும் இரா. சாணக்கியன், ஜனாதிபதியின் 06

புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்ட குற்றச்சாட்டு

யாழ்.மாநகர முதல்வர்

# மணிவண்ணன் கைது

## அதிகாலை 2 மணிக்கு பொலிஸார் அதிரடி



*யாழ். குறூப், யாழ்.விசேட, வவுனியா விசேட நிருபர்கள்*

யாழ்.மாநகர சபையினால் அமைக்கப்பட்ட காவல் படை தொடர்பில் மாநகர சபை முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்டமை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (09) அதிகாலை 02.00 மணியளவில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட அவர், மேலதிக விசாரணைக்காக வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபன் ஆகியோர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபன் இருவரும் நேற்று முன்தினம் இரவு 08.00 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு 06

**வவுனியாவில் விசாரணையின் பின் நேற்று மாலை யாழ். நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; தொடர்புடையவர்களுக்கு

## அதியுச்ச தண்டனையுடன் சொத்துக்களும் முடக்கம்



பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி இல்லையென்பவர்கள் சாட்சியங்களை ஒப்படைக்கலாம்

*ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு அதியுச்ச தண்டனையை வழங்குவது மாத்திரமின்றி தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைவரினதும் சொத்துகளும் அரசுடமையாக்கப்படும். அவ்வாறு அரசுடமையாக்கப்படும் சொத்துகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலும் பரிசீலனை செய்யப்படுமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் விசாரணை 06

## G.C.E (O/L), (A/L), புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள்

கல்வி அமைச்சரால் அறிவிப்பு

O/L அடுத்த ஜனவரி,
A/L அக்.04 முதல்
30, புலமைப்பரிசில்
அக்டோபர் 03 இல்



*லோரன்ஸ் செல்வநாயகம்*

கல்வி அமைச்சினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்திருந்த கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் 04ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக 06

இந்திய மீனவர்களின் அத்துமீறல்;

## இவ்வருடத்திற்குள் முற்றுப்புள்ளி

கடற்றொழில் அமைச்சர்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு இவ்வருடத்திற்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 06



ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற வெற்றிடத்துக்காக நியமிக்கப்பட்ட அஜித் குமார மான்னப்பெரும சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (09) பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டபோது..

மணிவண்ணன் கைது விவகாரம்

## அரசின் அறிவிப்பு வெகு விரைவில்

**அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு**



யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்ட விடயத்தில், அரசாங்கம் என்ற அடிப்படையில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதை வெகுவிரைவில் அறிவிக்க முடியுமென 06

## வீட்டினுள் அமைத்த பதுங்கு குழிக்குள் 'ஜீடி'

STF இன் அதிரடி சுற்றிவளைப்பில் கைது



முல்லேரியா பகுதியில் நேற்று (09) அதிகாலை பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 'ஜீடி' என்றழைக்கப்படும் சரத் குமார என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் உயிரிழந்த 'அங்கொட லொக்கா' எனும் குற்றவாளியை முதல் 06



### கிழக்கு ஆளுநர் - மட்டு முதல்வர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

சாணக்கியனின் கேள்விக்கு அமைச்சர் ஜனக பதில் 03



### சட்டத்தை மீறுவோர் மீது தராதரம் பார்க்கப்படமாட்டாது

அமைச்சர் நாமல் தெரிவிப்பு 03



### மணியின் கைது நம்மவர்கள் சிலரை திருப்தியடைய வைத்துள்ளது

தமிழ் மகா ஜனங்கள் மீது மனோ கண்டனம் 03



### ச.தொ.ச. வாகனங்களில் குண்டுகள் கடத்தலா?

களங்கத்தை துடைக்க வேண்டும் 03

### விக்கல் வீராச்சாமி



யாழ்ப்பாணத்தில கொரோனா பயத்திலேயே சனம் வாழுது.. கொஞ்ச பேருக்கு கொழுப்பா இருக்கு.....

மணியின்ற விடயம் தானே, அவரும் கொரோனாவை ஒழிக்கத்தான் வித்தியாசமா யூனி∴பாம் போட்டு புறப்பட்டார், அது பிழைச்சுப் போச்சு...!!!

அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



உக்கும் கழிவுகள்

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்



மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்



மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்



திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 364 473

மாவட்டம் D5

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

# சர்வதேச செய்திகள்

## உக்ரைன் நாட்டு எல்லையில் ரஷ்யா படைகளைக் குவிப்பு: போர் பதற்றம்

பிரிவினைவாதிகளுக்கு எதிராக உக்ரைன் முழு வீச்சில் போர் தொடுத்தால் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய மொழி பேசும் மக்களுக்கு உதவியாக ரஷ்யா தலையிட வேண்டி ஏற்படும் என்று அந்நாட்டு உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.



கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கும் உக்ரைன் இராணுவத்திற்கு மோதம் இடம்பெற்று வருகிறது.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளை குவித்துள்ளது.

இந்நிலையில் பொதுமக்களை பாதுகாப்பதற்கு ரஷ்யா இந்தப் போரில் தலையிடக்கூடும் என்று ரஷ்ய ஜனாதிபதி நிர்வாகத்தின் பிரதித் தலைவர் ட்மிட்ரி கோசக் குறிப்பிட்டுள்ளார்.

'மோதலின் வீச்சிலேயே எல்லாம் தங்கியுள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார். இது உக்ரைனின் முடிவுக்கான ஆரம்பமாகவும் இருக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிராந்தியத்தில் பதற்றம் அதிரித்துள்ளது பற்றி அமெரிக்கா மற்றும் ஜெர்மனி கவலை வெளியிட்டுள்ளன.

இந்த சூழ்நிலையில், அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை விரைவில் கருங்கடல் பகுதிக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது. அமெரிக்க கடற்படை வழக்கமாக கருங்கடலில் பயிற்சி மேற்கொள்கிறது. ஆனால் இப்போது போர்க்கப்பல்களை அனுப்புவதன் மூலம், ரஷ்யாவுக்கு மறைமுகமாக கண்டனம் தெரிவிப்பதையே காட்டுகிறது.

மேலும், ரஷ்ய கடற்படையின் நடவடிக்கைகள் மற்றும் கிரிமியாவில் துருப்புக்களின் நகர்வுகளை கண்காணிப்பதற்காக, அமெரிக்க கடற்படை கருங்கடல் பகுதியில் உள்ள சர்வதேச வான்வெளியில் உளவு கண்காணிப்பு விமானங்களை தொடர்ந்து இயக்குவதாக பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ரஷ்யா, உக்ரைன் எல்லையில் படைகளை அதிகரித்திருக்கும் அதே நேரத்தில் உக்ரைன் துருப்புகளுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான மோதலும் அண்மைய மாதங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் அதிக செல்வந்தர்கள் உள்ள நகராக பீஜிங் மாற்றம்



உலகிலேயே மிக அதிகமான பெருஞ்செல்வந்தர்களைக் கொண்ட நகரம் சீனாவின் தலைநகர் பீஜிங் என்று போர்பஸ் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மட்டும், அந்தப் பட்டியலில் அந்நகரைச் சேர்ந்த மேலும் 33 பேர் சேர்ந்தனர். தற்போது, பீஜிங்கில் 100 பெருஞ் செல்வந்தர்கள் உள்ளதாக பி.பி.சி செய்தி நிறுவனம் கூறியது.

அதற்கு அடுத்த நிலையில், 99 பேருடன் நியூயோர்க் நகரம் இடம் பெற்றுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக, நியூயோர்க் நகரமே முதல் இடத்தில் இருந்தது.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவல் விரைவாகக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது, தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சி, பங்குச் சந்தை ஆகியவை அது முதல் இடத்தைப் பெற உதவியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், நியூயோர்க் நகரிலுள்ள செல்வந்தர்களின் மொத்த சொத்து மதிப்பு பீஜிங்கில் உள்ள செல்வந்தர்களின் மதிப்பைவிட 80 பில்லியன் டொலர் அதிகம்.

சீனாவில் மொத்தம் 698 பெரும் பணக்காரர்கள் உள்ளனர். அமெரிக்காவில் அந்த எண்ணிக்கை 724ஆக உள்ளது. 3ஆம் நிலையில், 140 பேருடன் இந்தியா உள்ளது.

கடந்த ஆண்டு, உலகளவில் மேலும் 493 பேர் இந்தப் பட்டியலில் இணைந்ததாக போர்பஸ் தெரிவித்தது.

அப்படியென்றால், ஒவ்வொரு 17 மணி நேரத்திற்கும் சுமார் ஒரு பெருஞ்செல்வந்தர் உருவாகியுள்ளார்.

## அஸ்ட்ராசெனகா தடுப்பூசி:உலக நாடுகளிடையே கவலை



அஸ்ட்ராசெனகா தடுப்பூசிக்கும் இரத்தம் உறைந்து போவதற்கும் தொடர்பிருக்கலாம் என்று கண்டறியப்பட்டிருப்பதால், உலக நாடுகளிடையே கவலை அதிகரித்துள்ளது.

தற்போது அஸ்ட்ராசெனகா தடுப்பூசி போடுவதை அதிகமான நாடுகள் நிறுத்தியுள்ளன அல்லது கட்டுப்படுத்தியுள்ளன. அந்தத் தடுப்பூசிகளை வாங்கும் திட்டத்தை ஆபிரிக்க ஒன்றியம் கைவிட்டுள்ளது.

நோர்வேயும் டென்மார்க்கும் தடுப்பூசிக்கான தற்காலிகத் தடையை நீட்டிக்க முடிவெடுத்துள்ளன.

ஆனால், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் அஸ்ட்ராசெனகா தடுப்பூசியைத் தொடர்ந்து பயன்படுத்தவுள்ளன.

என்றாலும், 55 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ளோருக்கு மட்டுமே தடுப்பூசி போடவிருப்பதாக அவை கூறின.

இளம் வயதினருக்கு அந்த ஊசியால் இரத்தம் உறைந்து போகும் அபாயம் அதிகம் என்பதால் அவ்வாறு முடிவெடுத்திருப்பதாக அந்நாடுகள் கூறின.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டுமே அஸ்ட்ராசெனகா தடுப்பூசி போடவிருப்பதாக ஸ்பெயின் கூறியுள்ளது. தடுப்பு மருந்து திட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து முன்னிலையில் இருக்கும் பிரிட்டனும் அஸ்ட்ராசெனகா தொடர்பான தனது வழிகாட்டலில் கடந்த புதனன்று மாற்றத்தை கொண்டுவந்தது. அதன்படி 18 மற்றும் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு மாற்று தடுப்பு மருந்தை பயன்படுத்த அது பரிந்துரைத்துள்ளது. சுவீடன் மற்றும் பின்லாந்து 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாத்திரம் அந்த மருந்தை பயன்படுத்த முடிவெடுத்துள்ளது.

அஸ்ட்ராசெனகா தடுப்பூசியால் 'இரத்த உறைவு' பக்க விளைவு மிக அரிதாக ஏற்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவ ஒழுங்குமுறை கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பக்கவிளைவுகளைவிட நன்மைகளே அதிகம் என்று 86 சம்பவங்களை உள்ளடக்கிய ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளதாக ஐரோப்பிய மருத்துவ முகமை கூறியது. ஆய்வில் மொத்தம் 25 மில்லியன் தடுப்பூசிகளுக்கான தரவுகள் ஆராயப்பட்டுள்ளன.

ஆபத்தான அம்சங்கள் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பெரும்பாலான இரத்த உறைவு சம்பவங்களில் அறுபது வயதுக்குக் கீழ் உள்ள பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மெக்சிகோ: சவப்பெட்டியில் இருந்து பிரசாரத்தை ஆரம்பித்த வேட்பாளர்



மெக்சிகோவில் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் சவப்பெட்டியிலிருந்து தமது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று, குற்றச்செயல் கும்பல்களின் வன்முறை ஆகியவற்றால் அந்நாட்டில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததை எடுத்துக்காட்டும் வகையில் அவர் அவ்வாறு செய்தார்.

தங்க சவப்பெட்டி ஒன்றில் கார்லோஸ் மயோர்கா பிரசாரக் கூட்டத்திற்கு வந்தார். அரசியல்வாதிகளின் பொடுபோக்கால் மக்கள் மடிவதாக எடுத்துக்கூறுவது தமது நோக்கம் என்றார் அவர்.

வன்முறை, கொரோனா தொற்று ஆகியவை குறித்து அரசியல்வாதிகள் மௌனமாக இருந்துள்ளதாக அவர் கூறினார். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் என்னை உயிருடன் புதையுங்கள் என்று ஆதரவாளர்கள் முன் அவர் கூறினார்.

வைரஸ் தொற்றால் அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 200,000ஐக் கடந்துள்ளது. மறுபுறம் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் அங்கு 300,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாகமெக்சிகோ அரசாங்க தரவு காட்டுகிறது.

மெக்சிகோவில் வரும் ஜூன் மாதம் இடைக்கால தேர்தல் நடைபெறவுள்ளது. இது அதிக வேட்பாளர்கள் கொல்லபட்ட தேர்தலாகவும் மாறியுள்ளது. இதுவரை இந்தத் தேர்தலில் போட்டியிடும் 16 வேட்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## அமெரிக்காவில் தொடரும் துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள ஒரு தொழிற்துறை வட்டாரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதோடு, ஐவர் காயமுற்றனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் காயமுற்றவர்கள் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி வன்முறையைக் கட்டுக்குள் கொண்டுவர, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நடவடிக்கைகளை அறிவித்த சில மணி நேரங்களுக்குப் பின் இந்த சம்பவம் நடந்துள்ளது.

துப்பாக்கி வன்முறை சம்பவங்கள் ஒரு தொற்றுநோய் போன்றது என்றும், சர்வதேச சங்கடம் என்றும் பைடன் விபரித்துள்ளார்.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. கடந்த வியாழக்கிழமை தெற்குக் கரோலினாவில் முன்னணி மருத்துவர் ஒருவர், அவரது மனைவி மற்றும் அவர்களின் இரு பேரப்பிள்ளைகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிதாரி தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்ட நிலையில் அவரது உடல் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் கொலொராடோவில் உள்ள வணிக வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டதோடு மார்ச் 17 ஆம் திகதி ஜோர்ஜியாவில் மூன்று மசாஜ் நிலையங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் பேர் பலியாகினர்.

## சீன தடுப்பு மருந்து திறன் பற்றி சந்தேகம் வலுக்கிறது



உலக மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் செயல்திறன் கொண்ட தடுப்பு மருந்தை வழங்குவதாக சீன ஜனாதிபதி சி ஜின் பிங் வாக்குறுதி அளித்தபோதும் அந்நாட்டு தடுப்பு மருந்து விநியோகம் குறைந்தது தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேனும் எதிர்பார்த்த அளவில் வெற்றி அளிக்கவில்லை என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தடுப்பு மருந்தின் விநியோகம், செயல்திறன் மற்றும் விலை தொடர்பில் இருக்கும் பல கேள்விகளால் பிராந்தியத்தில் சீனாவின் தடுப்பு மருந்து பற்றி சந்தேகம் வலுத்திருப்பதாக அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்காக ரிச்சர்ட் ஜாவத் ஹெய்டரியன் எழுதியுள்ளார். இந்த நிலை சீனா தடுப்பூசி இராஜதந்திரத்தில் பேரும் சவாலை உருவாக்கியுள்ளது.

புதிய 'சுகாதார பட்டுப்பாதை' ஒன்றுக்காக வெளிநாடுகளுக்கு வழங்க சீனா கடந்த ஆண்டு 18 தடுப்பு மருந்துகளின் சோதனையை ஆரம்பித்தது.

எனினும் சீன மருந்து உற்பத்தியாளர்கள் உற்பத்தியில் தீவிர மந்த நிலையை சந்தித்திருப்பதோடு சினொவக் தடுப்பு மருந்து உற்பத்தி அளவு கடந்த ஜனவரியில் எதிர்பார்த்த அளவில் பாதியையே எட்டிய நிலையில் அதன் உற்பத்தித் திறன் பற்றி கேள்வி அதிகரித்துள்ளது.

சீன மருத்துவ சோதனைக்கான பிரதான மையமாக உள்ள இந்தோனேசியாவுக்கான மருந்து விநியோகத்திலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று மியன்மாருக்கு இந்தியாவில் இருந்து 1.5 மில்லியன் தடுப்பூசி கிடைக்கப்பெற்ற நிலையில் சீனாவில் இருந்து 3,00.000 டோஸ்களே கிடைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## போலி கொரோனா தொற்று: மாணவர்கள் மீது நடவடிக்கை



பாடசாலை செல்வதைத் தவிர்க்க சுவிட்ஸர்லந்தின் பேசல் நகரைச் சேர்ந்த 3 மாணவர்கள், தங்களுக்கு கொவிட்–19 நோய்த் தொற்று இருப்பதாகப் பொய் கூறி மாட்டிக் கொண்டனர்.

தங்களுக்கு வைரஸ் தொற்று இருப்பதாக கொவிட்–19 தடங்களைக் கண்டறியும் செயலியிலிருந்து தகவல் வந்துள்ளதாய் போலிக் குறுஞ்செய்திகளைக் காட்டி அவர்கள் பாடசாலையை ஏமாற்றினர்.

அதனால், அவர்களுடன் படிக்கும் சுமார் 25 மாணவர்கள் 10 நாட்களுக்கு வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கடந்த மாதம், வசந்தகால விடுமுறைக்கு முன் நடந்த அந்த ஏமாற்று வேலையால், சில ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டனர்.

அது சிறு பிள்ளைகளின் குறும்புச் செயல் அல்ல.

கடுமையான சம்பவம் என்று அந்தப் பாடசாலையின் பேச்சாளர் அந்நாட்டின் பிளிக் செய்தித்தாளிடம் கூறினார்.

அந்த மூவர் மீதும் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வர பாடசாலை திட்டமிடுகிறது.

எனினும், அவர்கள் பாடசாலையில் இருந்து நீக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சில அண்டை நாடுகளைப் போலன்றி சுவிட்சர்லாந்தில் இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் பெரும்பாலும் பாடசாலைகள் திறக்கப்பட்டே இருந்துள்ளன. கடந்த ஆண்டு மார்ச் நடுப்பகுதி தொடக்கம் மே நடுப்பகுதி வரை எட்டு வாரங்கள் மாத்திரமே அங்கு பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

## மியன்மார் அரச ஆபரண நிறுவனம் மீது அமெ. தடை



மியன்மார் அரசாங்கத்தின் மியன்மார் ஜெம் என்டர்பிரைஸ் நிறுவனத்துக்கு அமெரிக்க நிதித்துறை தடை விதித்துள்ளது.

ஆபரணக்கற்கள் விற்பனை செய்யும் அந்நிறுவனத்தின் அனைத்துச் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. நிறுவனத்துடனான எல்லாப் பரிவர்த்தனைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த நடவடிக்கை, மியன்மார் இராணுவத்தின் வருவாயைப் பாதித்து, அதன் மீதான நெருக்கடியை அதிகரிக்கும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ட்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.

மியன்மார் மக்கள் மீது வன்முறை தொடர்ந்தால் இன்னும் கூடுதலான தடைகள் விதிக்கப்படும் என அவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மார் ஜெம் என்டர்பிரைஸ் நிறுவனம், நாட்டின் சுரங்கங்களை நிர்வகித்து, அவற்றிலிருந்து கிடைக்கும் ஆபரணக் கற்களைச் சந்தைப்படுத்தி வருகிறது.

மியன்மாரில் பெப்ரவரி முதலாம் திகதி நடத்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர், அந்நாட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் கூறப்படும் வேறு 3 ஆபரணக்கற்கள் நிறுவனங்களுக்கு அமெரிக்கா ஏற்கனவே தடை விதித்தது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சிக்கு பின்னர் அங்கு தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 600க்கும் அதிகமான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 10 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
06முதல் 11வரை
சுபஹ் - 04.50
ளுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் மாசி 20
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி







மாலி இராச்சியத்தின் அமைதிகாக்கும் பணிகளுக்காக புறப்பட்டு செல்லவுள்ள படையினரின் மூன்றாவது குழுவின் விடுகை அணிவகுப்பு மற்றும் தளபதிக்கான இராணுவ மரியாதை செலுத்தும் நிகழ்வு குக்குலேகங்க அமைதிகாக்கும் படைகளுக்கான பயிற்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா கலந்துகொண்டபோது.

### மரக்கறி, பழங்கள் அறுவடையின் பின்னரான பாதிப்பு

# நாட்டின் பொருளாதாரத்துக்கு வருடாந்தம் ரூ. 20 பில். நட்டம்

### அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் விளக்கம்



தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக்கமைய மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடையில் 2,70,000 மெற்றிக் தொன் வீண் விரயமாவதுடன், இதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு சுமார் 20 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் (07) நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) தெரியவந்தது.

இந்த அறிக்கையின் அவதானிப்புக்கமைய இலங்கையில் மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பு 30 தொடக்கம் 40 வீதம் என்பதும் புலப்பட்டது.

இலங்கையில் வயது முதிர்ந்தவர்களில் 73 வீதமானவர்கள் போதியளவு மரக்கறி மற்றும் பழங்களை நுகர்வதில்லையென்றும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகள் மத்தியிலான போஷாக்கின்மை மட்டம் 21 வீதமாகக் காணப்படுவதாகவும் இந்த அறிக்கையில் வெளிப்பட்டது.

ஒட்டுமொத்த விவசாயத் துறையையும் உள்ளடக்கும் வகையில் விவசாய கொள்கையொன்றுக்கான குறைபாடு குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய விவசாயக் கொள்கை தொடர்பான இறுதி வரைபு 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ளபோதும் இது இன்னமும் வரைபாகவே காணப்படுகின்றமை தொடர்பிலும், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சந்தையை உள்ளடக்கிய விவசாயக் கொள்கையொன்றுக்கான தேவை காணப்படுவது குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பை குறைப்பது மற்றும் நியாயமான விலைக்கு அவற்றை விற்பனை செய்வதில் அரசாங்க நிறுவனங்களின் தலையீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்று அறிக்கை அரசாங்கக் கணக்குகள் குழுவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

06

### தோட்டத் தொழிலாளர் எதிர் நோக்கும் பிரச்சினை;

# மேலதிக நிறை கொடுப்பனவு வழங்க மறுக்கும் கம்பனிகள்

### தொழில் திணைக்களத்தில் 12இல் பேச்சுவார்த்தை

பெருந்தோட்டங்களில் தேயிலை கொழுந்துக்கும் இறப்பருக்கும் மேலதிக நிறைக் கொடுப்பனவை வழங்க தோட்ட நிர்வாகங்கள் மறுத்ததையடுத்து இதற்கான ஒரு காத்திரமான தீர்வை ஏற்படுத்த எதிர்வரும் 12ஆம் திகதி பகல் 01.00 மணிக்கு தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது,

இ.தொ.கா. உபதலைவரும் சட்டத்தரணியுமான கா. மாரிமுத்து இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேலதிக நிறைக் கொடுப்பனவை வழங்க மறுத்த தோட்ட நிர்வாகங்களின் போக்கை ஆட்சேபித்து தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையையிட்டு உடனடி பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கம்பனிகளுக்கு

06

# இலங்கை வெளிநாட்டுச் சேவையில் (SLFS) 40 பேரை இணைக்க முடிவு

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

இலங்கை வெளிநாட்டுச் சேவையில் (எஸ்.எல்.எஃப்.எஸ்) இணைவதற்குரிய 40 தகுதியானவர்களை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான 2021 ஏப்ரல் 09ஆம் திகதிய இல. 2,223 வர்த்தமானி அறிவித்தலை www.documents.gov.lk/files/gz/2021/4/20210409(IIIA)E.pdf என்ற இணையத் தளத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை வெளிநாட்டுச் சேவை அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு அதிகாரமுடைய பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வகுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கமைய, பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் சில வருடங்களுக்கு ஒரு முறை

06

# மணியின் கைது நம்மவர்கள் சிலரை திருப்தியடைய வைத்துள்ளது

### தமிழ் மகா ஜனங்கள் மீது மனோ கண்டனம்



யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடுமையாகக் கண்டிக்கின்றதென அந்தக் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமைக்கு அரசைக் கடுமையாக விமர்சிக்க முன்னர், தமிழ் மகாஜனம், தமது முகத்தை நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொள்ள வேண்டுகின்றேன்.

இந்தக் கைது அரசை மட்டுமல்ல, நம்மவர்களையும் திருப்தியடையச் செய்திருக்கின்றதென நான் அறிகின்றேன். கோபத்துடனும், மனவருத்தத்துடனும் ஒருசேர இதை இப்போது ஒரு தமிழ் இலங்கையனாகக் கூறுகின்றேன்"

"மணிவண்ணனின் கைதுக்குப் பதில் அவர் மீது குற்றஞ்சாட்டி, எழுத்து மூல விளக்கம் கோரும் சட்டபூர்வ

06

# கிழக்கு ஆளுநர் – மட்டு முதல்வர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### சாணக்கியனின் கேள்விக்கு அமைச்சர் ஜனக பதில்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கிழக்கு மாகாண ஆளுநருக்கும் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வருக்குமிடையிலான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் கூற்றொன்றை முன்வைத்தார்.

''மட்டக்களப்பு மாநகரசபை முதல்வருக்கும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளருக்குமிடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. மாநகர முதல்வரின் நடவடிக்கைகளை ஆணையாளர் எதிர்க்கிறார். இந்தப்பிரச்சினையால் மாநகர சபை முதல்வர்

06

# சட்டத்தை மீறுவோர் மீது தராதரம் பார்க்கப்படமாட்டாது

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் பொருட்கள் மூலம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால், அதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக தலையீடு செய்யும். பொது மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

சட்டத்தை மீறுவோர் எவராக இரந்தாலும் அவர்கள் மீது தராதரம் பாராமல் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ச.தொ.ச ஊடாக மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ச.தொ.ச. வாகனங்களில் குண்டுகள் கடத்தலா?

### களங்கத்தை துடைக்க வேண்டும்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ச.தொ.ச நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்களில் குண்டுகள் கடத்தப்பட்டதாக ஆளும் தரப்பு அமைச்சர் ஒருவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொண்டு ச.தொ.ச நிறுவனத்தின் மீதான களங்கத்தை துடைக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த விசேட கூற்றைத் தொடர்ந்தே ரிஷாட் பதியுதீன் அவரிடம் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

அமைச்சர் பந்துல குணவர்தன, சதொசவின் நற்பெயரை பாதுகாக்க வேண்டுமென கூறியுள்ளார். அதனை வரவேற்கிறோம். கொவிட்19 தொற்று தொடங்கியது முதல் மக்களுக்கு பாரிய சேவை செய்துவரும் நிறுவனமாக சதொச உள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், சதொச நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஆளும் தரப்பு அமைச்சர் ஒருவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு ஒன்றுள்ளது.

06

# மணிவண்ணன் கைது பாஸ்கரா கவலை



யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனினால் புதிதாக உருவாக்கப்பட்ட புதிய அணியின் சீருடையை விடுதலைப் புலிகளின் சீருடையுடன் இக்காலத்தில் ஒப்பிட்டுப்பேசி அவரை கைது செய்வது ஒரு தசாப்த காலத்துக்குமுன் விடுதலைப்புலிகளின் அழிவுடன் இன்றைய காலத்தில் மக்களால் மறக்கப்பட்ட, இல்லையேல்

06

### கருத்து சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்

# இராஜாங்க அமைச்சர் மீது சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சாணக்கியன் எம்பி சபையில் கோரிக்கை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



மக்கள் பிரதிநிதியான எனது கருத்து சுதந்திரத்துக்கு பாராளுமன்றத்தில் அச்சுறுத்தல் விடுத்துள்ள இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மீது சபாநாயகர் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன் வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 7 ஆம் திகதி நான் இந்த சபையில் ஆற்றிய உரை தொடர்பில் 8 ஆம் திகதி தனது கருத்தை முன்வைத்த இராஜாங்க அமைச்சரான செஹான் சேமசிங்க, என்னை உடனடியாக குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்ய வேண்டுமென தெரிவித்துள்ளார். இது மக்களின் பிரதிநிதியான எனது பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயலாகவுள்ளது.

இராஜாங்க அமைச்சரான செஹான் சேமசிங்க இப்பாராளுமன்றத்தை மூன்றாவது தடவையாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். அவர் முதலில் பாராளுமன்ற கலாசாரத்தை கற்றுக்கொள்ள வேண்டும். நான் கூறிய கருத்தொன்று தொடர்பில் அவர் குற்றப்புலனாய்வு பிரிவு என்னை விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி அச்சுறுத்தல் விடுகின்றார்.எனது உரை தொடர்பில் அவர்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 151.64 | 156.73 |
| கனடியன் டொலர் | 157.71 | 163.10 |
| யூரோ | 235.93 | 243.11 |
| ஜப்பான் யென் | 1.8217 | 1.8718 |
| சிங்கப்பூர் டொலர் | 147.97 | 152.71 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 273.34 | 280.73 |
| சுவிஸ் பிராங்க் | 213.83 | 221.53 |
| அமெரிக்க டொலர் | 199.04 | 203.59 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 530.17 | கட்டார் ரியால் | 54.88 |
| குவைத் டினார் | 662.53 | சவூதி ரியால் | 53.28 |
| ஓமான் ரியால் | 519.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.41 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 28ம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 27

## குறள் தரும் சிந்தனை



நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு

*தன்னில் வாழும்அறிஞரைப் போற்றாமல்,
இந்த நில உலகில்நெடும்புகழ் பெற்று
வாழந்தவரையே தேவர் உலகம் பேணும்.*

# தவறான உணவுகளுக்கு மக்களை அடிமையாக்கும் மாபியாக்கள்!

அன்றாடம் பயன்படுத்துகின்ற உணவுப் பொருட்களின் தரம் தொடர்பாக இப்போதெல்லாம் கூடுதல் கவனமெடுக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். இன்றைய உணவுப் பொருட்கள் பலவற்றில் மறைந்திருக்கின்ற ஆபத்து தொடர்பாக மக்கள் தங்களது அவநம்பிக்கைகளை பொதுவெளியில் சமூக ஊடகங்கள் வாயிலாக பகிர்ந்து கொள்வதைக் காண்கின்றோம்.

வெகுஜன ஊடகங்கள் அடிக்கடி இது பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. தரமற்றதும், ஆபத்தானதுமான உணவுப் பொருட்கள் அதிகாரிகளின் சோதனையின் போது அகப்பட்டுக் கொள்கின்ற செய்திகளும் ஊடகங்களில் அடிக்கடி செய்திகளாக வருகின்றன. ஆனால் அந்தக் குற்றங்கள் தொடர்பாக ஆதி முதல் அந்தம் வரை விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றங்களில் சம்பந்தப்பட்டோருக்கு சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட்டாலேயே மக்கள் நம்பிக்கையும் நிம்மதியும் கொள்ள முடியும்.

விசாரணைகள் தாமதம் அடைவதோ இல்லையேல் அவை அரைகுறையில் கைவிடப்படுவதோ பயனைத் தந்துவிடப் போவதில்லை. தண்டனை மீதான அச்சம், அலட்சியம் குற்றவாளிகள் மத்தியில் இருக்குமானால் குற்றங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்குமென்பது தான் உண்மை.

நாட்டை தற்போது பரபரப்பாக்கியுள்ள செய்தி தேங்காய் எண்ணெய் தொடர்பானதாகும். நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் நச்சு இரசாயனப் பதார்த்தம் கலந்துள்ளதென்பது இரண்டாவது தடவை பகுப்பாய்வுப் பரிசோதனையின் போதும் உறுதி செய்யப்பட்டு விட்டது. அந்த நச்சுப் பொருளானது மனிதருக்கு புற்றுநோய் போன்ற பேரபாயத்தை ஏற்படுத்தக் கூடியதென்று எமது வைத்திய நிபுணர்கள் உறுதியாகச் சொல்கின்றார்கள்.

அதேசமயம் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அந்த தேங்காய் எண்ணெய் இன்னுமே விநியோகத்துக்காக விடுவிக்கப்படவில்லையென்ற நிம்மதி தரும் செய்தியும் வந்துள்ளது. ஆனால் மறுபுறத்தில் அந்த தேங்காய் எண்ணெய் சந்தைக்குச் சென்று விட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன. ஊர்ஜிதப்படுத்தப்படாத அச்செய்தியை நம்பி விட முடியாது.

தேங்காய் எண்ணெய் விவகாரத்தை வைத்துக் கொண்டு அரசாங்கத்தின் எதிரணிகள் அரசியல் பிழைப்பு நடத்தத் தொடங்கியிருப்பதனால் வதந்திகளை நம்பலாகாது. ஆனாலும் இந்த விவகாரம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு உண்டு. உறுதியான விளக்கம் இல்லாது போனால் மக்கள் வீணான அச்சத்துக்கு உள்ளாகக் கூடும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கையில், உணவுப் பொருட்களின் கட்டுப்பாடற்ற இறக்குமதியினால் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் தொடர்பாக சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இப்போது உள்ளோம். உணவுப் பொருட்களின் இறக்குமதி தொடர்பாக கண்டிப்பான கொள்கையை வகுக்க வேண்டிய அவசியம் தற்போது உருவாகியுள்ளது. இல்லாது போனால் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெயைப் போன்று வேறு பல ஆபத்தான உணவுப் பொருட்களும் எமது நாட்டுக்குள் வந்து சேர்ந்து விடக் கூடும்.

இலங்கையானது நிலவளம், நீர்வளம் கொண்ட அழகிய தேசம் ஆகும். விவசாயத்துக்கு ஏதுவான அத்தனை வளங்களையும் கொண்ட சிறப்பானதொரு தேசம் எமது நாடு. அதனால்தான் பண்டைக் காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு மிக்க நாடாக இலங்கை விளங்கியது. சுதேச முறையிலான விவசாயச் செய்கை மற்றும் சுதேச உணவுப் பழக்கவழக்கங்கள் காரணமாக எமது முன்னோர் தேகாரோக்கியம் உள்ளவர்களாக திகழ்ந்தனர். இன்று மக்கள் மத்தியில் பரவியுள்ள தொற்றாநோய்களெல்லாம் அன்று இருந்ததில்லை.

உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனங்களும், உணவுப் பொருட்களின் அநாவசிய இறக்குமதியும் படிப்படியாக அதிகரித்ததும் மக்கள் மத்தியில் ஆபத்தான வியாதிகளும் உருவாகத் தொடங்கின. புதிது புதிதான உணவுப் பழக்கங்களுக்கு மக்கள் அடிமையாகிப் போனார்கள். அந்த உணவுப் பழக்கங்களை மக்களுக்கு அடிமையாக்கும் கவர்ச்சியான விளம்பரங்கள் மறுபுறத்தில் பெருகி விட்டதனால் மக்கள் நச்சு இரசாயனங்களுக்கு ஆட்பட்டுப் போனார்கள்.

மக்கள் அவற்றிலிருந்து மீள்வதென்பது இலகுவான காரியமல்ல. எமது சிறுகுழந்தைகளும் கூட அவ்வாறான நவீன உணவுகளையே விரும்புகின்றன. பெற்றோரும் வாங்கிக் கொடுக்கின்றார்கள். உணவின் தரம் மற்றும் போசணை குறித்து கரிசனை கொள்ளாமல் சுவைக்காக மட்டுமே உணவுண்ணும் தவறான கலாசாரம் மோசமாகப் பெருகி விட்டது.

இதனால்தான் கட்டுப்பாடற்ற முறையில் பலவிதமான உணவுப் பொருட்களும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மக்களும் அவற்றை உட்கொள்கின்றார்கள். புதிது புதிதாக கொடிய வியாதிகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. வர்த்தக மாபியாக்கள் பெரும் செல்வந்தர்களாக வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டுக்குள் விளைகின்ற சாதாரண உணவுப் பொருட்களையே இறக்குமதி செய்கின்ற அபத்தமாக காரியமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவற்றின் சேர்மானங்கள் குறித்து மக்கள் சிந்திப்பதாக இல்லை.

இதற்கெல்லாம் ஒரேயொரு தீர்வுதான் உள்ளது. அநாவசிய இறக்குமதியானது நிறுத்தப்பட வேண்டும். அதேசமயம் அவசியமான உணவுகளின் உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். மக்களின் ஆரோக்கியத்துக்கு தீங்கான எந்தவொரு உணவும் நாட்டுக்குள் வந்து விடாதபடி கண்காணிப்பு செலுத்த வேண்டியதும் அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# ஹொரணை பொதுச் சந்தை மக்கள் பாவனைக்கு கையளிப்பு

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட ஹொரணை பொதுச் சந்தையானது நகர அபிவிருத்தி, கடற்கரையோர பாதுகாப்பு, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் பொது சுகாதாரத் துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா மற்றும் தேசிய மரபுரிமைகள், பாரம்பரிய கலைகள், கிராமிய கலைகள் அபிவிருத்தி நடவடிகைககள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோரினால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி செயலாளராக கடமையாற்றிய காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்ட நாட்டின் சந்தைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு அதன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன.

2015க்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக, இந்த பொதுச் சந்தையை மக்களுக்கு கைளிக்க முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தாமதமானது. அந்தத் தாமதத்தால், இந்த பொதுச் சந்தை பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை. ஆனால் சந்தையின்; இருபுறமும் வர்த்தகம் தொடர்ந்து செய்யப்பட்டது.

ஹொரணையில் இந்த புதிய பொதுச் சந்தையை நிர்மாணிக்க 239.1 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பொது திறைசேரியின் செலவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட ஹொரணை பொதுச் சந்தை, ஹொரணை நகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஹொரணை பொதுச் சந்தை வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் என்றும் தினமும் 5,000 பேர் சந்தைக்கு வருகை தருவார்கள் என்றும் ஹொரணை நகர சபை தெரிவித்துள்ளது.

இந்த புதிய சந்தையில் 492 விற்பனை நிலையங்கள் உள்ளன. அதற்கமைய 56 நிரந்தரக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மிகுதி 432 இல் 04 மீன் கடைகளும் உள்ளடங்குகின்றன. சந்தைத் தொகுதியில் சுகாதார வசதிகளும் கட்டப்பட்டுள்ளன, மேலும் வாகன தரிப்பிடமொன்றையும் கொண்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா இந்த கையளிப்பு நிகழ்வில் உரையாற்றுகையில் "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதனையும் நன்கு திட்டமிட்டே செயற்படுத்துபவர். 'சுபீட்சத்தின் நோக்கு அதன் ஆரம்ப கட்டமாகும். இதன் கீழ் சமூகம் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டது.





முதலாவது செயல்திறன் குடிமகனாக, இரண்டாவது மகிழ்ச்சியான குடும்பமாக, மூன்றாவது நல்லொழுக்க சமுதாயமாகவும், நான்காவது வளமான நாடாகவும். இன்று நீங்கள் காண்பதும் அனுபவிப்பதும் சுபீட்சத்தின் நோக்கு அடிக்கோடிட்டுக் காட்டும் அந்த நான்கு முக்கிய நோக்கங்களின் முடிவுகளின் தொகுப்பாகும். இவை அனைத்தும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தாக்கல் செய்யப்பட்டன. அந்த நோக்கங்களை அடைவதற்கு மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கான உள்கட்டமைப்பை வழங்குவது எனது அமைச்சின் பொறுப்பாகும்.

இது சம்பந்தமாக,நாட்டில் 1000 க்கும் மேற்பட்ட நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பு எங்களுக்கு உள்ளது" என்று கூறினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாண பணிப்பாளர் என்.ஏ.எஸ்.என். நிஸ்ஸங்க உரையாற்றுகையில் 'நிலம் என்பது ஒரு நகரத்தின் இதயம். நிலம் இல்லை என்றால், அங்கு நகரம் இல்லை. நிலம் என்பது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். நிலமின்றி மக்கள் வாழ முடியாது. நிலம் கிராமங்கள் மற்றும் நகரங்களின் பொருளாதாரத்தை இயக்குகிறது. நகர அபிவிருத்தி அதிகாரசபை அந்த மதிப்பை அடையாளம் கண்டுள்ளது. அதன் மூலம் வளர்ச்சி பொருளாதாரத்தை உருவாக்க முடியும்" என்றார்.

4.53 சதுர கிலோமீட்டர் பரப்பளவும், 2744 குடும்பங்கள் மற்றும் 11,814 மக்கள் தொகை கொண்ட ஹொரணை நகரத்திற்கு தினமும் சுமார் 100,000 மக்கள் வருகை தருவதாக ஹொரணை நகர சபை தலைவர் விதானனே சிரிசோம தெரிவித்தார்.

'இது ஒரு சிறிய நகரம். சிறிய ஆனால் வசதிகள் நிறைந்தவை. முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க அத்தகைய நகரத்தை தற்போதைய நிலைக்கு கொண்டு வர அடிக்கல் நாட்டினார். இவரது மகன் விதுர விக்ரமநாயக்க இராஜாங்க அமைச்சராக உள்ளார். இந்த பயணத்தை அவர் தனது தந்தை விட்டுச் சென்ற இடத்திலிருந்து இறுதிவரை மக்களின் நலனுக்காக தொடருவார் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது' என்றும் அவர் தெரிவித்தார்.

ஹொரணை பொதுச் சந்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் வேளையில் வேவெல இசிபத்தநாரமய தலைமை விகாராதிபதி தம்மரங்சி தேரர், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி நாலக்க கொடஹேவா, விதுர விக்கிரமநாயக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் மஹிந்த வித்தானஆராச்சி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மாகாண பணிப்பாளர் என்.ஏ.எஸ்.என். நிஸ்ஸங்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**டப்ளியூ.பிரசாத் மஞ்சு...**
**(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)**

# ஐந்தரை வருட மக்கள் பணியில் நிந்தவூர் மத்தியஸ்த சபை

நாடெங்கும் பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. 1988/72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் கீழ், நீதி அமைச்சின் கீழான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகளை ஸ்தாபித்து அவை மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகின்றன.

தற்சமயம் நாடளாவிய ரீதியில் 329 மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு மக்களுக்கு சேவையாற்றி வருவதுடன் நீதிமன்றம், பொலிஸ், நிதி நிறுவனங்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் இந்த சபைகளில் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றன.

3 வருட சேவைக் காலத்தைக் கொண்ட மத்தியஸ்த சபைகள் நாட்டில் வெற்றிகரமாக செயற்பட்டு மக்கள் அபிமானத்தையும் வென்று திருப்திகரமான சேவைகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச சபைப் பிரிவில் இயங்கி வரும் நான்காவது மத்தியஸ்த சபை தமது ஐந்தரை வருட பதவிக் காலத்தை சிறப்புடன் நிறைவு செய்துள்ளது. இந்த சபை பதவிக் காலம் முடிவுற்றும் தொடர்ச்சியான சேவையை முன்னெடுத்து வருவதுடன் கடந்த மார்ச் மாதத்துடன், ஐந்தரை வருடங்களை நிறைவு செய்துள்ளது.

ஓய்வுபெற்ற கணித ஆசிரியையான பல்கீஸ் அப்துல் மஜீத்தை தவிசாளராகவும் ஓய்வுநிலை அதிபர் யூ.எல்.ஏ.முபாரக்கை உப தவிசாளராகவும் கொண்டு 27 மஸ்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் 15.09.2015 அன்று இந்த நான்காவது மத்தியஸ்த சபை ஸ்தாபிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. இதனையடுத்து சுமார் 8 மாதங்களின் பின்னர் மேலும் 4 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு 31 பேர் கொண்ட மத்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்தது.

எனினும் தற்சமயம் 29 குழாம் உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்து வருகின்றது. ஆரம்பத்தில் தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத் தானொரு பெண்ணாகவிருப்பதால் சபைக்கு தலைமை தாங்கவிருப்பது குறித்து சற்றுத் தயக்கமும் சலனமும் கொண்டிருந்த போதிலும், உப தவிசாளர் யூ.எல்.ஏ.முபாரக் மற்றும் சக உறுப்பினர்கள் கொடுத்த ஒன்றுபட்ட ஆதரவும் ஊக்கமும் அவரது சிறந்த தலைமைத்துவ செயற்பாட்டுத் திறனை கடந்த ஐந்தரை வருட காலமும் மிளிரச் செய்து மக்களின் பாராட்டையும் பெறச் செய்துள்ளது.

மேலும் இச்சபையின் சிறந்த செயற்பாட்டுக்கும் வினைத்திறனான சேவைக்கும் அடிக்கடி ஆலோசனைகளையும் ஊக்குவிப்பையும் வழங்கிவரும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் மத்தியஸ்த பயிற்றுநர் எம்.ஐ.எம்.ஆஸாத்தையும் இங்க குறிப்பிட வேண்டும்.

இச்சபை தமது செயற்பாட்டைத் தொடர ஆரம்பித்த போது 3 ஆவது சபையிடமிருந்து 34 பிணக்குகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டன.

இதனைச் சேர்த்து கடந்த ஐந்தரை வருடங்களில் (2020 டிசம்பர் வரை) கிடைத்த 1432 பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டன.

இவற்றில் குறித்த ஐந்தரை வருட பதவிக் காலத்திலும், கலந்துரையாடலில் 468 பிணக்குகளுக்கு இணக்கப்பாட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. இச்சபையில் மேலும் 5 பெண் உறுப்பினர்களும் அங்கம் வகித்தமையும் இந்து ஆலயத் தலைவர் ஒருவரும் உட்பட்டிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

மேலும் தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத் இக்காலத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாக சபை எதிர்நோக்கிய பௌதிகவள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் எட்டப்பட்டன. அரும்பெரும் சேவையாற்றும் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கென நிரந்தரக் கட்டடமொன்று இல்லாமை மிக முக்கிய பிரச்சினையாக நீடித்து வருகின்றது. எதிர்காலத்திலாவது இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும்.

சபை அமர்வுகளின்போது செயலாளராக ஏ.எம்.எம்.மன்சூர் செயலாற்றி வருகின்றார்.

## கௌரவிப்பு, மலர் வெளியீடு நிகழ்வுகள் இன்று



தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத்

இந்த வகையில் மக்கள் சேவையாற்றும் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு மகுடம் சூட்டும் வகையில் பெருவிழா ஒன்று இன்று (10.04.2021) நிந்தவூரில் நடைபெறுகின்றது.'மகுடம் சூட்டும் மத்தியஸ்தம்' எனும் தலைப்பில் மத்தியஸ்தர்கள் கௌரவிப்பும், சிறப்பு மலர் வெளியீடும் இதன் போது இடம்பெறவிருக்கின்றன.

நிந்தவூர் 'பெஸ்ற் ஒப்பங்' சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில், நிந்தவூர் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் விழா நடைபெறவுள்ளது.நிந்தவூர் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸார் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி ஏ.எம். லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

மேலும் விழாவில் 'மத்தியஸ்தம்' எனும் பெயரில் சிறப்பு மலர் வெளியிடப்படுவதுடன், நிந்தவூர் மத்தியஸ்த சபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.




**செல்லையா பேரின்பராசா...**
**(துறைநீலாவணை நிருபர்)**

# சாரதிகளிடம் பொறுமை, ஒழுக்கம் இல்லாவிடின் பயன் எதுவுமில்லை

## வீதிவிபத்துகள் அதிகரிப்பதற்கான காரணங்களை விளக்குகின்றார் பேராசிரியர் அமல் குமாரகே

'நாட்டில் வாகன விபத்துகள் அதிகரித்து விட்டன. வீதிகளின் தரமும் வாகன விபத்துகளுக்கு பிரதான காரணமாக உள்ளது' என்கிறார் சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரகே. விபத்துகளை தடுக்க வேண்டியது சமூகப் பொறுப்பாகும் என்றும் அவர் கூறுகின்றார்.

**கேள்வி: தரமற்ற வீதிகள் மற்றும் வீதிகளிலுள்ள குறைபாடுகள் விபத்துகள் அதிகமாக ஏற்பட காரணமாக அமைகின்றன என அநேகமானோர் கூறுகிறார்கள். இதுபற்றிய உங்களது கருத்தென்ன?**

**பதில்:** இன்று வீதிகள் மாத்திரமல்ல வீதிகளை பாவிக்கும் சாரதிகளிடமும் தரமில்லை. அனுமதிப் பத்திரம் வழங்குவதிலும் தரமில்லை. பாதையை பயன்படுத்தும் பாதசாரிகளிடமும் தரமில்லை. ஆனாலும் வீதி விபத்துகள் இவ்வளவாவது கட்டுப்பாட்டுக்குள் உள்ளதை எண்ணி மகிழ்ச்சி அடைய வேண்டும். பாதையை திருத்தும் போது காபட் போடுவதைப் பற்றி மாத்திரமே பார்க்கிறார்கள். அதன் பின்னர் அதனை பராமரிப்பது எவ்வாறு என சிந்திப்பதில்லை. பெருந்தெருக்கள் திணைக்களம், நீர்வடிகாலமைப்பு திணைக்களம்,டெலிகொம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்த தொடர்புகள் இல்லை. அதனால் திருத்தப்பட்ட பாதைகளும் விரைவில் பழுதடைகின்றன. இவ்வாறு பாதைகள் பழுதடைந்து காணப்படுவதும் விபத்துகளுக்கு காரணமாகும். நான் இங்கு குறிப்பிட்டது ஒரு விடயம் பற்றியாகும். சாரதிகள் வாகனங்களை செலுத்தினாலும் அவர்களிடம் இருக்க வேண்டிய அடிப்படைக் குணமான பொறுமையில்லை. சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றாலும் சாரதிகளிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால் அதனால் பயனில்லை. ஏதேனும் சம்பவம் இடம்பெற்றவுடன் அது பற்றி இரண்டு வாரங்களுக்கு கவனம் செலுத்துவார்கள். பின்னர் பழைய நிலைமைக்கு திரும்பி விடுவார்கள். அதனால்தான் விபத்துகள் ஏறபடுகின்றன.

**கேள்வி: வீதிகளின் தரத்தை நீண்ட காலத்துக்கு பேணுவது எவ்வாறு?**

**பதில்:** எமது நாட்டில் இல்லாவிட்டாலும் வெளிநாடுகளில் வீதிகளின் தரம் மற்றும் குறைபாடுகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்வார்கள். அவ்வாறு வெளிநாடுகளில் அரச மற்றும் தனியார் துறைகளில் வருடந்தோறும் தணிக்கை மேற்கொள்வார்கள் அல்லது ஆய்வுகளை மேற்கொள்வார்கள். நாமும் அதனை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் பல குறைபாடுகளை நாம் கண்டறியலாம்.

**கேள்வி: வீதிகளின் தரம் மற்றும் ஒழுங்கை ஏற்படுத்துவது தொடர்பில் அரசுக்கு பெரும் பொறுப்பு உண்டல்லவா?**

**பதில்:** ஏன் நீங்கள் அரசுக்கு மாத்திரம் பொறுப்பு உண்டு எனக் கூறுகிறீர்கள்? அந்த எண்ணம் தவறானது. அரசக்கு மாத்திரம் உத்தியோகபூர்வ பொறுப்பை ஒப்படைத்து விட்டு நாம் பொறுப்பற்று இருக்க வேண்டுமா? சமூகமாக பெரும் பொறுப்புண்டு. ஒரு நாடாக இணையுங்கள். எமது பழக்கம் என்னவென்றால் பசறை போன்ற சம்பவம் இடம்பெற்றவுடன் உயிர்ப்புடன் அதுபற்றி பேசுவோம். பின்னர் அதனை சில காலத்தில் மறந்து விடுவோம். அது ஒரு போதும் நல்லதல்ல. மக்களிடையே செல்வாக்கு செலுத்தும் ஊடகத்துக்கும் பொறுப்பும் கடமையும் உள்ளன. சரியான முறையில் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். உதாரணமாக கொரோனா தொற்று நிலைமையில் மக்களுக்கு அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஊடகங்களால் முடிந்தது. வாகனம் ஓட்டுதல் மற்றும் பெருந்தெருக்கள் பாவனை பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். நாம் எமது கடமைகளை சரிவர நிறைவேற்றாமல் மற்றவர் மீது குற்றம் சுமத்துவதன் மூலம் எமது கடமைகளிலிருந்து தவறுகிறோம்.

**கேள்வி: விபத்துகள் அதிகரிக்கவும், விபத்துகளால் அதிகளவு பாதிப்பு ஏற்படவும் பாதுகாப்பற்ற வீதிகளே காரணமாக அமைகின்றன. இந்நிலைமை குறித்து உங்கள் கருத்தை தெளிவுபடுத்த முடியுமா?**



**பதில்:** எமது நாட்டில் பாதுகாப்பான போக்குவரத்து முறையாக பொதுப் போக்குவரத்து சேவை அமைந்துள்ளது. பசறை போன்ற சம்பவங்கள் சில வேளைகளில் இடம்பெறலாம். ஆனால் எப்போதும் இடம்பெறுவதில்லை. ஆனால் மோட்டார் சைக்கிள் விபத்துகளால் நாளொன்றுக்கு இரண்டு மூன்று பேர் மரணமடைகிறார்கள். அவ்வாறே முச்சக்கர வண்டிகளும் விபத்துக்கான காரணமாக அமைகின்றன. எமது நாட்டில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமான சாரதிகளின் வாகனங்கள் அவையாகும்.இன்னும் சிலர் குறைந்த பட்சம் 'எயார் பேக்' உள்ள மோட்டார் வண்டிகளைக் கூட பயன்படுத்துவதில்லை. அதனால் பிரயாணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாதுள்ளது. அதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பது எமது நாட்டில் வாகனங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பெருமளவு வரியாகும். அதனால் சாதாரண ஒருவரால் உயர் பாதுகாப்பைக் கொண்ட வாகனங்களை வாங்க முடியாதுள்ளது. அதனால்தான் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை வாங்குகிறார்கள். அதனால் அரசாங்கம் வாகனங்களின் வரியை குறைக்க வேண்டும். அப்போதுதான் பொதுமக்களால் பாதுகாப்பான வாகனங்களை வாங்க முடியும்.



### பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தினாலேயே விபத்துகளும் உயிரிழப்புகளும் நாட்டில் குறையும்

**கேள்வி: தொற்று நோய்களாலும் ஏனைய நோய்களாலும் இறப்பவர்களின் அளவைவிட அதிகமானோர் வீதி விபத்துகளால் இறக்கின்றாரகள். இந்த நிலைமை குறித்த உங்களது ஆய்வுகள் எவை?**

**பதில்:** ஆம்,முப்பது வருட யுத்தத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின. ஆனால் வாகன விபத்துகளால் வருடமொன்றுக்கு மூவாயிரத்துக்கும் அதிகமானோர் மரணமடைகிறார்கள். கடந்த வருடத்தில் பயணத்தடை காரணமாக விபத்துகள் குறைந்திருந்தாலும் தற்போது அதிகரித்து வருகின்றன. அதனால் எதிர்காலத்தில் விபத்துகள் அதிகரிக்க இடமுண்டு. இதனால் பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்த வேண்டும். வாகனத்தில் சொகுசாக பயணம் செய்யும் ஒருவரை நாளையிலிருந்து பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யுமாறு கூறினால் நடக்குமா? அதிகாரிகள் பொதுப் போக்குவரத்தை நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும். பொதுப் போக்குவரத்து சரியாக இருந்தால் மக்கள் ஆபத்தை கைக்கெட்டிய தூரத்தில் வைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் கொழும்புக்கு வரமாட்டார்கள். ரயில் போக்குவரத்தையும் மேம்படுத்த வேண்டும்.

**கேள்வி: வீதிப் பாதுகாப்பு உள்ளிட்ட விதிகள் தொடர்பான அரசின் கொள்கைகள் காலத்துக்குக் காலம் மாற்றமடைகிறன. இந்த நிலைமை தொடர்பாக உங்களது கருத்தை தெளிவுபடுத்த முடியுமா?**

**பதில்:** நிச்சயமாக இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். கவனம் செலுத்துவது என்பது தேர்தலுக்கு தேர்தல் அரசாங்கம் மாறும் போது ஏற்படுகின்ற முறையல்ல. அனைத்துக்கும் பொதுவான தேசிய கொள்கையொன்று பினபற்றப்பட வேண்டும். அது தொடர்பாக துறை சார்ந்த வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும். அவ்வாறு நடந்தால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய திட்டங்களை வகுக்க முடியும்.

**உதித்த குணவர்தன...**
**(தமிழில்: வீ.ஆர்.வயலட்)**

# பழீல் மௌலானா வாழ்வும் பணியும்: நூல் வெளியீடு, நினைவு நிகழ்வு இன்று

மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி றுடானி ஸாஹிர் 'அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா வாழ்வும் பணியும், என்ற தலைப்பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். இந்நூல் வெளியீடும், பழீல் மொலானா பற்றிய நினைவு நிகழ்வும் இன்று (2021.04.10) பிற்பகல் 4.00 மணிக்கு மருதமுனை பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு சட்டத்தரணி எப்.எம்.ஏ.அன்ஸார் மௌலானா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவை உறுப்பினர் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் கலந்து கொண்டு நூலாய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ்,பைசால் காசிம், எஸ்.எம்.எம்.முஸாரப், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செய்யது அலிசாகிர் மௌலானா ஆகியோரும் விஷேட அதிதியாக கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், சிறப்பு அதிதியாக அஷ்ஷெய்க் ஏ.பி.எம்.அஷ்ரப்( நழிமி) கலந்து கொள்வர்.

அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா இலங்கையின் கல்விப் பரப்பில் குறிப்பிடத்தக்கவர். மருதமுனையைச் சேர்ந்த இவர் 1920.12.31ஆம் திகதி மருதமுனையைச் சேர்ந்த மௌலவி செய்யிது மௌலானா ஐதுரூஸ் மௌலானா, ஆயிஷா உம்மா தம்பதியின் புதல்வராக பிறந்தவர். சிறு வயதிலேயே பல ஆற்றல்களைக் கொண்டவராக பலரால் இனங்காணப்பட்டதோடு பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்திலும்,(தற்போது அல் மனார் மத்திய கல்லூரி)பின்னர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் கற்று 1945ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி ஆசிரியராக நியமனம் பெற்று கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் ஆசிரியராக கடமையேற்றார். பின்னர் 1951ஆம் ஆண்டு கல்எலிய அலிக்கார் மகா வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக கடமையேற்றார். பொலநறுவை, கேகாலை, அனுராதபுரம், புத்தளம்,குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கல்விப் பணியாற்றி பலரது பாராட்டைப் பெற்றதோடு ஓய்வு நேரங்களிலும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டியுள்ளார்.

வெளி மாவட்டங்களின் பல கிராமங்களில் கல்விப் பணியாற்றி விட்டு தனது சொந்த ஊரான மருதமுனைக்கு வந்து 1940ஆம் ஆண்டு தொடக்கம் 1943ஆம் ஆண்டு வரை மருதமுனை அல்மனார் மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். சமூக சேவையிலும் ஈடுபட்டு பள்ளிவாசல்களையும், மத்ரசாக்களையும் உருவாக்குவதில் பங்காற்றியுள்ளார்.



1960ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் நடைபெற்ற மீலாத் விழாவில் ஆற்றொழுக்கமாகப் பேசியமைக்காக அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அப்போதைய சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களால் 'அபுல்கலாம்' என்ற(பேச்சின் தந்தை)பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

மருத முனை மஸ்ஜிதுல் கபீர் ஹூம்ஆ பள்ளிவாசலில் கால் நூற்றாண்டு காலமாக மரைக்காயராகவும், நம்பிக்கையாளராகவும் இருந்து சமயப் பணியாற்றியுள்ளார். 1962ஆம் ஆண்டு முதல் 1978ஆம் ஆண்டு வரை சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பணி புரிந்துள்ளார்.

அவரால் தொகுக்கப்பட்ட' அல்குர்ஆன் ஞானமாணிக்கக் கோவை நூல் 1993ஆம் ஆண்டு மருதமுனை ஈஸ்டரன் யூத் விளையாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.மேலும் பத்திரிகைகளிலும் கவிதை,கட்டுரை என்பவற்றை எழுதியதுடன் பல வாழ்த்துப் பாக்களையும் இவர் எழுதியுள்ளார்.

மருதமுனை ஷம்சுல் இல்ம் வித்தியாலயத்தில் 1979.0402ஆம் திகதி தொடக்கம் 1979ஆம் ஆண்டு 1016ஆம் திகதி வரை அதிபராக கடமையாற்றி அங்கிருந்தவாறே ஓய்வு பெற்றார்.

1965ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்எலிய கிராம மாணவர் சமூகத்தால் 'ஆசிரிய மாமணி'என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் அநுராதபுரம் கொட்டியா வெள என்ற கிராமத்தில்'நூராணியா மௌலானா' என்ற பட்டம் சூட்டி வாழ்த்தப்பட்டுள்ளார்.அத்துடன் இவர் கற்பித்த பல பாடசாலைகளிலும் பாராட்டுக்களும்,கௌரவங்களும் வழங்கப்பட்டுள்ளன. நீண்டகாலப் பணியுடன் 'அபுல்கலாம்'ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மொலானா 2013.02.25ஆம் திகதி காலமானார்.

மருதமுனையில் நடந்த முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்(1966) செயற்பாட்டாளர்களில் ஒருவரான மௌலானா 'அறிவுக் கருவூலம் ஆசாரக் கோவை' எனும் ஆய்வுக் கட்டுரையினை இதன் போது சமர்ப்பித்தார்.

தான் பிறந்த மண்ணுக்கு மாத்திரமன்றி நாட்டின் பல பாகங்களுக்கும் தம் அறிவுப்புலத்தை பகிர்ந்தளித்த பழீல் மௌலானா ஒரு வரலாற்றுப் பொக்கிஷம்.

**பி.எம்.எம்.ஏ.காதர்**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**
**ஜெஸ்மி எம்.மூஸா**
**(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)**

# சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை நடத்தும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு செயலமர்வு

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத் துறையிலுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு பயண சேவையை வழங்கும் வாகன சாரதிகளுக்கான ஒருநாள் செயலமர்வு பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் தொழிற்பயிற்சி அதிகார சபையும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த மேற்படி செயலமர்வு சுற்றுலா சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

ஏற்கனவே தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பயிற்சி வழங்கப்பட்ட மேற்படி சாரதிகள் அடையாள அட்டைகளை மிக விரைவாக பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.





இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துரூபன் அனுருத்த பிரதம அதிதியாகவும், அறுகம்பே சுற்றுலா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி. திசாநாயக கௌரவ அதிதியாகவும், அறுகம்பே ஆட்டோ உரிமையாளர் சங்க தலைவர் ஏ.முஸம்மில் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் சாரதிகளுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கைக்கு பல நாடுகளிலுமிருந்து தற்போது படிப்படியாக உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

நாட்டில் கடந்த வருடம் முதல் கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக இலங்கையின் சுற்றுலாத் துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் சுற்றுலாத் துறையை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் வாழ்வாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்த அச்ச நி லைமையிலிந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்துவதே இச்செயலமர்வில் பிரதான நோக்கமாகும்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

## ஏப்ரல் 12 விஷேட அரச விடுமுறை

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை அரச விஷேட விடுமுறை தினமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் பொருளாதாரத்துக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அத்துடன், நுகர்வோருக்கும், விவசாயிகளுக்குமிடையில் பாரிய பிரச்சினையாகக் காணப்படும் இடைத்தரகர்களால் அதிக இலாபம் ஈட்டப்படுவதைத் தடுப்பதற்கும், மரக்கறி மற்றும் பழங்களில் அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இக்குழுவின் உறுப்பினர்கள் கவனம் செலுத்தியிருந்தனர். இலங்கையர்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விளைச்சல் தொடர்பில் விரிவான திட்டம் ஒன்று இன்மையால் விவசாயிகள் தாம் நினைத்த விளைச்சல்களை மேற்கொள்வதால் சில பயிர்கள் மாத்திரம் அதிக விளைச்சல் மேற்கொள்ளப்படுவதாகவும் குழு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒரு தடவை அடுத்த இரு வாரங்களில் மேற்கொள்ளக்கூடிய விளைச்சல்கள் குறித்து முன்னறிவிப்பொன்றை வழங்குவதற்கான நடவடிக்கையொன்றை மேற்கொள்வது விவசாயிகளுக்கு நன்மையளிப்பதாக அமையும் என கோபா குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக, தயாசிறி ஜயசேகர, சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே, லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்சித் பண்டார மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்கு ஆளுநர்... (03ஆம் பக்கத் தொடர்)

சொல்வதை செய்வதா அல்லது ஆணையாளர் சொல்வதை செய்வதா என்று தெரியாமல் ஊழியர்கள் குழம்பிப் போயுள்ளனர். எனவே இது தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பாகிய நாம் வழக்கொன்றை தாக்கல் செய்தோம். அதில் ஆணையாளருக்கு ஜூன் 12 ஆம் திகதி வரை இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநருக்கும் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வருக்கும் இடையிலான "ஈகோ" பிரச்சினையாலேயே இது ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் ஆலோசனைக்குழுக்கூட்டத்திலும் தெரியப்படுத்தி இருந்தேன் . எனவே இந்த பிரச்சினைக்கு நீங்கள் தீர்வு காண வேண்டும்" என்றும் சாணக்கியன் எம்பி கூறினார். சாணக்கியன் எம்.பி.யின் இக் கூற்றுக்கு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் பதிலளிக்கையில் , கிழக்கு மாகாண ஆளுநருக்கும் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வருக்குமிடையிலான "ஈகோ" பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். இப்பிரச்சினையை உடனடியாக தீர்க்குமாறு அமைச்சு செயலருக்கு கூறியுள்ளேன் என்றார்.

## மணிவண்ணன் கைது பாஸ்கரா ... (03ஆம் பக்கத் தொடர்)

மறந்து போன ஒரு செய்தியை மக்களே மறந்து விடாதீர்கள் உங்கள் மனதில் பழைய வரலாற்றை நிறுத்திக் கொள்ளுங்கள் எனச் சொல்லப்படுவது போல் அமைந்துள்ளது. இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவரும் ஊடகச் செயலாளரும் ஜ.ம.மு.கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களின் குழுத் தலைவருமான சி. பாஸ்கரா தெரிவித்தார். இன்றை காலத்திலே சில அரசியல்வாதிகள் இனவாதம் பேசி தமது இருப்பை தக்க வைத்தக் கொள்வது போல் வடக்கு கிழக்கு மக்களுக்கு எவ்விதமானஆயுத கலாச்சாரத்தை பற்றி பேசினாலும் தமிழ் மக்கள் எவ்விதகாரணம் கொண்டும் இக்காலத்திலோ, இனிவரும் காலத்திலோ ஓர் ஆயுத கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையிலோ இல்லையேல் தனிநாட்டுக் கோரிக்கையிலோ மக்கள் இல்லை. அரசியலுக்காக அரசியல்வாதிகள் எதைப் பேசினாலும் மக்களின் மனநிலை மாறப்போவதில்லை. இப்படிப்பட்ட இந்த சூழ்நிலையில் மறந்து போன சில நினைவுகளை மக்களின் மனதில் மீண்டும் நிலைநிறுத்தவது ஏற்புடையதல்ல. இது இக்காலத்தில் மக்களின் மனநிலையை வெல்வதற்கான பொறிமுறையும் அல்ல என அவர் தெரிவித்தார்.

## நியூ டயமன் கப்பல்; உரிமையாளரிடமிருந்து ரூ 3.423 பில். நட்ட ஈடாக அறவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை கடலில் அனர்த்தத்துக்குள்ளான நியூ டயமன் கப்பல் உரிமையாளரிடமிருந்து நட்ட ஈடாக 3.423 பில்லியன் ரூபாவை அறவிடுவதற்குத் தேவையான ஆவணங்கள் சட்ட மாஅதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்கள் தற்போது அந்த நிறுவனத்தின் சட்டத்தரணிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி நிஸாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். மேற்படி கப்பல் தீ அனர்த்தத்துக்குள்ளானபோது இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்றுள்ள சமுத்திரவியல் மாசுக்கான நட்ட ஈடாகவே மேற்படி தொகையை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் நிறுவனத்தின் சட்டத்தரணிகள் ஊடாக நியூ டயமன் நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது. எரிபொருள் ஏற்றி வந்த மேற்படி கப்பல் 2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கைக்கு அருகாமையிலுள்ள கடற்பரப்பில் தீ அனர்த்தத்துக்குள்ளானது. சில நாட்களுக்குப் பின் பெரும்பிரயத்தனத்துக்குப் பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அந்தக் கப்பலிலிருந்து எரிபொருள் கசிவு ஏற்பட்டதுடன் அது இலங்கை கடற்பரப்பில் பெரும் சமுத்திர மாசை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## இராஜாங்க ... (03ஆம் பக்கத் தொடர்)

இங்கு தெரிவித்த கருத்துக்களை சபாநாயகர் ஹன்சாட்டைப் பெற்று உறுதிப்படுத்தி அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் . எனது கருத்துக்கள் தொடர்பில் பிழையான விடயங்களைக் காட்ட அவர் முயற்சிக்கின்றார். பாராளுமன்றத்தில் யாரும் இப்படிப்பேசக்கூடாது என கூற முற்படுகின்றார். அப்படியானால் நாம் எதனை பேச முடியும், எதனைப் பேசக் கூடாது என்பது தொடர்பில் முன்னரே அறிவிக்க வேண்டும் என்றார். இதன்போது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் தெரிவிக்கும் கருத்துக்கு எதிராக அவரை குற்றம் சாட்டவோ அச்சுறுத்தவோ முடியாது. அவர் தெரிவித்த கருத்துக்கள் தவறானவை என்றால் ,அவர் குற்றம் செய்திருந்தால் அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவந்து விவாதம் நடத்தியே நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். இது தொடர்பில் அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகையில்,

உறுப்பினர் சாணக்கியன் பேசிய பேச்சை நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற இன்னொரு தாக்குதலுக்கு அரசு திட்டமிடுவதாகவே கூறியிருந்தார். அவர் அரசை குற்றம் சாட்டினார். எனவே இந்த சபையில் பேசும்போது நாகரிகமாகவும் உண்மையாகவும் பேச வேண்டும் என்றார்.

## மணிவண்ணன் கைது...

அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரிடமும் நேற்று அதிகாலை 02.00 மணிவரை வாக்குமூலம் பெறப்பட்டது. அதன் பின்னர் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இலங்கை பொலிஸுக்கு ஒத்ததாக யாழ்ப்பாணம் மாநகர காவல் படை அமைக்கப்பட்டுள்ளதென்று பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்த சீருடைய அணிந்திருந்தனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு பல மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகர சபையால் அமைக்கப்பட்ட காவல் படையின் கடமைகளை இடைநிறுத்துமாறு பொலிஸாரால் பணிக்கப்பட்டது.

காவல் படைக்கு வழங்கப்பட்ட சீருடைகளும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டதுடன், கடமைக்கு அமர்த்தப்பட்ட ஐவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.

மாநகர சபை ஆணையாளர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த காவல் படைக்கான சீருடை உள்ளிட்டவற்றை ஒழுங்கு செய்தமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபனிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

சட்டத்தரணிகளுக்கு அனுமதி மறுப்பு...

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை சட்டத்தரணிகள் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கைது செய்யப்பட்ட முதல்வரை அதிகாலையே வவுனியாவில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை வவுனியாவிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு சென்ற சட்டத்தரணிகள் , முதல்வரை சந்திக்க கோரிய போது , அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் சட்டத்தரணிகள் எழுத்து மூல அனுமதி கோரி முதல்வரை சந்திப்பதற்காக காத்திருந்தனர்.எனினும் மணிவண்ணன் வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ். மாநகர முதல்வர், சட்டத்தரணி வி. மணிவண்ணன் சட்ட வைத்திய பரிசோதனைக்காகவே வவுனியா பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் பரிசோதனைகளின் பின்னர் கண்டி வீதியிலமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு மீண்டும் அவர் அழைத்துச்செல்லப்பட்டுள்ளார்.

மணிவண்ணனிடம் தீவிர விசாரணை...

யாழ் மாநகர மேயர் மணிவண்ணனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

அவரை சந்திப்பதற்காக வவுனியாவை சேர்ந்த சட்டத்தரணிகள் சிலர் ஒன்று கூடியிருந்தனர். அவர்களை உள்ளே அனுமதிக்காததால் மணிவன்னனின் சகோதரன் சட்டத்தரணி வி.திருக்குமரனுக்கு அவரை சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை மணிவண்ணனின் கணனி உட்பட சிலபொருட்களும் விசாரணை பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.கொழும்பில் இருந்தும் விசாரணைப்பிரிவு அதிகாரிகள் வருகைதந்து விசாரணை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வவுனியாவில் வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று மாலை 6.30 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக பயங்கரவாதப் பிரிவினரால் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

## நாட்டில் சட்டம், ஒழுங்கை...

கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் போதைப் பொருள் தடுப்புக்கு தேசிய கொள்கையொன்றை விரைவில் உருவாக்குவதுடன் மத அடிப்படைவாத சிந்தனைகளைக்கொண்ட புத்தகங்களை தடை செய்வது குறித்தும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரவை ஆலோசனைக் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷயின் தலைமையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் (08) கூடியது.

தற்போதைய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் ஆலோசனை குழுவின் முதலாவது கூட்டம் இதுவாகும். குழுவின் தலைமைப் பதவி, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு உரித்துடையது என்ற வகையில் ஜனாதிபதி இதில் பங்குபற்றியபோதே இவ்விடயங்களை தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டல், இராணுவ வீரர்களின் சம்பளம், போதைப்பொருள் ஒழிப்பு, பாதுகாப்பு அமைச்சுக்குரிய நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை போன்ற பல்வேறு விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன. ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான அமைச்சரவை ஆலோசனை குழுவின் கூட்டத்திற்கு இவ்வளவு அமைச்சர்கள் கலந்துகொண்டது அண்மைக்காலத்தில் இதுவே முதற் தடவையாகுமென்று பாராளுமன்ற அதிகாரிகள் இதன்போது குறிப்பிட்டனர்.

சட்டம், அமைதியை நிலைநாட்டி மேம்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் தேவைக்கேற்ப 196 பொலிஸ் நிலையங்களை புதிதாக ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் பொலிஸ் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரில் இருந்தும் 10,000 பேர் புதிதாக இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவித்தார்.

அங்கவீனமுற்ற, உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு உயிர் வாழும்வரை வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அவர்கள் உயிரிழந்த பின்னர் அவர்களிடம் தங்கி வாழ்வோருக்கும் உயிர் வாழும்வரை வழங்குவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை தற்போது அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக கருத்து பரிமாறும்போது முன்வைக்கப்பட்ட ஆலோசனை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி , போதைப்பொருள் ஒழிப்புக்காக புதிய தேசிய கொள்கை தற்போது தயாரித்து நிறைவு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அது விரைவில் வெளியிடப்படும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும்போது மத உபதேசங்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத அடிப்படைவாத சிந்தனைகளைக்கொண்ட புத்தகங்களை தடை செய்வது தொடர்பாக எழுந்த கருத்துக்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி, இத்தீர்மானம் குறிப்பிட்ட ஒரு மதத்தை இலக்காகக் கொண்டு எடுக்கப்பட்டவையல்ல என்றும் பொதுவாக அனைத்து வகையான மத அடிப்படைவாதத்தையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டே எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்தன, முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் பிரதானிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அதியுச்ச தண்டனையுடன்...

அறிக்கை, அரச புலனாய்வுத்துறையின் அறிக்கை, பொலிஸாரின் அறிக்கை, ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை, வெளிநாட்டு புலனாய்வுத்துறையின் விசாரணை அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளின் பிரகாரம்தான் நௌப்பர் மௌலவியே பிரதான சூத்திரதாரியென அறிவித்துள்ளேன். இவர் பிரதான சூத்திரதாரி இல்லையென கூறுபவர்கள் உரிய சாட்சியங்கள் இருந்தால் ஒப்படைக்கலாமெனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான இறுதிநாள் விவாதத்தில் பதில் உரையை வழங்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் மிகவும் வினைத்திறன் மிக்க விதத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பயங்கரவாதத் தடுப்பு பிரிவு, சிஐடி மற்றும் பொலிஸாரினால் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 108 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 75 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள 54 பேரில் 50 பேரை நாட்டுக்கு அழைத்துந்துள்ளோம் என்பதுடன், அவர்களிடம் மேலதிக விசாரணைகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

தாக்குதல்களுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ள 32 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆவணங்கள் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. சட்ட மாஅதிபருக்கு இந்த ஆவணங்களுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் கிடைத்துள்ளதால் 32 பேருக்கும் எதிராக வழக்குகளை தாக்கல் செய்ய அவர் இரவு – பகலாக செயற்பட்டு வருகிறார். அதன் காரணமாக வழக்குத் தாக்கல் செய்ய தாமதம் ஏற்படுவதாக ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நீதியானதல்ல. தற்போது இந்த விடயம் சட்ட மாஅதிபர் கையில்தான் உள்ளது.

பிரதான சூத்திரதாரியை மறைக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். சிறுபான்மையினரின் வாக்குகளுக்காக தேசியப் பாதுகாப்பை கணக்கில் எடுக்காது செயற்பட்டவர்கள் தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்தியிருந்தால் தாக்குதல்களை இலகுவாக தடுத்திருக்கலாம்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் சஹ்ரானின் குழுவினருக்கோ அல்லதுஅவரது வலையமைப்புகோ எவ்வித நிதியும் அளிக்கப்படவில்லையென்பதை பொறுப்புடன் கூறுவதுடன் அது குறித்த குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முழுயான நிதி உதவியை இப்ராஹித் சகோதரர்கள்தான் வழங்கியுள்ளனர். 2014ஆம் ஆண்டுமுதல் தாக்குதல்களுக்கான பின்புலத்தை உருவாக்க 500 இலட்சத்தை வழங்கியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவது மாத்திரமின்றி தொடர்புடைய அனைவரினதும் சொத்துகளும் அரசுடமையாக்கப்படும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் சொத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலும் பரிசீலனை செய்யப்படும் என்றார்.

## மேலதிக நிறை கொடுப்பனவு... (03ஆம் பக்கத் தொடர்)

அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் இத்தினமே இதற்கான ஒரு முடிவை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் சட்டத்தரணி கா. மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

## இலங்கை வெளிநாட்டு... (03ஆம் பக்கத் தொடர்)

வெளிநாட்டுச் சேவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். சேவையில் இணைவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வெளிநாட்டமைச்சில் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதுடன், வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் 67 தூதரகங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இலங்கை வெளிநாட்டுச் சேவை (எஸ்.எல்.எஃப்.எஸ்) என்பது இலங்கையில் 1949 இல் நிறுவப்பட்ட ஒரு தனித்துவமான பொதுச் சேவையாகும். இது தொழில்சார் இராஜதந்திரிகளைக் கொண்ட சேவையாகும்.

## மணியின் கைது... (03ஆம் பக்கத் தொடர்)

நடவடிக்கையை எடுத்து, நிதானமாக நடந்துக்கொண்டிருக்க வேண்டும். வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடுமையாகக் கண்டிக்கின்றது என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## ச.தொ.ச. வாகனங்களில்... (03ஆம் பக்கத் தொடர்)

அதுதொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொண்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். சஹ்ரானின் குண்டுகள் சதொச வாகனங்களின் ஊடாகதான் கொண்டுசெல்லப்பட்டதாக ஆளும் தரப்பு அமைச்சர் ஊடகங்களில் பாரிய பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார். சஹ்ரான், சதொச வாகனங்களின் ஊடாகத்தான் குண்டுகளை கடத்தினாரா என்பதை இந்த அதியுயர் சபைக்கு வர்த்தக அமைச்சர் என்ற ரீதியில் நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் என்றார். இதற்கு பதிலளித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, இந்தவிடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## G.C.E (O/L), (A/L), புலமைப்பரிசில்...

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் , ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை அக்டோபர் 03ஆம் திகதியும் இந்த வருடத்திற்கான கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையை அடுத்த வருடம் 2022 ஜனவரி மாத இறுதியில் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக பாடசாலையின் பாடநெறிகளுக்கான பரிந்துரைகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. வழமையாக 200 நாட்கள் பாடசாலை நடைபெறும். இம்முறை 150 நாட்களுக்கு குறைவாகவே பாடசாலைகள் நடைபெற்றுள்ளன. அதிலும் மேல் மாகாணத்தில் 130 தினங்களுக்கு குறைவாகவே பாடசாலைகள் நடைபெற்றுள்ளன.

ஒன்லைன் மூலமான வகுப்புகள் நடைபெற்றாலும் நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதிகளிலும் இணைய வசதிகள் இல்லாத காரணத்தினால் அது முழுமையான நிறைவை தரவில்லை. இத்தகைய பின்னணியிலேயே மிகவும் அவதானமாக செயற்பட்டு மேற்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஸ)

## இவ்வருடத்திற்குள் முற்றுப்புள்ளி...

தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட சந்திப்பொன்று கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அம்பாந்தோட்டை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பத்தி, அகில இலங்கை பொது கடற்றொழில் சங்கத்தின் செயலாளர் ரத்ன கமகே மற்றும் ஆழ்கடல் மீன்பிடிபடகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ருவன் உள்ளிட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதன் போது கருத்து தெரிவித்த சங்கத்தின் பிரதிநிதிகள், இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரிவித்தது டன் இலங்கை மீனவர்கள் இந்து சமுத்திரத்தின் ஊடாக அரேபிய கடற்பகுதிக்குள் பிரவேசிக்கும் போது இந்திய கரையோர காவல் படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் அதனை தடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படியும் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதன்போதுகருத்து தெரிவித்த கடற்றொழில்அமைச்சர்,இந்தியமீனவர்களின் அத்துமீறல்கள் பல வருடங்களாக இடம் பெற்று வருவதாகவும் இப்பிரச்சினை தொடர்பாக தான் ராஜதந்திர மட்டத்திலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் சாதகமான முடிவுகளை அடையக்கூடிய விதத்தில் பேச்சுவார்த்தை முக்கிய கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவித்ததுடன் அப்பேச்சுவார்த்தைகள் ஆரோக்கியமான பெறுபேறுகளைத் தருமெனவும் தெரிவித்தார். குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் காரணமாக வடமாகாணமே அதிகளவு பாதிக்கப்படுவதாகவும் தொடர்ந்தும் இவ்வாறான அத்துமீறல்களுக்கு இடமளித்தால் இலங்கையின் கடல் வளம் அழிவடையுமெனவும் சுட்டிக்காட்டினார்.

## அரசின் அறிவிப்பு வெகு விரைவில்...

அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இவ் விடயம் தொடர்பில், உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

## மணல் மாபியா குறித்து ஜனாதிபதியின்...

கவனத்திற்கு கொண்டு வந்தார். இயற்கை வளங்கள் அழிக்கப்படுதல், இல்மனைட் மற்றும் கிரவல் மண் அகழ்வு குறித்தும் அவர் இதன்போது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அத்துடன், இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

## வீட்டினுள் அமைத்த...

முதலில் குற்றச் செயல்களுக்கு ஈடுபடுத்தியவர் இவர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இச் சந்தேக நபர் அவரது வீட்டினுள் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழியில் பதுங்கி இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2020 நவம்பர் மாதம் 112 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்ட சம்பவத்தின் 09 ஆவது சந்தேக நபராக தேடப்பட்டுவந்த நபர் இவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

## மக்களை அவதானமாக...

ஒத்துழைப்பு அவசியமென வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எம்.எஸ். சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக இது பண்டிகை காலம் என்பதால் பொதுமக்கள் மிக மிக அவதானமாக நடந்து தங்களையும் சமூகத்தையும் முழு நாட்டையும் உபாதைகளுக்குள் தள்ளி விடாது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் ஆளுநர் திருமதி.பி.எம்.எஸ். சார்ள்ஸ் வேண்டுகோள் கேட்டுக் கொண்டுள்ளார்.

எங்கிருந்தோ வந்த கொரோனா வைரஸ் திடீரென யாழ்.குடாநாட்டை தாக்கியபோது அதற்காக இரவு பகல் பாராது சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் மற்றும் சகல தரப்பினருக்கும் ஆளுநர் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இதே வேகத்தில் கட்டுப்படுத்தல் பணிகள் தொடர வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். குறிப்பாக புத்தாண்டில் மக்கள் நமது கொண்டாட்டங்களை வீடுகளில் இருந்தவாறு உறவுகளுடன் கொண்டாட வேண்டும். இது ஒரு சோதனை காலம் என்பதால் எதிர்கால வாழ்வு சுபிட்சம் பெற நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்

## இளவரசர் பிலிப்...

1921ஆம் ஆண்டு கிரேக்க நாட்டில் பிறந்தார். 1947ஆம் ஆண்டு பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தை திருமணம் செய்து கொண்டார்.

சுமார் 65 வருடங்கள் மகாராணிக்கு உதவியாக இருந்த பிலிப், கடந்த 2017ஆம் ஆண்டு தன்னை பொது வாழ்க்கையிலிருந்து விடுவித்துக்கொண்டார். இவர் துடிப்பாக இருந்த காலத்தில் ராணியின் ஆட்சிக்கு மிகவும் உதவியாக இருந்தார். இங்கிலாந்து அரச குடும்பத்தில் நீண்ட வருடங்கள் இளவரசராக இருந்தவர்.

இளவரசர் பிலிப், கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஏற்கனவே இருதய நோய் மற்றும் நோய்தொற்றுக்காக சிகிச்சை பெற்றிருந்தார். இந்த நிலையிலேயே நேற்று காலமாகியுள்ளார்.




# பெரிய வெங்காய விதை தட்டுப்பாடு; விவசாயிகள் பாதிப்பு

தம்புள்ள தினகரன் நிருபர்.



சிறுபோகத்தில் பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்குக் காத்திருந்த விவசாயிகள் பெரிய வெங்காய விதைத் தட்டுப்பாட்டினால் மிகவும் கவலையடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.பெரிய வெங்காய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாகிய மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நான்காயிரம் (4000) விவசாயிகள் இதனால் ஏமாற்றமடைந்துள்ளனர். பெரிய வெங்காய விதைத் தட்டுப்பாட்டினால் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருப்பதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் பெரிய வெங்காய உற்பத்தியின் பொருட்டு சுமார் 15,000 கிலோ கிராம் பெரிய வெங்காய விதை தேவைப்படும். இந்நிலையில், சுமார் 10,000 கிலோ கிராம் வெங்காய விதைகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக மாத்தளை மாவட்ட அரச அதிபர் கடந்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது தெரிவித்திருந்தார்.

இவ் வருட சிறுபோகத்தின்போது மாத்தளை மாவட்டத்தில் பயிரிடுவதற்காக சுமார் 5,500 கிலோ கிராம் பெரிய வெங்காய விதைகளை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஏலவே மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார். மாத்தளை மாவட்ட விவசாய சேவைகள் பணிப்பாளர் மஹிந்த தொடம்வெல, தனியார் அமைப்புக்களின் மூலம் பெரிய வெங்காய விதைகளை இறக்குமதி செய்வதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# குடிபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம்

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரண்டாவது தடவையாகவும் குடிபோதையில் வாகனத்தை செலுத்தி நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராத தொகையை செலுத்துமாறும் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒருவருடத்திற்கு இடை நிறுத்துமாறும் பலாங்கொடை மாஜிஸ்திரேட் நீதிபதி ஜயருவன் திஸாநாயக்கா பணிப்புரை வழங்கினார்.

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்தொல தெபேலமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு குற்றவாளியாக தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த நபர் ஆறு மாதத்திற்கு முன்னரும் குடிபோதையில் வாகனத்தை செலுத்தி நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர் ஆவார்.

பலாங்கொடை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.ஏ.எம். ஜயதிஸ்ஸவின் அறிவுறுத்தலுக்கு இணங்க பஸ்நாயக்க (42920), ரணதுங்க(42999), நிமன்த(70664) ஆகிய பொலிஸ் அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டனர்.

# லொறி - முச்சக்கரவண்டிகள் மோதி விபத்து

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

இரண்டு முச்சக்கரவண்டிகள் லொறியொன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமுற்றுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி அரங்கல பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மதியம் 01/15மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது. நாவலப்பிட்டி டொன்சைட் குறுக்கு வீதியிலிருந்து பிரதான வீதிக்கு விதிமுறைகளை மீறி முச்சக்கரவண்டியொன்று நுழைந்த போது லொறியில் மோதுண்டுள்ளது. இதன் போது லொறி சாரதி குறுக்கு வீதியிலிருந்து பிரதான வீதிக்குள் நுழைந்த முச்சக்கரவண்டியின் விபத்தை தவிர்க்க முயற்சித்த போது எதிரோ வந்த முச்சக்கர வண்டியிலும் லொறி மோதுண்டுள்ளது.

விபத்துக்குள்ளான இரு முச்சக்கரவண்டிகளினதும் சாரதிகள் இருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை தொடர்வதாக தெரிவித்தனர்.

## கொட்டகலையில்

# இ.தொ.காவின் மக்கள் சந்திப்பு

கொட்டகலை CLF வளாகத்தில் நுவரெலியா மாவட்டத்தின் தோட்ட தலைவர்கள், தலைவிகள் மற்றும் வாலிப காங்கிரஸின் தலைவர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன் போது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1000 ரூபா அதிகரிப்பை பெற்றுக் கொடுத்ததை போன்று அவர்களை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் அவர்களின் தொழிலை கௌரவமிக்க தொழிலாக ஆக்குவதோடு அவர்களின் குழந்தைகளின் கல்வித்துறை வளர்ச்சிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் முன்னின்று செயற்படும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இச் சந் திப்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் இ.தொ.காவின் பிரதி தலைவர் அனுஷியா சிவராஜா மற்றும் இ.தொ.காவின் உப தலைவர்களான சக்திவேல், கணபதி கனகராஜ், பிலிப்குமார், இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் இராஜதுரை, இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள், பிரதேச, நகர சபைகளின் தலைவர்கள், காரியாலய உத்தியோகஸ்தர்கள் மற்றும் மாவட்ட தலைவர் தலைவிகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.





# மலையகத்தில் காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைதுசெய்யவும்

## பொதுமக்கள் கோரிக்கை



மலையகத்தில் காடுகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைது செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வனப்பகுதிகளுக்கு தீ வைப்பவர்களை உடன் கைது செய்து உரிய தண்ட பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையகத்தில் வருடாந்தம் வரட்சியான காலநிலை ஆரம்பமாகியவுடன் பலர் காடுகளுக்கு தீ வைக்கின்றனர். இதனால் அரிய வகை தாவரங்கள் பெறுமதிமிக்க மரங்கள் மற்றும் உயிரினங்கள் அழிந்து போய்விடுகின்றன.

அண்மைக் காலமாக குடிநீர் பெற்றுக்கொள்ளும் பிரதேசமாக காணப்படுகின்ற சென்கிளையார், வட்டவளை, லென், காசல்ரி, நோர்வூட், மஸ்கெலியா உள்ளிட்ட பல பகுதிகளுக்கு இனந் தெரியாதவர்கள் வைத்த தீ காரணமாக இன்று பல இடங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சிலர் வர்த்தகத்தில் ஈடுபட்ட இடங்கள் கூட தீ வைத்ததன் காரணமாக மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

நீரேந்து பிரதேசங்களுக்கு தீ வைப்பதன் காரணமாக பல தோட்டங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

உலகம் முழுவதும் இதயமாக காணப்படுவது காடுகள் தான் ஆகையால் இதயமற்றவர்கள் இதயத்திற்கே தீ வைத்து தானும் தன்னுடைய குலமும் அழிய வழி செய்வதாக பலரும் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

மலையகத்தினை பொறுத்தவரையில் வளமான, செழிப்பான, நிலவளம், நீர்வளம் காணப்படுவதற்கு இந்த காடுகளே காரணமாக அமைந்துள்ளன.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் பல நூறு ஏக்கர் காடுகள் வருடம் தோறும் அழிக்கப்படுகின்றன. இதனால் நீரூற்றுக்கள் வரண்டு போய் காணப்படுகின்றன. பல இடங்களில் விலங்குகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதன் காரணமாக சிறுத்தை, பாம்பு, உள்ளிட்ட கொடிய மிருகங்கள் மக்கள் வாழும் இடங்களை நோக்கி தங்களது வாழ்விடங்களை மாற்றிக்கொண்டுள்ளன. இதனால் இன்று பொது மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளனர்.

காடழிப்பை சிலர் பொழுதுப் போக்குகாகவும், சிலர் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும் காணிகளை அபகரிப்பதற்காகவும் செய்வதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர். இருந்த போதிலும் காடுகளுக்கு தீ வைப்பவர்கள் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. இதனால் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் இவற்றை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



கா/அக்குரணை நீரேல்ல ஆரம்பப்பிரிவு பாடசாலையில் தரம் 5 இலிருந்து 6 இற்கு சித்தியடையும் மாணவர்களை அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையில் (2021) கல்வியைத் தொடர அனுமதி வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராக பாதிக்கப்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று முன்தினம் பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம் : மாத்தளை சுழற்சி நிருபர்)

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

புதிய வளாகத்திற்கு

கொழும்பு 07 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை தலைமையகம் 2021.04.15ம் திகதி முதல் இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்த, கொழும்பு-07. முகவரியில் ஸ்தாபிக்கப்படுகிறது.
ஏப்ரல் 15 முதல் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை உடன் மேற்கொள்ளப்படும் சகல அலுவல்களுக்கும் புதிய முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு வருகைத்தருமாறு பொதுமக்களிடம் அறிவித்துக்கொள்கிறோம்.



ශ්‍රී ලංකා සුනිත්‍ය බලශක්ති අධිකාරිය
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
Sri Lanka Sustainable Energy Authority

தகவல்களை அறிந்துகொள்வதற்கு : 0706188555
0706188666

இலக்கம் 72, ஆனந்த குமார சுவாமி மாவத்த, கொழும்பு-07.

# குறிஞ்சித்திணை தரும் நயமிகு காதல் சுவை




இலக்கியங்கள் தமிழர் வாழ்வின்காதல் கதைகளை இனிமையாகவும் நயமாகவும் எடுத்துரைக்கின்றன.

குறிஞ்சித் திணையில் கபிலரால் பாடப்பட்ட 10 பாடல்கள்தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவை.

ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையில் கபிலரால் பாடப் பெற்ற பத்துப் பாடல்கள் வெறிப்பத்து என்ற தலைப்பின் கீழ்க் காணப் பெறுகின்றன." இவற்றால் அன்னையின் அறியாமை, வேலனின் அறியாமை, தோழியின் எதிர்ப்பு முதலியவற்றைத் தொடர்பாக நமக்கு அறிவூட்டி நிற்பதை அறியலாம்.

எல்லாப் பாடல்களிலும் கற்பின் வெற்றியே தலைதூக்கி இலங்கக் கண்டு மகிழ்கின்றோம். தலைவியின் காதல் நோய்க்குத் தெய்வ மூலம் கூறுவதாக அமைந்த வெறியாட்டைக் கற்புக்கு மாசாகச் சமூகம் கருதுவதில்லை. இந்நிலையில் தலைவியும் தாயர் வெறியாட்டு அயர்வதைப்பற்றி அத்துணையாகக் கவல்வதில்லை.



இது நடை பெறாது தடுக்கத் தோழியும் தலைவியும் முன்னேற்பாட்டை மேற்கொள்வதும் உண்டு. நடந்தால் நடந்து ஒழியட்டும் என்று தடையின்றி அது நடந்தொழிய விட்டு விடுதலும் உண்டு. வெறி யாட்டு என்பது அன்னை அறியாமையால் முதுவாய்ப் பெண்டிரின் யோசனையால் நடைபெறும் ஒரு கேலிக் கூத்தேயாகும் என்பது தலைவியின் கருத்தாகும்.

அகநானூற்றுப் பாடலில் காட்டப் பெற்ற நிகழ்ச்சியே இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். நொது மலர் வரைவு களவு நெறியில் வெறியாட்டைப்போல் அயலவர் வரைவும் களவுடை நங்கையின் கற்பைச் சோதிக்கும் ஒரு சமுதாயக் களனாக அமைகின்றது. நள்ளிரவில் வெறியாட்டு நடைபெறுகின்றது. அப்பொழுது தலைவியின் வீட்டிலுள்ள காவலாளரும் அறியா வண்ணம் சந்தன மணம் கமழவும் பல்வகை மலர்களாலான மாலை சூட்டியும் தலைவியின் நோய் தணித்தற்குரிய தலைவன் வருகின்றான். களிறாகிய இரையைத் தெரிதற் பொருட்டு ஒதுங்கிய பார்வையோடு மறைந்து இயங்கும் இயல்பினையுடைய வலிய புலியினைப்போல் பதுங்கிப் பதுங்கி வருகின்றான். வந்த வனைத் தலைவி தழுவி மயங்குகின்றாள். தலைவியின் பசலையும் மாறுகின்றது. காதலனால் மாறிற்று என்பதை அறியாது வேலனின் வெறியால் தான் மாறிற்று என்று அன்னையும் பிறரும் மகிழ்கின்றனர். இவர்களின் அறியாமையைக் கண்டு தலைவி நகுகின்றாள். தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்மலிந்து நக்கனென் அல்லனோ யானே எய்த்த நோய்தணி காதலர் வரஈண்டு ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே." (தன் நசை தன்னை விரும்பும்; நசை விருப்பம்; முயங் குதல் தழுவுதல்; ஏதில் வேலன் இயல்பில்லாத வேலன்; உலந்தமை அழிந்தமை.) என்பது காமக்கண்ணியார் காட்டும் சொல்லோவியம்.

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் தலைமகள் அவன் பிரிவுக்கு ஆற்றாதிருந்த நிலையில் தோழி தலைமகனை இயற் பழிப்ப தலைவி இயற்பட மொழிவதாக இப் பாடல் அமைந் துள்ளது.

களவொழுக்கத்தில் ஒழுகி வரும் அகநானூற்றுத் தலைவன் ஒருவன் சில நாட்களாகத் தலைவியைச் சந்திக்கவில்லை. இதனால் தலைவியின் மேனியில் மாற்றம் காணத் தொடங்கியது. உடல் இளைத்தது; கை வளையல்கள் கழன்று போயின.

தலைமகளின் மேனி மெலிவு தெய்வத்தால் ஆயிற்று எனத் தமர் நினைந்தபொழுது அதனைப் பொறுக்கலாற்றாத ஐங்குறு நூற்றுத் தோழியொருத்தி நேராகவே செவிலியிடம் உண்மை செப்புங் கிளவியால் அறத்தொடு நிற்கின்றாள். அருந்திறல் கடவுள் அல்லன் பெருந்துறைக் கண்டிவன் அணங்கி யோனே' (அருந்திறல்யாரானும் கடத்திலரிய பேராற்றலையுடைய) என்று அடித்துப் பேசுபவள். நெய்தல் மலரையும் செருந்தி மலரையும் கலந்து கட்டிய மாலையை அணிந்த மானிட மகனே தலைவிக்கு நோய் அளித்தவன் என்பதையும் உரைத்து விடுகின் றாள். நற்றிணைத் தோழியின் செயல் இதற்கு மேலும் ஒரு படி போகின்றது. இங்கும் தலைவி முருகேறப்பட்டவள் என்று வேலன் கூறுகின்றான். தலைவியின் நோய்க்குப் பிறிதொரு காரணம் கற்பிக்கப்பெறுவதைத் தோழியால் பொறுக்க முடிய வில்லை. அக்காரணம் தெய்வச் சார்பு ஆயினும் அவள் அதற்கு மதிப்பு தரவில்லை. தெய்வத்தையே சாடத் தொடங்குகின் றாள்.(ஸ)

## கலைக் கதம்பம்

சைத்ரியன்

## ஜனிப்பேன் உனக்காக



கதை கதையாய் காரணம்
கூறுகிறேன் – நம் காதலுக்கு
காரணமே கூற முடியவில்லை
உன்னை காதலனாக கொண்டதற்கு

வேரூன்றிய காதலுக்கும் – பிறரின்
வாழ்வுக்கு நீரூற்றிய காதலுக்கும்
கருத்தொற்றுமை கிடையாது
நம்மில் விருட்சமாம் நம்காதல்

நம்மோர்களுக்கு விதையாகட்டும்
நஞ்சு வித்தாக அல்ல.
காதல் – இச்சை அல்ல..
இறந்தாலும் இடைத்தொடரும்
இன்ப உறவு என்பதை

உலகம் கண்ட காவியக்காதல்
பலவாயினும் – நம் உள்ளம்காண்
உலகம் காணா காதலும்
பவளம் தான்

அதன் வடிவம் தான் நம் வாழ்வும்
கண்ணீரும் கலங்கி நிற்கிறது
இன்றுதானா உங்களால் எனக்கு
வடிவம் கொடுக்க முடிந்ததென்று?
பாவம் கண்ணீருக்குத் தெரியவில்லை

இது பிரிவு இல்லை
இதுவும் ஓர் இதய இணைவு என்று
இன்று இறக்கிறேன் உனக்கு முன்பாக
என்றும் ஜனிப்பேன் உனக்காக..

அதிரா.....









முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 129வது ஜனன தின விழா இந்துகலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் தலைமையில் காரைதீவில் நடைபெற்றது .நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் சில... (படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

# இனிய நாதம் தரும் 'வீணையடி நீ எனக்கு'

## மைக்கல்கொலினின் நாவல் மீதான ஒரு விமர்சனப் பார்வை






ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன் படைக்கப்பட்ட ஒரு படைப்பு இது.வளாக வாழ்வினை மையப்படுத்திய பல நாவல்கள் இதற்கு முன்னரும் வெளிவந்திருந்தாலும் கிழக்கு வளாகத்தின் ஏதோவொரு வெட்டுமுகத்தை வெளிக்காட்டும் முதலாவது நாவல் என்கின்ற தனிச் சிறப்போடு இந்த நாவல் வெளிவந்திருக்கின்றது..

ஒரு வாசகனாய் இந்த நாவல் எனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகள், ஆதங்கங்கள் குழப்பங்கள், தெளிவுகள், வியப்புக்கள் நாவலினூடு சொல்லப்பட்ட சொல்லப்படாத அரசியல் சார்ந்த பார்வைகள் இவை தொடர்பாக என் மனப் பதிவு இது.

இயற்கையழகு கொட்டிக் கிடக்கும் திருமலை கடலோரத்தில் அந்தி வேளையில் உணர்வுகளின் கொந்தளிப்போடு கடற்கரை மணலில் கால் புதையப் படுத்துக் கிடக்கும் கதையின் நாயகன் ரதனின் நனவிடை தோய்தலாய் விரியும் நாவல் திருமலை மட்டக்களப்பு புகையிரத்தில் ஏறி ஆர்முடுகின்றது.

கண்டிக்கும் திருமலைக்கும் அடுத்ததாக இலங்கையின் அழகிய நகரமான நமது மட்டு நகரையும் அது சார்ந்த கிழக்கு வளாக நிலப்பரப்பையும் கதைக் களமாகக் கொண்டிருக்கும் இந் நாவலின் வெளிப்பாட்டு உத்தியை நோக்குவேமாயின் நாயகனும் நாயகியும் கவிதையின்பால் அதீத ஈடுபாடு கொண்டிருக்கும் இருவர் என்பதாலோ என்னவோ புனைகதையின் ஒரு கூறான நாவலின் மரபார்ந்த கட்டமைப்பிலே ஓர் உடைவினை ஏற்படுத்தி கவிதைகளினூடு நாவலினை நகரத்திச் செல்லுதல் என்கின்ற பரிசோதனை முயற்சியை பல வருடங்களுக்கு முன்பாகவே கொலின் மேற்கொள்ள முயன்றிருப்பதாய் தோன்றுகின்றது

வீநாவல் கூற வருகின்ற கருத்து நிலை தொடர்பாக நமது பார்வையைச் செலுத்துவோமாயின், சிறு வெள் மணலை கூட துள்ளியெழா களப்பாறு ஒன்றின் பேரமைதி யாரோ எங்கிருந்தோ எறியும் ஒரு கருங்கல் கலைத்துப் போடுவது போல மனமொத்த காதலராய் வானவெளியில் கனவுப்புரவிகளிலும் வளாகத்து பாதைகளில் நிஜமான மெல்லிய உரசல்களுடனும் வலம் வந்து கொண்டிருந்த ரதன் நிவேதா டிக்கு கருங்காலியாய் முகமற்ற ஒருவனின் கருங்கல் வீச்சு. அது சாதாரண ஒரு கல்வீச்சல்ல.

அவளின் இதயக்குழியின் ஒவ்வொரு அணுக்களிலும் பிரளயத்தை உண்டு பண்ணும் விசம் தடவிய கல் வீச்சு.

வாழ்வு எப்போதுமே ஒரு நேர்கோடாய் மகிழ்ச்சியாகவோ அல்லது துயரமாகவோ தொடர்ந்திருப்பதில்லை என அனுபவமாய் அவளையும் அவனையும் உணரச் செய்த கல் வீச்சு. எரிமலை ஒன்று வெடிக்கும்போது எங்கோயிருந்து பறந்து வந்த கல்லொன்று அவளைத் தாக்கிய ஒரு விபத்தாய் அதை எடுத்துக் கொள்ளும்படி அவன் கெஞ்சுகின்றான்.

ஆனால் அவளுக்குள் எரிமலையே கொதிக்கின்றது. மறக்க முனையும் கோர முகமொன்று கொத்தும் பாம்பாய் அவள் தூக்கத்தை விழுங்குகின்றது. அவனால் ஆராதிக்கப்பட்ட அவளின் யௌவனத்தின் அத்தனை திரட்சியும் . பொலிவிழந்து பூமிக்குள் ஒழுகிச் செல்வதாக தோற்றம் கொடுக்கினறது.

காயம்பட்டது அவளுக்கு ஆனால் இரத்தம் வடிவது அவனுக்கு என அவள் எண்ணுகின்றாள். புரட்சிகர எண்ணங்களுடன் வாழப் பழகிக் கொண்ட ரதன் அந்த விபத்திலிருந்து அவளை மீட்டெடுத்து அந்த விபத்தின் ஞாபகச் சுவடுகள் கூட அவளைத் தீண்டக் கூடாதென பிரயத்தனம் கொள்கின்றான்.

காதல் என்பது சந்தோச தருணங்களில் கூடிக் குலாவி உடலும் உடலும் உரசி காமத்தின் தீக்குள் விழுந்து காணாமல் போதல் மட்டுமல்ல. தன்னுடைய இணைக்கு மனதாலோ உடலாலோ தீராத வலியொன்று ஏற்படும்போது மயிலிறகின் தடவலாய் எப்படி அந்த இணையை ஆற்றுப்படுத்துகின்றோம் என்பதிலேயே காதலின் அர்த்தம் முழுமை கொள்கின்றது.

இக்கட்டான சூழ்நிலைகளிலும் எதிர்பாராத எதிர்மறை நிகழ்வுகளின் போதும் தன்னவன் எப்படி தன்னைக் கையாள்வான் எப்படி ஒரு பாதுகாப்பு உணர்வை தனக்களிப்பான் என்பதையே ஒரு பெண்ணின் மனம் நாடும். ஆனாலும் தன் ஆழ்மன விருப்பங்களுக்கு திரை போட்டுக்கொண்டு எதிர்பாராமல் நேர்ந்த பேரிடியில் தன்னவனுக்கு மன உளைச்சல் உண்டாகியிருக்கும் என தானே கற்பிதம் செய்து கொண்டு அவனிடமிருந்து விலகவும் முடியாமல் இணையவும் முடியாமல் மனதுக்குள் மறுகி மறுகி உணர்வுச் சிக்கலுக்குள் தன்னையும் உட்படுத்தி தன்னவனையும் உட்படுத்தி ஒருவித மயக்க வெளிக்குள் சுழன்று கொண்டு கடைசியில் காதலனுக்கு தான் தியாகம் செய்வதாக நினைத்து அவனே தன்னை வெறுக்கும்படியாக அவனை உதாசீனம் செய்வது போல் போலியாக நடித்து மௌனித்துப்போவதே நடைமுறை வாழ்வியலாகின்றது.

ஒவ்வொரு மௌனத்தினுள்ளும் ஒரு பேரிரைச்சலும் ஒவ்வொரு பேரிரைச்சலுக்குள்ளும் ஓர் ஆழ்ந்த மௌனமும் இழையோடிக் கிடப்பதுபோல் நிவேதாவின் மௌனத்திற்குள்ளும் ஒரு பேரிரைச்சல். (தொடரும்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல்;

# காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினுள் புகுந்த அமெரிக்கன் மிசனை சேர்ந்தவர்கள் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்த சில மாணவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தும் இடம் தமக்கு சொந்தமானது எனவும் அதில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்த வேண்டாம் எனக் கூறியுமே மாணவர்கள் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக இந்தக் காணிப் பிரச்சினை நடைபெற்று, தற்போது அந்த நிலம் கல்லூரிக்கு சொந்தமானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில், நேற்று காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கு சென்ற அமெரிக்கன் மிசனை சேர்ந்தவர்கள் மாணவர்கள் வாகனங்களை நிறுத்தும் இடத்திற்கு செல்ல முடியாதவாறு தடிகள், சீற்றுகளை போட்டு பாதையை மறித்திருந்தனர்.

எனினும், அங்கு ஆசிரியர்கள் வருகை தந்த பின்னர் மாணவர்கள் வாகனங்களை உள்ளே நிறுத்திய போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் ஐந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரண்டு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.







## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்

மன்னார் குறூப் நிருபர்



கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,,,

யாழ். மாநகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கிய காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

இத்தனை வருடங்களாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசினால் ஒரு மாநகர சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாட்டை அவர்களால் செய்ய முடியவில்லை. சீருடை காரணமாக யாழ். மாநகர காவல் படையை தடைசெய்து முதல்வர் மணிவண்ணனை கைது செய்துள்ளது சிறுபிள்ளைத்தனமாக உள்ளது.

யாழ். மாநகர காவல் படையினரின் இதே வகையிலான சீருடை கொழும்பு மாநகர சபையிலும் உள்ளதாக மணிவண்ணன் விளக்கம் அளித்துள்ளார்.

## கணவன், மனைவி கொரோனாவில் பலி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் கடந்தவாரம் கொரோனா தொற்றால் உயிரிழந்த முதியவரின் மனைவிக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம் பகுதியை சேர்ந்த முதியவர் ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சில நாட்களிற்கு முன்பாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அந்த பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் மேலதிக சிகிச்சைகளிற்காக வெலிக்கந்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் சிலர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த முதியவரின் மனைவிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் கொழும்பு ஹோமாகம வைத்தியசாலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதேவேளை அவரது கணவனின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டிருந்த சில குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் விருட்சம் புதிய இயக்குனர் சபை தெரிவு

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் மட்டுமன்றி வடமாகாணம் முழுவதும் பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிவரும் தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் 2013 ஆம் ஆண்டின் பழைய இயக்குனர் சபை உறுப்பினர்கள் 09 பேரில் 07 பேரின் சம்மதக் கடிதத்துடன் பழைய இயக்குனர் சபை கலைக்கப்பட்டு புதிய இயக்குனர் சபை தெரிவு 2021.02.21 வவுனியா பிரதேச செயலாளர் ஒப்புதலுடன், வவுனியா பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் கி.வசந்தன் தலைமையில் பொதுச்சபை உறுப்பினர்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

தலைவராக செல்வராசா சந்திரகுமார் (கண்ணன்) மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திருமதி ப.சோதிமலர், பொருளாளராக திருமதி ச.தனராணி, உப தலைவராக தா.சலசலோசன், உப செயலாளராக வே.இராமச்சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு 06 இயக்குனர் சபை உறுப்பினர்களாக அ.சூரியகுமார் (விக்னா), பா.சுந்தர்ராஜன், கு.இரவீந்திரன் (கண்ணன்), அ.மாதவன், திருமதி தி.மதிவதனி, திருமதி அ.சசிகலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ் விருட்சமானது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிலும், மக்களின் வாழ்வாதாரச் செயற்பாட்டிலும், முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் தமிழ் விருட்சத்தின் பணி மாணவர்களுக்கு தொடரும் என அதன் ஸ்தாபகரும், தலைவருமான செ.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

## இணைப்பு பாதையின் அவல நிலை



பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட தம்பகாமம் கிராமத்தையும் வடமராட்சி கிழக்கையும் இணைக்கும் பாதையினை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பாதையானது யாழ். வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பரப்பில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படும் போதும் கடல் பெருக்கு எடுக்கும் போதும் குறித்த பிரதேசத்தில் உள்ள மக்களை பளை பகுதிக்கு வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட அவசர வெளியேற்று பாதையாகும். பாதை கடந்த புரவி புயலிற்கு முன்பாக 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வந்தார்கள். தற்போது பாலத்திற்கு அருகிலும் உள்ள மண் அணைகள் உடைந்துள்ளமையால் சாதாரண மோட்டார் வாகனம் கூட செல்ல முடியாத நிலையில் சேதமடைந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே குறித்த அவசர வெளியேற்று பாதையை புனர்நிர்மாணம் செய்து எமது உயிர்களை காப்பாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மணிவண்ணனின் கைது சட்டவிரோதமானது காவல்படை பற்றிய தவறான புரிதலாகவே கருதுகிறோம்

### தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு விரோதமானது.

குறித்த காவல்படை பற்றிய தவறான அல்லது திரிபுபடுத்தப்பட்ட வியாக்கியானத்தின் அடிப்படையில் மாநகர முதல்வர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். ஏனெனில், காவல் படை என்ற பெயருடன், ஐந்து மாநகர சபை ஊழியர்களை உள்ளடக்கி அறிவிக்கப்பட்ட குறித்த காவல் படை, அதன் நோக்கங்கள், பணிகள் என்பனவற்றின் அடிப்படையில் ஓர் பொலிஸ் படையாக ஒருபோதுமே கருதப்பட முடியாதது ஆகும். நகரின் சுகாதார மேம்பாட்டினை பிரதான நோக்கமாகக் கொண்ட இந்தக் குழுவுக்கு சூட்டப்பட்டிருக்கும் 'காவல் படை' என்ற தமிழ்ப் பெயரினை அடிப்படையாக வைத்து, அதனை ஓர் பொலிஸ் படையாக அர்த்தப்படுத்துவது என்பது தவறானது.

எமது நாட்டில் 'பொலிஸ் சேவை' மற்றும் 'பொலிஸ் நிலையம்' என்பனவற்றிற்கு தமிழில் முறையே 'காவல் துறை', 'காவல் நிலையம்' என்ற சொற்கள் உத்தியோக பூர்வமாக பிரயோகிக்கப்படுவதில்லை. 'பொலிஸ்' என்ற ஆங்கிலச் சொல்லே உத்தியோக பூர்வமாக தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. காவல் துறை, காவல் நிலையம் என்ற பதங்கள் சில, பல சந்தர்ப்பங்களில் மட்டுமே ஊடகங்களால் உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும், குறித்த காவல் படைக்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாநகர சபை பணியாளர்களில் எவருக்கும், வழக்கமாக பொலிஸாருக்கு வழங்கப்படும் எந்தவொரு பயிற்சி நெறியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, ஓர் குண்டாந்தடி கூட, எவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த அமைப்பினை நிறுவியதன் மூலம் சட்ட ஏற்பாடுகள் எவையாவது மீறப்பட்டிருந்தால், சாதாரண சட்டத்தின் கீழ் அரசாங்கம் தாராளமாக நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும், மாறாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை இந்த விவகாரத்தில் அரசாங்கம் பிரயோகித்திருப்பது யதார்த்தபூர்வமான அணுகுமுறையோ அல்லது நீதியான நடவடிக்கையோ அல்ல.





கிளிநொச்சி டிப்போ சந்தி பசுமைப் புங்காவில் நடைபெற்ற புத்தாண்டு சந்தையை மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று ஆரம்பித்து வைத்த போது,...
படம் பரந்தன் குறூப் நிருபர்

## வடக்கில் தொல்பொருள் விடயங்களை தெளிவுபடுத்த பணிப்பாளர் நியமனம்

### அங்கஜனின் கோரிக்கையை ஏற்ற அமைச்சர் விதுர

கோப்பாய் குறூப் நிருபர்

வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் ஏற்படுகின்ற அசௌகரியங்களை முன்கூட்டியே தெளிவுபடுத்துவதற்காக பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என தொல்பொருள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சர் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் திடீரென தொல்பொருள் திணைக்களம் தமிழ் மக்களுடைய பிரதேசங்களில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் மக்கள் அதிர்ப்தி அடைந்துள்ளார்கள் என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணை தலைவருமான அங்கஜன் இராமநாதன் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். அதுமட்டுமல்லாது தொல்பொருள் விடயங்களை ஆய்வு செய்யும்போது மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு தெரிவிக்காமல் தொல்பொருள் அதிகாரிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதால் அந்தப் பகுதிகளில் குழப்பமான சூழ்நிலை ஏற்படுவதாகவும் அமைச்சருக்கு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வடக்கில் இடம்பெறும் தொல்பொருள் விடயங்கள் தொடர்பாக அந்தந்த மாவட்டங்களின் பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடல்களுக்கு தெளிவுபடுத்த பணிப்பாளர் ஒருவரை விரைவில் நியமிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வீழ்ச்சியடையும் இறப்பர் தோட்டங்கள் ஜீவனோபாயமிழக்கும் தொழிலாளர்கள்



இலங்கையில் மலைநாட்டைப் பொறுத்தவரையில் பெருந்தோட்டத்தொழில் என்பது வெறுமனே தேயிலை தோட்டங்களை மட்டுமே பலர் அறிந்ததாகும்.ஆனால் இலங்கையில் தேயிலையோடு இறப்பர் பெருந்தோட்டச் செய்கையும் பெருமளவில் காணப்படுகின்றது. அந்த வகையில், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் பெரும்பாலானோரின் சீவனோபாயமாகத் திகழ்வதே இறப்பர் தொழிற்றுறை என்பதை மறுக்க முடியாது.

இறப்பர் என்பது பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கு பெரும்பங்கு வகிக்கின்றது. ரயர், கைக்கவசம், மருத்துவதுறைசார் உற்பத்திப் பொருட்கள், வீட்டுப்பாவனை உற்பத்திப் பொருட்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் இறப்பராலான எல்லாப் பொருட்களும் இறப்பர் மரத்தினால் பெறப்படும் இறப்பர் பால் மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இன்றைய இலங்கையைப் பொறுத்தவரையில், இறப்பராலான பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கின்றதே ஒழிய, ஒருபோதும் அது குறைவடைவதில்லை. இவ்வாறு, இலங்கையில் முக்கிய ஏற்றுமதி மற்றும் பெருந்தோட்டச் செய்கையாக உள்ள இறப்பர் இரத்தினபுரி மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 20 சதவீதத்துக்கு மேற்பட்ட பகுதியில் இறப்பர் தோட்டங்கள் காணப்படுகின்றன.இவ்வாறான இறப்பர் பெருந்தோட்டச் செய்கையில் பொதுவாக மக்கள் அறிந்திராத சுவாரசியமான பல முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன.

நன்கு காய்ந்த அல்லது இளங்கன்றான இறப்பர் மரங்களிலிருந்து இறப்பர் பால் எடுக்கப்படுவதில்லை. மாறாக, சாதாரணமாக வளர்ந்த இறப்பர் மரத்திலிருந்தே பால் பெறப்படுகின்றது.

ஒரு இறப்பர் மரத்தில் நாளொன்றுக்கு ஒருமுறை மாத்திரமே இறப்பர்பால் எடுக்கப்படுகின்றது. சில சமயங்களில் மரம் கொண்டுள்ள பால் அளவினைப் பொறுத்து இரண்டாம் முறையும் பால் சேகரிக்கப்படும்.

இறப்பர் மரத்தில் கத்தியால் வெட்டிக் கீறல் செய்து, சுமார் ஒன்று அல்லது இரண்டு மணிநேர இடைவெளிக்குப் பின்னர் சிரட்டையில் நிரம்பிய இறப்பர் பால் ஒரு பெரிய பாத்திரத்திற்கு மாற்றப்பட்டுச் சேகரிக்கப்படும். இவ்வாறு பாத்திரத்துக்குள் ஊற்றப்படும் இறப்பர் பால் அதிகளவு செறிவு கொண்டதாகக் காணப்படும்.

மிகுதியாகத் தேங்காய் சிரட்டையில் படிந்திருக்கின்ற இறப்பர் பாலானது, சில மணி நேரங்களில் காய்ந்து இறப்பர் போன்ற தன்மையை அடையும். இதனைத் தோட்டப்புறங்களில் 'ஒட்டுப் பால்' என்ற பெயர் கொண்டு அழைப்பர்.

இறப்பர் பால் செறிவு அதிகம் என்பதால், அது மிக சீக்கிரமாக உறையும் கட்டத்தை அடைந்து விடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு சில தொழிலாளர்கள், குறிப்பிட்ட அளவு சோடியத்தினை இறப்பர் பாலில் கலந்து விடுகின்றனர். இதன் மூலமாக பால் உறைவது கட்டுப்படுத்தப்படுகின்றது.

சேகரிக்கப்பட்ட இறப்பர் பாலானது, குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு வரப்பட்டு, நீர்மானி (மெட்றோ அடர்த்திமானி) கொண்டு அதன் அடர்த்தி அளவிடப்பட்டு பின்னர் இறப்பர் பால் சேகரிக்கும் குறித்த தோட்டத்துக்கு உரித்தான 'ட்ராக்டர் தாங்கியினுள்' சேகரிக்கப்பட்டு அந்த தோட்டத்தின் இறப்பர் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கிருந்து இறப்பர் பாலானது உறைய வைக்கப்பட்டு, இறப்பராக வெளிவர, அவை இலங்கை முழுவதும் உள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு இறப்பராலான உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

## இறப்பர் மரத்தின் விசேட அம்சங்கள்

காலைப் பொழுதுகளிலேயே அதிலிருந்து அதிகம் பால் சுரக்கப்படுவதால் தொழிலாளர்கள் அதிகாலை ஆறு மணிக்கே தங்களது வேலையை ஆரம்பித்து விடுவர். அதிகாலையில் ஆரம்பிக்கும் வேலையை நண்பகலாகும்போது அவர்கள் நிறைவுக்குக் கொண்டு வருகின்றனர்.

அதேபோன்று, இறப்பர் பாலானது பெரும்பாலும் கோடை காலத்திலேயே அதிகம் பால் தருகின்றது. மாரி காலத்தில் இறப்பர் மரங்களில் பால் சுரப்பது குறைவாகவே காணப்படும். இதனால் அக்காலப்பகுதியில் இரத்தினபுரி உட்பட இறப்பர் பெருந்தோட்டங்கள் உள்ள அனைத்து இடங்களிலும் இறப்பர் பால் உற்பத்தி மந்தமாவதோடு, தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைவடைவதால் அவர்களின் சீவனோபாயத்திலும் வீழ்ச்சியை சந்திக்க நேர்கின்றது.

சராசரியாக ஒரு இறப்பர் தோட்டத் தொழிலாளி நாளொன்றுக்கு 20 தொடக்கம் 22 லீற்றருக்கும் குறையாமல் இறப்பர் பால் சேகரிக்க வேண்டும். 20 லீற்றர் இறப்பர் பாலைச் சேகரிப்பதற்கு ஒரு தொழிலாளி 250 தொடக்கம் 300 மரங்களை வெட்ட வேண்டி இருக்கும்.

தினந்தோறும் தனது குடும்ப வாழ்க்கையை நடாத்தச் சிரமப்படுகின்ற தோட்டத் தொழிலாளிகள் இறப்பர் தோட்டங்களிலும் பல பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அட்டைக் கடியும், நுளம்புக் கடியும் பெரும் போராட்டமாகக் காணப்படுவதோடு, விஷப் பாம்புக்களின் தீண்டல்களும் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. இது, இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற சகல இடங்களிலும் நடந்தேறுகின்ற விடயம் ஆகும்.

இறப்பர் செய்கை வருடம் ஒன்றுக்கு சுமார் 1.3 பில்லியன் ரூபா (2019ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) இலாபத்தை தருகின்ற பெருந்தோட்டச் செய்கையாக விளங்குகின்றது. இது, 2025 ஆம் ஆண்டாகும்போது சுமார் 4.4 பில்லியன் ரூபாவை எட்டக்கூடும் என்பது இலங்கை இறப்பர் ஆராய்ச்சித் திணைக்களத்தின் எதிர்வு கூறலாகும்.

ஆனால், இந்த ஆதாயங்கள் எவையும் உழைக்கும் மக்களைச் சென்றடைவதில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

இரத்தினபுரி மாவட்டத்தின் இறப்பர் செய்கையின் இன்றைய நிலையை நோக்கினால், ஒரு காலகட்டத்தில் இறப்பர் பால் நிரம்பி வழிந்த சிரட்டைகளில் இன்று அரைவாசி நிரம்புவதே கடினமாகக் காணப்படுகிறது. இறப்பர் தோட்டங்களில் இறப்பர் மரங்கள் கவனிப்பாரற்றுக் காணப்படுதல், போதிய உரங்கள் இல்லாமை மற்றும் காலநிலை மாற்றத்தால் மரங்கள் அழிவடைய நேரிடுகின்றமை இதற்கு முக்கிய காரணங்களாகும்.

மேலும், தற்காலத்தில் இறப்பர் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய் சம்பளப் பிரச்சினையும் இந்தத் தொழிலாளர்களின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இரத்தினபுரி நகரை அண்மித்த சில பகுதிகளில் இறப்பர் மரங்கள் அழிக்கப்படுவதும் இன்று காணக்கூடியதாக உள்ளது. இறப்பர் மரங்கள் நிரம்பிய காடுகளாக இருந்த ஒரு சில பகுதிகள் இன்று தனியார் துறையினரால் அழிக்கப்பட்டுக் குடியிருப்புக்கள் அமைப்பதற்குரிய நிலங்களாக மாற்றப்பட்டுவிட்டன. இறப்பரால் சூழப்பட்டிருந்த இடங்கள் சம தரைகளாக்கப்பட்டதால் வெப்பநிலை இப்பிரதேசங்களில் அதிகரித்துள்ளதோடு, பயிர்களின் வளர்ச்சியிலும் அது தாக்கம் செலுத்தக் காரணமாக இருக்கின்றது. இது, இரத்தினபுரியைப் பொறுத்தவரையில் இறப்பர் பெருந்தோட்டச் செய்கையின் பெருவீழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பெருந்தோட்டச் செய்கையாகவும், பலரின் சீவனோபாயமாகவும் இருக்கும் இறப்பர் செய்கை குறித்து அக்கறை செலுத்த வேண்டிய கடப்பாடு பலருக்குண்டு. ஆனால், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலையறிந்த இவர்களில் பலர் இந்த மக்களை மறந்தே போய் விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.



சந்திரமோகன் நிரோஷன்
முதலாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பழங்கால சிறுவர் விளையாட்டுக்கள்



*'புளியடி
புளியடி
இவடம் எவடம்
புளியடி புளியடி
இவடம் எவடம்
எங்கயெடி போறாய்?'*

என்று பாடியபடி ஒரு சிறுவன் அல்லது சிறுமி கையில் மண்ணை எடுத்து, அதன் மேல் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய ஏதேனும் ஒன்றை அதன் மேல் வைத்து, மற்றைய சிறுவன் அல்லது சிறுமி அவரின் கண்ணை கையால் பொத்தியபடி சுற்றிச்சுற்றித் திரியும்போது ஏதேனும் ஒரு இடத்தில் மண்ணை வைப்பர். பின்பு ஆரம்ப இடத்திற்கு அவரின் கண்ணைப் பொத்தியபடி சென்று விடுவார். பின்னர், குறித்த சிறுவன் அல்லது சிறுமி அந்த மண் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டானது பலகாலம் சிறுவர்களால் விளையாடப்பட்டு வந்துள்ளது. இதில் இரண்டு வகையான விளையாட்டுக்கள் உள்ளன. மற்றையது ஒருவர் கண்ணைப் பொத்த வேண்டும் மற்றையவர்கள் ஒளிந்துகொள்ள வேண்டும் ஒளிந்தவர்களைக் கண்ணைப் பொத்தியவர் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறு மாறி மாறி விளையாடுவார்கள்.

இந்த விளையாட்டின் மகிழ்ச்சியால் எழும் சத்தம் தற்போது எந்த ஊரிலாவது கேட்கிறதா? இந்த விளையாட்டுக்களை இன்றைய சிறுவர்களுக்கு எவ்வாறு கொண்டு செல்வது?

நாம் எவற்றையெல்லாம் இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தக் காலகட்டத்தை மறக்க முடியுமா? இப்படியெல்லாம் எமது சிறார்கள் வாழ்ந்துள்ளனர் என்று சொல்லுமளவிற்கு அக்கால ஞாபகங்கள் ஏராளமுண்டு. அதையெல்லாம் தற்கால சமுதாயமும் அனுபவிக்க வேண்டும் என யாராவது சிந்தித்து இருக்கிறீர்களா?

காலையில் எழுந்தவுடன் ரியூசன். பிறகு, பாடசாலை. அதற்குப் பிறகும் ரியூசன் என்று நம் பிள்ளைகளை ஒரு கூண்டுக்குள்ளேயே அடைத்து வைத்திருக்கிறோம்.

வடபகுதிப் பிரதேசமானது தமிழர்களின் கலை, பண்பாடு, பாரம்பரியங்கள் தழுவிய பூமியாகும். ஆண்டுகள் செல்லச்செல்ல பல்வேறு தொழிநுட்ப வளர்ச்சியால் எம்முடைய பாரம்பரியங்கள் மறந்தும், மறைந்தும் போகின்ற போக்குக் காணப்படுகின்றது. அதில் முக்கியமானதொன்றாகக் காணப்படுவது பாரம்பரிய விளையாட்டுக்களாகும்.

தற்போது தொலைபேசி மற்றும் கணனிகளில் இயந்திரமயமான, செயற்கை விளையாட்டுச் சூழலுக்குள் மூழ்கிப்போயுள்ள இன்றைய தலைமுறைக்கு, எமது பிரதேசங்களில் ஆரம்ப காலங்களில் சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தவர்கள், பெண்கள் எனப் பலரும் விளையாடி மகிழ்ந்த பாரம்பரிய விளையாட்டுக்களின் அருமை தெரியாமலே போகின்றது.

உடலுறுதிக்கும், அறிவுத்திறனுக்கும், மகிழ்வுக்குமாகப் பயின்று வந்த பாரம்பரிய விளையாட்டுக்களை இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கமாட்டார்கள். அந்தக் காலங்களில் இந்த விளையாட்டுக்கள் தொடர்பான கிராமியப் பாடல்கள், குழூவுக்குறிகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகிய விடயங்களும் மக்களுடன் இணைந்திருந்தன.

இந்த விளையாட்டுக்கள் ஒவ்வொரு வயது மட்டத்திற்குமெனச் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள், வளர்ந்தவர்களுக்கான விளையாட்டுக்கள், பெண் பிள்ளைகளுக்கான விளையாட்டுக்கள் என பல்வேறு பிரிவுகளாக விளையாடப்பட்டு வந்திருக்கின்றன. சில விளையாட்டுக்கள் எல்லா மட்டத்தினரும் விளையாடுவதோடு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் காணப்படுகின்றன.

## பாரம்பரிய விளையாட்டின் மகத்துவம் தெரியாத இன்றைய தலைமுறையினர்

ஆரம்ப காலத்தில் கிராமங்களில் வாழும் சிறுவர்கள் தற்போதைய சிறுவர்களைப் போல பாடசாலையால் வந்தவுடன் ரியூசனுக்குச் செல்வதில்லை. அவர்கள் சிறுசிறு குழுக்களாகத் தொலைபேசி இல்லாமலேயே குறித்த நேரத்தில் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக விளையாடுவார்கள். கீச்சுமாச்சுத் தாம்பலம் கீயாமாயா தாம்பலம், கண்ணாமூச்சி, நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டி, வளையம் உருட்டுதல், கொழுத்தாடு பிடித்தல், மண்சோறு கறி காய்ச்சுதல், திருவிழா நடாத்துதல், இராசா மந்திரி, கெந்தியடித்தல், மாபிள் அடித்தல், சிரட்டைப் பந்து, ஆடுபுலி ஆட்டம், பச்சைக் குதிரை தாண்டுதல் ஆகிய விளையாட்டுக்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இளைஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மாலை வேளைகளில் விளையாடுவதற்கான நேரங்களை ஒதுக்கி குழுக்களாகச் சேர்ந்து விளையாடுவார்கள். கிளித்தட்டு மறித்தல், கிட்டியடித்தல், அம்பெறிதல், போர்த்தேங்காய் அடித்தல், வண்டிச்சவாரி, கோழிச்சண்டை, பட்டம் ஏற்றுதல் போன்றவற்றை விளையாடுவார்கள்.

வயது வந்தவர்கள் தாயம், கடதாசி விளையாட்டு, பல்லாங்குழி, நாயும் புலியும் ஆகியவற்றை விளையாடுவார்கள். பொதுவாக அக்காலத்தில் பெண் பிள்ளைகள் கெந்தி விளையாட்டு, கயிறடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, குலை எடுத்தல், ஊஞ்சலாடுதல், கும்மியடி, கோலம் போடுதல் ஆகிய விளையாட்டுக்களை விளையாடினார்கள்.

பல்லாங்குழி விளையாட்டில் இருவர் பங்குபற்றுவர். இரு பக்கங்களுக்கும் எதிரெதிரே 12 குழிகளும், புளியங்கொட்டைகளைப் பயன்படுத்தியும் விளையாடுவார்கள். இரண்டு எதிரெதிர்க் குழிகளில் புளியங்கொட்டைகளைப் போடுவார்கள். அக்குழியிலிருந்து இருவரும் மாறி மாறி ஏனைய ஒவ்வொரு குழிகளுக்குள்ளும் ஒவ்வொரு புளியங்கொட்டையாக ஒரு ஒழுங்கு வரிசையில் போடப்படும். இறுதியாகப் போடும் குழியில் ஆறு புளியங்கொட்டைகள் இருந்தால் அவை அவருக்குரியது. இவ்வாறு மிகவும் சுவாரஷ்யமாக விளையாடுவார்கள். இறுதியில் யாரிடம் அதிக புளியங்கொட்டைகள் உள்ளதோ அவரே வெற்றிபெற்றவராகக் கருதப்படுவார். இப்போது சின்னஞ் சிறுசுகள் போனில் பல்லாங்குழி விளையாடுகினமாம். நேரிலே எதிரெதிரே விளையாடும் சுவாரஷ்யம் போனில் நிச்சயம் கிடைக்காது என்பது அவர்களிற்குத் தெரிவதில்லை. இளைஞர்கள் அதிகம் விளையாடும் விளையாட்டுக்களிலொன்று கிட்டியடித்தல். இந்த விளையாட்டைச் சிறுவர்களும் விளையாடுவார்கள். இதற்குக் கிட்டி மற்றும் புள் பயன்படுத்தப்படுகின்றன. இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு 'அடிக்கிற குழு' என்றும் மற்றையது 'அலையிற குழு' என்றும் சொல்லுவார்கள். இதில் 'மறுத்தான் அடித்தல்' முக்கியமானதொன்றாகும். இது சிறு குழியின் மேல் புள்ளை வைத்து கிட்டியால் எறிய வேண்டும் அதனைப் பிடிப்பதற்காக எல்லோரும் ஓடுவார்கள். பிடித்தால், அவர் விளையாட்டிலிருந்து நீக்கப்படுவார். இல்லாவிட்டால் குறிக்கப்பட்ட கோட்டைத் தாண்டி யார் அதிக தூரம் புள்ளை அடிக்கின்றார்களோ அவர்களே அப்போட்டியின் வெற்றியாளர்கள். இவ்விளையாட்டின் மூலம் வாய்ப்பாடு பழக்கப்படுதல் வாய்ப்பதோடு, உடற் சுறுசுறுப்பும் ஏற்படுகின்றது.

இதில் சுவாரஷ்யம் என்னவென்றால், இந்த விளையாட்டில் ஈடுபடும் பலரும் புள்ளால் தாக்குண்டு மூக்கு, பல் உடைபட்டு வீட்டுக்குப் போவார்கள். ஆனால், எவ்வளவு சேதாரம் ஏற்பட்டாலும் அடுத்த நாளே அதே விளையாட்டை விளையாட முதல் ஆளாக வந்து நிற்பார்கள். இப்படி விளையாடிய காலம் திரும்பி வருமா? என்பது கேள்விக்குறிதான்.

பல்லாங்குழி மூலம் இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணமும், தாயம் மூலம் தோற்றாலும் முயன்று மீண்டும் முன்னேறுவது மற்றும் குடும்பத்துடன் சேர்ந்து பகிர்ந்து விளையாடுவது ஆகிய நற்பண்புகள் வளர்க்கப்பட்டன.

தலைமுறை மாறிச்செல்ல இவ்விளையாட்டுக்கள் மருவி வரத்தொடங்கி விட்டன. பல விளையாட்டுக்கள் காணாமலே போய்விட்டன. சினிமா, தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, இணையம் போன்ற வெகுஜன மற்றும் புதிய ஊடகங்களின் வருகையினால் தற்கால சமூகம் அவற்றிற்கு அடிமையாகிவிட்டது. அத்துடன் பாரம்பரிய விளையாட்டுக்கள் விளையாடப்படும் வீதம் மிகக் குறைவடைந்து வருகின்றது.

தற்போது சிறுவர் மற்றும் இளையோர்கள் கையடக்கத் தொலைபேசிகளில் இணையவழி விளையாட்டுக்களையே அதிகம் விரும்பி விளையாடி வருகின்றனர். அதிலும் பாரம்பரிய விளையாட்டுக்களில் சில இணையவழி ஊடகம் மூலம் பரிணாமம் அடைந்து தற்கால சிறுவர் மற்றும் இளையோர்கள் மத்தியில் பெரிதும் விளையாடப்பட்டு வருகின்றன.

தாயம் லூடோ என்ற பெயரிலும், கண்ணாமூச்சியை ஒத்ததாக– ரோலிங் கக்கர்ஸ் மற்றும் பப்ஜியும் காணப்படுகின்றன. கரம் விளையாட்டும் தற்போது இணையவழியில் அதிகமானோரால் விளையாடப்படுகின்றது. இவ்வாறு இணையம் மூலம் விளையாடுவது நேரடியாக எல்லோரும் குடும்பத்துடன் ஒன்று கூடி விளையாடும் உணர்வை நிச்சயம் தரமுடியாது. இணையவழி மூலம் யாரோ முகம் தெரியாத நபருடன் இலத்திரனியல் சாதனத்தின் வழியாக விளையாடப்படுகின்ற தலைமுறையாக தற்போதைய சமூகம் காணப்படுகின்றது. இதை அவர்கள் பெரிய வரமாகவும் பார்க்கின்றனர். ஆனால் உண்மையான சந்தோஷமும் புத்துணர்ச்சியும் பாரம்பரிய நேரடி விளையாட்டுக்கள் மூலமே கிடைக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இணையவழி விளையாட்டினால் வெளியில் உள்ள சமூகத்துடன் தொடர்புகளைப் பேணுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைவதுடன், குடும்ப உறவுகளுடன் செலவிடும் நேரமும் குறைவடைகிறது. அத்துடன் வெளிக்களச் செயற்பாடுகளில் ஆர்வம்குறைதல், உடற்சோர்வு, உண்மை வாழ்வியலை உணர்ந்து கொள்ள முடியாத நிலை ஏற்படல் ஆகியனவும் பிரச்சினைகளாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

எம்மால் மறந்துபோன பாரம்பரிய விளையாட்டுக்கள் ஏராளமுள்ளன. இதைத் தற்போதைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதும், பழைய கால ஞாபகார்த்தமாகவும், எவ்வளவு தான் இணையவழி விளையாட்டுக்கள் வந்தாலும் பாரம்பரிய விளையாட்டுக்கள் மூலம் கிடைத்த மெய்மை வாழ்க்கை அனுபவங்கள் இவற்றில் கிடைக்காது என்பதைச் சமூகத்திற்கு உணர்த்துவதும் அவர்களைப் பாரம்பரிய விளையாட்டை விளையாடத் துண்டவும் துணை செய்வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



றெஜினா தவரெத்தினம்
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# செம்பனை பயிர் செய்கை, எண்ணெய் இறக்குமதி தடை;

## ஜனாதிபதிக்கு கலாநிதி சிவப்பிரகாசம் பாராட்டு



**மாவத்தகம தினகரன் நிருபர்**

இலங்கையில் செம்பனை பயிர் செய்கைக்கும் மற்றும் செம்பனை எண்ணெய் இறக்குமதிக்கும் தடை விதித்தமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

பாம் எண்ணெய் இறக்குமதி தடை விதிப்பு தொடர்பில் அவர் ஜனபதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,...

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' மற்றும் 2021 ஏப்ரல் 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் இல 21/87 சம்பந்தமான ஊடக அறிக்கையின் படி, இலங்கையில் செம்பனை எண்ணெய் இறக்குமதி மற்றும் செம்பனை பயிர்செய்கைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதையிட்டு ஜனாதிபதிக்கு பொது மக்கள் சார்பாக மனித அபிவிருத்திதாபனம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. அண்மைக் காலமாக இலங்கையில் செம்பனை பயிர்செய்கைக்கு எதிரான பல்வேறு எதிர்ப்புகள் இடம்பெற்று வந்தன. சுகாதாரம்,சுற்றுப்புறச் சுழல் மற்றும் சமூக,பொருளாதார பாதிப்புகள் என்பவற்றை கருத்திற் கொண்டு,செம்பனை உற்பத்தியானது இலங்கைக்கு ஏற்றதொரு பயிர்செய்கை யல்ல என்றும் இதனால் கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும்,மதகுருமார்கள் சுற்றாடல் குழுக்கள்,பொதுமக்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் குறிப்பிட்டு வந்தனர்.

இது குறித்து மனித அபிவிருத்திதாபனமும் ஜனாதிபதியின் கவனத்திற்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. இவ்வடிப்படையில் செம்பனைஎண்ணெய் மற்றும் செம்பனை பயிர் செய்கை என்பவற்றிலிருந்து இலங்கையை விடுவிப்பது சம்பந்தமாக அரசாங்கம் தீர்மானித்தது குறித்து எமது மனபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை மக்களை பாதுகாப்பது குறிப்பாக பெருந்தோட்ட மக்களை பாதுகாப்பது சம்பந்தமாக எடுக்கப்பட்ட இந்த தீர்மானம் காலத்தால் எடுக்கப்பட்ட சிறந்த தீர்மானமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.






மலையக தமிழ் கல்லூரிகளில் முன்னனியில் திகழும் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி மலையக கலை,கலாசாரம் மற்றும் கல்விக்கு அரும்பங்காற்றிவருகிறது. இக்கல்லூரி 112 வருட பாரம்பரியம் கொண்ட கல்லூரியாகும். பல சாதனையாளர்களை உருவாக்கிய இக்கல்லூரியின் 1998ம் வருட சாதாரண தர மாணவர்களின் மீள் இணைதல்(Reunion) இம்மாதம் 24ம் திகதி (24.04.2021) காலை 9 மணியளவில் பண்டாரவளையில் இடம்பெறவுள்ளதாகவும் மேலதிக விபரங்களுக்கு 055 4922763 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறும் ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

# கொழும்பிலிருந்து வெளியேறுவோருக்கு இன்று முதல் PCR பரிசோதனைகள்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்வோருக்கு இன்றுமுதல் எழுந்தமானமாக பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தையொட்டி கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணிப்போரை இலக்காகக் கொண்டே மேற்படி பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புது வருட காலத்தில் பயணத் தடை அல்லது ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கம் கிடையாது என தெரிவித்துள்ள அவர் மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயல்படுவது முக்கியம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் இதுவரை 93 ஆயிரத்து 992 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

# விலைமனு அழைத்தல்

## பிரதான அமைச்சு

## சப்ரகமுவ மாகாண சபை

01. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணப்பணிகளிற்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. இவ்விலைமனுவானது, திறந்த தேசிய போட்டிரீதியிலான விலைமனுகோரல் முறைமையினடிப்படையில் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன், மதிப்பீட்டு பெறுமானம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைந்த கைத்தொழில்களிற்காக அரச நிதிச் சுற்றறிக்கை இல.04/2016(II) இன் பிரகாரம் பிராந்திய முக்கியத்துவம் அடிப்படையில் விலைமனுதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எவ்வாறாயினும், குறித்த தரங்களில் தகைமை பெற்றுள்ள விலைமனுதாரர்கள் முன்வராதபட்சத்தில், மாகாணத்தினுள் அதற்கு மேற்பட்ட தரத்தின் விலைமனுதாரர்களின் விலைமனுக்களை கவனத்தில் கொள்ளப்படும். மாகாணத்திலும் தகைமை பெற்றுள்ள விலைமனுதாரர் ஒருவர் முன்வராத பட்சத்தில், தேசிய மட்டத்தில் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

03. சித்திகரமான விலைமனுதாரர், அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், நிர்மாணத்துறை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட தரமொன்றில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கண்டிப்பானதாகும்.

04. இதற்கான மேலதிக விபரங்களை, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரித்தான பிராந்திய பொறியியலாளரிடம் அல்லது சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2021.04.19 முதல் 2021.05.05 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வார வேலை நாட்களில், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி எழுத்துருவ விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து, விலைமனுப்படிவங்களை சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

06. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சில் 2021.05.06 அன்று பி.ப.01.00 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக, அவ்வேளையில் சமுகமளித்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

| தொடர் இலக்கம் | குறியீட்டு இலக்கம் | நிறுவனம் மற்றும் வேலை விடயம் | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | மீளளிக்கப் படாத விலைமனு கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை | ICTAD தரம் | வேலை மதிப்பீட்டு பெறுமானம் மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | CM/ PSDG/2021/01 | எம்பிலிபிட்டிய மாவட்டப் பொது வைத்தியசாலை அம்பியூலன்ஸ் கராஜ் மற்றும் சாரதி ஓய்வறையை நிர்மாணித்தல் | எம்பிலிப்பிட்டிய | 6000.00 | 318,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 21.2 |
| 02 | CM/ PSDG/2021/02 | சந்திரிகாவெல பிராந்திய வைத்தியசாலை தாதியர் உத்தியோக இல்லம் மற்றும் சிற்றூழியர் ஓய்வு அறையை மேம்படுத்தல் | எம்பிலிப்பிட்டிய | 3000.00 | 80,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 5.4 |
| 03 | CM/ PSDG/2021/03 | தெருன்னாசே கம சுகாதார மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் | எம்பிலிப்பிட்டிய | 4500.00 | 163,000 | C5,C6,C7,C8, அல்லது C9 | 10.8 |
| 04 | CM/ PSDG/2021/04 | சங்கபால சுகாதார மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் | எம்பிலிப்பிட்டிய | 4500.00 | 161,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 10.7 |
| 05 | CM/ PSDG/2021/05 | பாலம் கோட்டே தோட்ட வைத்தியசாலை மருத்துவரின் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல் | பெல்மடுல்ல | 2500.00 | 42,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 2.8 |
| 06 | CM/ PSDG/2021/06 | பாலம் கோட்டே தோட்ட வைத்தியசாலை கட்டிடத்தை புதுப்பித்தல் | பெல்மடுல்ல | 2500.00 | 52,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 3.4 |
| 07 | CM/ PSDG/2021/07 | பனாவல ஆயுர்வேத வைத்தியசாலையின் கூரை சிவிலிம் மற்றும் மின்சாரத் தொகுதியை புதுப்பித்தல் | தெஹிஓவிட்ட | 3000.00 | 108,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 7.2 |
| 08 | CM/ PSDG/2021/08 | மாட்டுவாகல ஆரம்ப மருத்துவ அலகை நிர்மாணித்தல் | இரத்தினபுரி | 2500.00 | 75,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 5.0 |
| 09 | CM/ PSDG/2021/09 | புஸ்ஸெல்ல ஆரம்ப மருத்துவ அலகை நிர்மாணித்தல் | இரத்தினபுரி | 4000.00 | 155,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 10.3 |
| 10 | CM/ PSDG/2021/10 | கலல்எள்ள சுகாதார மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் | பெல்மடுல்ல | 3500.00 | 150,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 9.9 |
| 11 | CM/ PSDG/2021/11 | அளுத்நுவர ஆரம்ப மருத்துவ சிகிச்சை அலகிற்கான புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | ரம்புக்கண | 7500.00 | 401,000.00 | C5 மற்றும் C4 | 26.7 |
| 12 | CM/ PSDG/2021/12 | எஹலியகொட ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரேத அறைக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் | இரத்தினபுரி | 2500.00 | 81,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 5.4 |
| 13 | CM/ PSDG/2021/13 | கொடகம்பல சிகிச்சை மத்திய நிலையத்தின் இரண்டு மாடி ஆதார மருத்துவ சிகிச்சை அலகை நிர்மாணித்தல் படிநிலை 2 | தெஹிஓவிட்ட | 5500.00 | 173,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 11.5 |
| 14 | CM/ PSDG/2021/14 | வெலிகெபொள சுகாதார மருத்துவ அதிகாரியின் பிரிவில் பொல்லமுற பெலிமாலியத்த மருத்துவ நிலையத்தை நிர்மாணித்தல் | பலாங்கொட | 5500.00 | 173,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 11.5 |
| 15 | CM/ PSDG/2021/15 | வெலிகெபொள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தல்கஸ்கந்த ஹடன்கல சுகாதார மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் | பலாங்கொட | 5500.00 | 180,000.00 | C5,C6,C7,C8, அல்லது C9 | 12.0 |

**தலைவர்**
**பிரதான அமைச்சின் பெறுகைக்குழு,**
**பிரதான அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

**தொலைபேசி - 045-2223298**
**045-2222204**
**தொலைநகல் - 0452223298**


திகதி 08.04.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4451
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 36,320,320.00
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 7 4 2 7 1 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,272,394.00

மஹஜன சம்பத அவுருது கிருல விஷேட சீட்டிழுப்பு

01லட்சம் அதிர்ஷ்ட இலக்கம்: 40554
02லட்சம் அதிர்ஷ்ட இலக்கம்: 28751

| | | | | | |
|---|---|---|---|---|---|
| LED TV வெற்றி இலக்கம் | 2699054 | 2755154 | 1492902 | 1902513 | 1647558 |
| தங்க நாணயம் வெற்றி இலக்கம் | 2984507 | 2098372 | 2718033 | 1042650 | 2646461 |
| | 2004119 | 2995384 | 2576802 | 2901989 | 0118832 |

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2746
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,023,940.00
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 16 47 53 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,005,248.00

**Mega POWER மெகா பவர்** கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 811
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,859,000.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 127,990,214.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: D
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கங்கள்: 35 37 47 79

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 488
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,628,460.00
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 15 23 43 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,069,194.00

**செவன**
சீட்டிழுப்பு இலக்கம் : 329
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,398,340.00
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 19 28 36 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

08.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,009,286
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.56,230,060.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 03 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 115

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தமித்த விக்கிரமசிங்க நேற்று தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டபோது, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. படம்: சுதத் நிஷாந்த

## கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார

# ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் சபையில் சமர்ப்பிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை வெளிவிவகார அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பித்ததுடன், சட்டமூலத்தின் மீது ஆழமான விவாதம் நடத்தப்பட வேண்டுமென பிரதான எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்தது.

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவானது, விசேட பொருளாதார வலயமொன்றை தாபிப்பதற்கும், பதிவு செய்தல், உரிமங்கள், அதிகாரவளிப்புக்கள் மற்றும் வேறு அறங்கீகாரங்களை அளிப்பதற்கும் செய்பாடு செய்யும்.

பொருளாதார வலயத்திலிருந்து வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் கொண்டுநடாத்துவதற்கும் வியாபாரங்களை மேம்பாடுகளை ஊக்குவிப்பது ஆணைக்குழுவின் கீழ் இடம்பெறும்.

சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித் தொழில், நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பம், வியாபார வழிமுறைகள், வெளியாட்களை பணிக்கு அமர்த்தல், கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழில்பாடுகள், பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும் வேறு துணை சேவைகளை மேம்படுத்துவது ஆணைக்குழுவின் நோக்கமாக அமையும்.

சர்வதேச பிணக்குத் தீர்வு நிலையமொன்றை தாபிப்பதற்கும் நகர வசதி தொழிற்பாடுகள் மற்றும் பொருளாதார வலயத்தினுல் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றங்களை மேம்படுத்துவதற்கும் ஏனைய கருமங்களை ஏற்பாடு செய்வதும் சட்டமூலத்தின் மூலம் உருவாக்கப்படும் ஆணைக்குழுவின் பணியாகவுள்ளது.

இச்சட்டமானது நேற்று பாராளுமன்றில் முதலாம் வாசிப்புக்காக விடப்பட்டதுடன், வெள்ளிக்கிழமை இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டமானது நிறைவேற்றப்பட்டதும் 2021ஆம் ஆண்டின் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுக் சட்டமாக அடையாளப்படுத்தப்படும்.

இதேவேளை, இச்சட்டமூலத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, போர்ட் சிட்டி என்பது தனியான ஒரு நாடாகும். ஒரு நாட்டில் இரண்டு சட்டங்களை உருவாக்குகின்றனர். இச்சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றார்.

# கண்டி மாவட்டத்தில் கொரோனா ஜனாசாக்களை அடக்கம் செய்ய 05 இடங்கள் தெரிவு



கண்டி மாவட்டத்தில் மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் நிஹால் வீரசூரியவிடம் யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினரும் பிரபல்ய சமூக செயற்பாட்டாளருமான வசீர் முக்தார் விடுத்த கோரிக்கைக்கு இணங்க கொரோனா ஜனாசாக்களை அடக்கம் செய்ய மத்திய மாகாண பிரதான செயலாளர் ராஜரட்ன தலைமையில் மத்திய மாகாணத்தில் பொருத்தமான மையவாடியினைத் தெரிவு செய்வதற்காக ஒரு பிரத்தியேகமான ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் வழிகாட்டலுடன் கண்டி மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழக் கூடிய ஜும்ஆப் பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி 05 இடங்களை தெரிவு செய்து மாகாணப் பணிப்பாளரிடம் வசீர் முக்தார் பரிந்துரை செய்துள்ளார்.

அந்த வகையில் அக்குறணை தாய் பள்ளி ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடி,திகன கும்புக்கந்துர ஜம்ஆப் பள்ளிவாசல் மைய வாடி,யட்டி நுவர தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள தெஹிஅங்கை ஜும்ஆப் பள்ளிவாசலின் மையவாடி,உடுநுவர கெட்டக்கும்புர ஹந்தஸ்ஸ ஜும்ஆப் பள்ளிவாசலின் மையவாடி, தெல்தோட்டை ரலிமங்கொட ஜும்ஆப் பள்ளிவாலின் மையவாடி முதலிய ஐந்து மையவாடிகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தற்போது மாகாண பிரதான செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள பிரத்தியோகமான குழுவினர் கடந்த வாரம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் இந்த ஐந்து இடங்களில் பரிசீலனை செய்து ஓர் இடத்தை அடையாளம் கண்டு மிக விரைவில் தருவார்கள் என்று யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினரும் பிரபல்ய சமூக செயற்பாட்டாளருமான வசீர் முக்தார் தெரிவித்துள்ளார்.


## இலங்கை முதலீட்டு சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இரு வருட காலப்பகுதிக்கு ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் பொதுவான சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு

**Contract No.: BOI/ZM/HEPZ/MT/01/2021**

1. **இரு வருட காலப்பகுதிக்கு ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் பொதுவான சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு** ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை முதலீட்டு சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான தகுதிக்காக, விலைமனுதாரர் நிகரான தன்மையிலுள்ள வேலையில் ஆகக் குறைந்தது மூன்று வருட (03) முன்னைய அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலய, இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 034-2269752) விலைமனுக்கோரல் ஆவணங்களை ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் பரீட்சிக்கலாம்.

   **2021.04.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலய இலங்கை முதலீட்டு சபையின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.
5. **2021.04.08 ஆம் திகதியிலிருந்து 2021.04.28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில்** மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபா மற்றும் பெசேவ ஆகியவற்றை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலய, இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. **2021.04.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அல்லது அதற்கு முன்னராக** கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர், இலங்கை முதலீட்டுச் சபை, ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயம், பொரளுகொட, போறுவாதண்ட என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவற்றை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் **2021.07.28** ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் **140,000 ரூபா பெறுமதியுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.** விலைமனுப்பிணையானது **2021.08.27 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை முதலீட்டு சபை.**



Repeat Your Ad For Better Offers



## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மேல் மாகாணம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகைப்படுத்தலின் கீழ் வெவ்வேறாக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| விலைமனு குறிப்பிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைக் கோரல் கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| **Purchasing Of ETU & HLC Equipment** | | | | |
| BME/MEQ/PSSP/ ETU& HLC/2021 | Multipara Monitor | 06 | 2,500.00 | 70,000.00 |
| | Defibrillator | 04 | | |
| | Spinal Board | 12 | | |
| | Tuning Fork | 15 | | |
| | BP Apparatus | 06 | | |
| | ENT Set | 06 | | |
| | Stethoscope | 06 | | |
| | Height Measuring Rod | 06 | | |
| | Weighing Scales For Infant | 06 | | |
| | Length Board For Infant | 06 | | |
| | Examination Bed | 06 | | |
| **Purchasing Of MOH Office Equipment** | | | | |
| BME/MEQ/PSSP/ MOH/2021 | Mini Auto Clave | 13 | 1,500.00 | 20,000.00 |
| | Examination Bed | 15 | | |
| | Large Sterilizer | 15 | | |
| | Speculum M-160, L-30, S-16 | - | | |
| | Sport Lamp | 15 | | |
| | Dressing Trolley | 02 | | |
| | Scissors | 47 | | |
| | Vumselum Forceps | 31 | | |
| | Uterine Sound | 33 | | |
| | Mosquito Artery | 10 | | |
| | Kidney Tray | 20 | | |
| | Sponge Holder | 20 | | |
| | Covering Screen | 05 | | |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
2. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   i. மேற்குறிப்பிடப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்வதற்காக செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ii. உற்பத்தியாளர் அல்லாவிடில் விலைமனுதாரருக்கு இந்த உருப்படிகளை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளர்களினால் எழுத்து மூல அனுமதி இருத்தல் வேண்டும்.
   iii. குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் இயைபான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனுபவம்
   iv. உபகரணங்களை விற்பனை செய்வதற்காக NMRA சான்றிதழ்
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத் தொகுதி, 04வது மாடியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் 2021-04-16ஆம் திகதி முதல் 2021-05-07ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.
4. களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியை பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. இரு பிரதிகளில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் Purchasing of ETU & HLC Equipment என்பதற்கு BME/MEQ/PSSP/ETU&HLC/2021, Purchasing of MOH Equipment என்பதற்கு BME/MEQ/PSSP/MOH/2021 எனக் குறிப்பிட்டு 2021-05-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. மேலதிக விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 034-2222610, 034-2222367 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**களுத்துறை.**



## பெறுகை அறிவித்தல்

**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு**
**சபரகமுவ மாகாண சபை**

### கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் மாகாண நிலையான அபிவிருத்தி மானிய நிதியத்தின் (PSDG) கீழ் 93 வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இந்த வேலைகளுக்கான ஆவணங்கள் மற்றும் மேலதிக விபரங்களை www.sg.gov.lk எனும் இணைய தளத்தில் உள்ள கேள்வி அறிவித்தல் இணைய பக்கத்திற்குச் சென்று அல்லது www.moe.sg.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணைய தளத்திற்குள் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
02. இந்த விலைக்கோரல்கள் திறந்த போட்டி ரீதியான பெறுகை செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதுடன் சகல வேலைகளினதும் பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கும் குறைவாக உள்ளதால் 04/2016 (ii) மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைமனுதாரர்கள் தெரிவு இடம்பெறும். அதேபோல் அந்தச் சுற்றறிக்கைக்கு இயைபான பின்னர் வெளியிடப்பட்ட 03/2020 மற்றும் 03/2020(i)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைகளும் பெறுகை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.
03. மேற்படி வேலைகளுக்கான பெறுகை ஆவணங்களை 2021-04-21ஆம் திகதி முதல் 2021-05-11ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து இந்த அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
04. சகல விலைமனுதாரர்களும் ஒவ்வொரு நிர்மாணத்திற்காகவும் அந்த வேலையின் எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதிக்கு இயைபாக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் 2021-05-12ஆம் திகதி முதல் 2021-10-06ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் செயலாளர், கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி எனும் பெயரில் இயைபுடைய வேலையின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி அல்லது விலைக்கோரல் பிணைக்கான பணத்தை அமைச்சுச் செயலாளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது விலைக்கோரல் பிணை முறியின் மூலப் பிரதியை கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

    பூர்த்தி செய்யப்பட்ட அந்தந்த வேலைகளுக்கு இயைபான விலைமனுக்களை 2021-05-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத்தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சின் கணக்காளர் அறைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். சகல கேள்விக்காகவும் நகல் பிரதியொன்றை, அதுபற்றி கடித உறையில் குறிப்பிட்டு வேறொரு கடித உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்துகொள்ளலாம்.
06. இந்த விலைக்கோரல் தொடர்பாக எழும் எந்தவொரு சிக்கல் தொடர்பில் அலுவலக நேரத்தினுள் தேவையான விபரங்களை அமைச்சின் தொலைபேசி இலக்கம் 045 -2222542 , தொலைநல் இலக்கம்: 045-2228042 மின்னஞ்சல் **edusabaram@gmail.com** ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சித்திகரமான விலைமனுதாரருக்கு கேள்வியைக் கையளித்தலானது அவரது பதிவு பெறுமதிக்கு வரையறுக்கப்படும். கேள்விப் படிவங்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
07. சகல விலைமனுக்களும் 2021-09-07ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்**
**கலாசார நடவடிக்கைகளுக்கான அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

**2021-04-10**

# கற்கோவளம் மீனவர்கள் மூவரைக் காணவில்லை

**யாழ். விசேட நிருபர்**

கடற்தொழிலுக்குச் சென்ற கற்கோவளம் மீனவர்கள் மூவரைக் காணவில்லை என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதன்கிழமை படகு ஒன்றில் தொழிலுக்குச் சென்ற மூவரும் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கரை திரும்ப வேண்டிய நிலையில் இரவு வரை தொடர்புகளின்றி உள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கற்கோவளத்தைச் சேர்ந்த வல்லிபுரம் பழனிவேல் (வயது47), கதிர்காமு சோதிலிங்கம் (வயது 47) மற்றும் க.தவச்செல்வம் (வயது40) ஆகிய மூவரையே காணவில்லை என உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்கள் மூவரையும் தேடி கடற்படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 26 ஆயிரத்து 573.5 ஏக்கர் சிறுபோக பயிர்ச் செய்கை

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளம் உள்ளிட்ட ஒன்பது பாரிய நீர்ப்பாசன குளங்களிலும் இவ்வாண்டு 26 ஆயிரத்து 573.5ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் அடங்குகின்ற இரணைமடு குளம் உள்ளிட்ட 9 குளங்களின் கீழான சிறுபோக பயிர்செய்கை கூட்டங்கள் நடைபெற்று பயிர் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

அதனடிப்படையில் அக்கராயன் குளத்தில் 2783 ஏக்கர் நிலப்பரப்பிலும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 561ஏக்கரும் குடமுருட்டி குளத்தின் கீழ் 365 ஏக்கரும் புதுமுறிப்பு குளத்தின் கீழ் 924 ஏக்கரும் வன்னேரிகுளத்தின் கீழ் முதற்கட்டமாக 123 ஏக்கரும் இரண்டாம் கட்டமாக 123 ஏக்கரும் இரணைமடு குளத்தின் கீழ் சுமார் 17 ஆயிரத்து 775 ஏக்கர் நிலப்பரப்பும் கல்மடு குளத்தின் கீழ் 1937 ஏக்கரும் என 24 ஆயிரத்து 590 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் அக்கராயன் குளத்தில் 323.5 ஏக்கர் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 50 ஏக்கர் குடமுருட்டி குளத்தின் கீழ் 25 ஏக்கர் புதுமுறிப்பு குளத்தின் கீழ் 100 ஏக்கர் வன்னேரி குளத்தின் கீழ் முதற்கட்டமாக 30 ஏக்கரும் இரண்டாம் கட்டமாக 50 ஏக்கரும் இரணைமடு குளத்தின் கீழ் 665 ஏக்கரும் கல்மடு குளத்தின் கீழ் 40 ஏக்கர் பிரமந்தனாறு குளத்தின் கீழ் 500 ஏக்கரில் கனகாம்பிகை குளத்தின் கீழ்200 ஏக்கரும் உப உணவுச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

# ஈழத்துக் குருசாமிகள் ஒன்றிய பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண குருசாமிகள் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் கருத்தரங்கும் இன்று 10ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஐயப்ப தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஈழத்து சபரிமலை ஐயப்ப தேவஸ்தான குரு சிவசிறி. கி. ஹரிஹர சுத சிவாச்சாரியாரின் தலைமையில் நடைபெறும். இதில், புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் இந்துமத விவகார இணைப்பாளர் இராமச்சந்திர குருக்கள் (பாபு சர்மா) பிரதம அதிதியாகவும் நல்லை திருஞானசம்பந்தன் ஆதீனத்தின் தலைவர் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாண சிவகுரு ஆதீனத்தின் தலைவர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் சிறப்பு விருந்தனராகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். இதனை இதன் செயலாளர் க. கோடீஸ்வரன் தெரிவித்தார். இதன் தலைவர் சிவசிறி கீ. ஹரிகரகர சுத சிவாச்சாரியார், பொருளாளர் சிவசிறி ஏ. ஐயப்பதாஸக் குருக்கள் ஆகியோரும் இதில் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக தௌபீத் கடமை ஏற்பு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீத் நேற்று (09) தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சம்மாந்துறையை பிறப்பிடமாக கொண்ட இவர், வெலிசற சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் அத்தியட்சகராகவும், நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் ராகம போதன வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்திய அத்தியட்சகராகவும், சுகாதார அமைச்சின் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகளின் ஆய்வுகூடங்களுக்கான அத்தியட்சகராகவும் கடமையாற்றி வந்ததும் குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வைபத்தின் போது தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவிடமிருந்து பூங்காவனம் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் இதழொன்றின் முதற் பிரதியைப் புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்கின்றார். சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ரிம்ஸா முஹம்மத், ஊடகவியலாளர் ராதா மேத்தா ஆகியோர் அருகில் இருக்கின்றனர்.

(படப்பிடிப்பு இன்பாஸ் ஸலாஹுதீன்)

**உள்ளூராட்சித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**

**2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(ஏ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2021.04.22ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**

09.04.2021

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**
**7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இல.: WGSWD&EIP/ACQ/MH/06

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல: 4-3/10/2012/LRB/117

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள், 2021 ஆம் வருடம் 05 மாதம் 03 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.03.08 ஆம் திகதிய 2218/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : மேல் மாகாணம் |
| 2. | மாவட்டம் | : கொழும்பு |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : மஹரகமை. |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 526/B - கங்கொடவில தெற்கு. |
| 5. | கிராமம் | : கங்கொடவில. |
| 6. | வரைபட இல. | : ஆ.வ.இல. கொ.9679 |
| 7. | காணியின் பெயர் | : மில்லகஹ கும்புர மற்றும் மில்லகஹ தெனிய மற்றும் தெபாஎல. |
| 8. | துண்டு இல. | : துண்டு இல. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 28, 30, 32. இருபத்தொன்பது (29) காணித் துண்டுகள். |
| 9. | விஸ்தீரணம் | : 1.9237 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு,**
**சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு,**
**சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்**
**காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல.3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை, இராஜகிரிய.**
**2021.04.07**


**அறிவித்தல்**

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைப்பு அறிவித்தல்
கம்பனியின் பெயர்:
**மடித்த அட்வென்ச்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம் : PV 00236952
கூட்டிணைப்புத் திகதி: 22.03.2021
பதிவு முகவரி: **இல. 81, S De S ஜயசிங்ஹ மாவத்த, கொஹுவல, நுகேகொட**
**கம்பனி செயலாளர்**

**அறிவித்தல்**

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**எசெல் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம் : PV 00237042
கூட்டிணைப்புத் திகதி: 22.03.2021
பதிவு முகவரி :
**இல. 81, S De S ஜயசிங்ஹ மாவத்த**
**கொஹுவல, நுகேகொட**
**கம்பனி செயலாளர்**

Repeat Your ad For Better Offers

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

சிறு விளம்பரம்

சொந்த விடயம்

வேலைவாய்ப்பு

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

தங்கொட்டுவையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு தங்கி வேலை செய்யக்கூடிய (30 நபர்களுக்கு) இந்திய உணவு வகைகள் சமைக்கக்கூடிய சமையற்காரர் உடனடியாக தேவை. நேரில் வரவும். இல.18, வெலிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு - 077-2884959/ 077-2217989. 027446

524 முத்திரைகள், நாணயங்கள்

பழைய முத்திரைகள் நாணயங்கள் மற்றும் வங்கி தாள்கள் கண்காட்சி இலங்கை சுதந்திர முத்திரை சேகரிப்போர் சங்கத்தினால் ஏப்ரல் 9, 10, 11ஆம் திகதிகளில் கொழும்பு பொது வாசிகசாலையின் நுழைவாயில் மண்டபத்தில் நடைபெறும். 077 9785111 ஜகத். 024873

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இரண்டு மாடி வீடொன்று விற்பனைக்கு உண்டு. பொரள்ள. 98 இலட்சம் மாத்திரம். தொ.பே. 0718373764. 028189


**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**ரண்மினிதென்ன மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா அரங்கு விலைமனுக்களுக்கான அழைப்பு**

**ரண்மினிதென்ன ரெலி சினிமா கிராமத்தில் படத்திற்கான தொகுதிகளை நிர்மாணித்தல் (05 கிராமிய வீடுகள் மற்றும் வளவ்வ)**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு ரண்மினிதென்ன ரெலி சினிமா கிராமத்தில் படத்திற்கான தொகுதிகளை நிர்மாணித்தலுக்காக (05 கிராமிய வீடுகள் மற்றும் வளவ்வே) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ரண்மினிதென்ன மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா அரங்கின் சார்பாக, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 91 நாட்களாகும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதியை பெறும் பொருட்டு, வெற்றிகரமான விலைமனுதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவு.

   ஆ) படப்பிடிப்பு அல்லது தொலைக்காட்சி தொழிலுக்காக நிர்மாணத்தில் ஆகக் குறைந்தது 7 வருட அனுபவம்

   இ) படப்பிடிப்பில் அல்லது தொலைக்காட்சி தொழிலில் 7 வருட அனுபவமுள்ள தயாரிப்பு வடிவமைப்பாளர், கலை பணிப்பாளர் அல்லது நிர்மாண முகாமையாளர் ஆகியவர்களை பணியில் ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, 'செத்சிரிபாய II ஆம் கட்டம்' 4 ஆம் மாடி, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2786094/ 077-7444719.

5. 2021 ஏப்ரல் 12 ஆம் திகதியிலிருந்து 2021 மே 3 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3,500 ரூபா) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, 'செத்சிரிபாய II ஆம் கட்டம்' 4 ஆம் மாடி, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2021 மே 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 4 ஆம் மாடி, 'செத்சிரிபாய, II ஆம் கட்டம்' பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், பத்தரமுல்ல, 'II ஆம் கட்டம், செத்சிரிபாய', 4 ஆம் மாடியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

7. விலைமனுக்கள் 2021.05.03 ஆம் திகதியிலிருந்து 77 நாட்கள் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள காலப்பகுதியில் அல்லது விலைமனுக்களை திறப்பதற்கான விதிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட காலத்தினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் முறைமையிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் (விலைமனு உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
- செயலாளர், தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு இராஜாங்க அமைச்சின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 130,000 ரூபா தொகைக்கான விண்ணப்பிக்கும் வேளையில் நிபந்தனையற்ற மீள்செலுத்தல்.
- ஒப்பந்தத்தை தயாரிக்கும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் (03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்)
- அட்டவணையின் 16.0 உபவாசகத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

9. ரண்மினிதென்ன வளாகத்தில் 2021.04.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக வேலைத்தளத்தை பரீட்சிக்கவும் விலைமனுக்கோரல் விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கவும் ஆரம்ப கூட்டமொன்று நடைபெறும். இந்நோக்கத்திற்காக போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் எவையேனும் வழங்கப்படமாட்டாது.

**செயலாளர்,**
**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும்**
**கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,**
**4 ஆம் மாடி, 'செத்சிரிபாய, II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2021**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2021ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2021.05.11ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணப்பங்களுக்கும் விண்ணப்பப்படிவக் கட்டணமாக 1500.00 ரூபா தொகை அறவிடப்படும். காசோலை, காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் நுகேகொடை கங்கொடவில, சுபத்ராராம வீதி, இல.117, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இந்தச் சபையின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**01. அச்சு வேலைகள்**

I. பிரிண்டிங்
II. பெப்ரிக் பிரிண்டிங் (டீசேர்ட், கெப்)

**02. வழங்கல்கள்**

I. காகிதாதிகள் (புகைப்படப் பிரதி தாள், எழுதும் தாள்கள், நகல் பிரதி தாள்கள், கணனி தாள்கள், பேனை, பென்சில் மற்றும் ஏனைய சகல காகிதாதிகள்)
II. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
III. அலுவலக தளபாடங்கள்
IV. அலுவலக உபகரணங்கள் (கணனிகள், கணனி அச்சுப் பொறிகள், ஸ்கேன் இயந்திரங்கள், UPS மற்றும் ஏனைய கணனி துணைப்பாகங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், வேறாக்கும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் ஏனைய அது சார்ந்த துணைப்பாகங்கள்)
V. வளிச்சீராக்கி இயந்திரங்கள்
VI. தொலைபேசி முறைமைகள்
VII. மோட்டார் உதிரிப்பாகங்கள்
VIII. டயர், டியூர், பற்றரி போன்றவற்றை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
IX. கணனி உபகரணங்கள் மற்றும் கணனி காகிதாதிகள்,
X. கெமரா, கெமரா வில்லைகள், பாதுகாப்பு கெமரா முறைமைகள், ட்ரோன் இயந்திரங்கள்
XI. அச்சுப் பொறிகள் மற்றும் அது சார்ந்த உருப்படிகள் (டேட்டா கார்ட் அச்சிடும் இயந்திரம், டேட்டா பிளாஸ்டிக் கார்ட்)
XII. பிரின்டிங் ரிப்பன்
XIII. புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / அச்சுப் பொறிகளுக்கான டோனர், கார்ட்ரிச், ரிபன்)
XIV. துணி உற்பத்திகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சீருடைகள் மற்றும் கழுத்துப் பட்டிகள், திரைச் சீலைகள், முகக் கவசங்கள் (மாஸ்க்), கிருமிநாசினிப் பொருட்கள், தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகைகள், கை துடைப்பான்கள்)
XV. CCTV கமரா

**03. சேவைகள் (திருத்தவேலைகள்)**

I. பதாகைகள் மற்றும் பெயர்பலகைகள் வரைதல் மற்றும் பொருத்துதல்
II. உலோக வெல்டிங் வேலைகள்
III. தட்டச்சு, கூட்டல் இயந்திரம், ரோணியோ இயந்திரம், கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் மின் உபகரணங்கள்
IV. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
V. சீருடைக்கான துணி வழங்குதல்
VI. மோட்டார் வாகன திருத்தவேலைகள் (டீசல் மற்றும் பெட்றல்) (தொழில்நுட்ப திருத்தவேலைகள், தகர வேலைகள், பூச்சு வேலைகள், மின்வேலை பற்றிய சிறந்த ஆற்றல் மற்றும் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.)
VII. வாகன வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள்
VIII. கணனி மென்பொருள் மற்றும் கணனி வலையமைப்பிடுதல்
IX. திரைச்சீலைகள், ரெக்ஸின் வகைகள், கம்பளங்கள், ரேலிங் கொக்கிகள் மற்றும் துணைப்பாகங்கள்
X. மின்னியலாளர்கள்
XI. மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கு வழங்குதல்
XII. பகுதி பிரிப்பு (Partition) வேலையாட்கள்
XIII. வாகனங்களுக்கான தவணை சேவைகள்
XIV. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்
XV, பாதுகாப்பு சேவைகள்

**வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பான நிபந்தனைகள்**

1. முழுமையற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் அதிகாரத்தை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

2. தொடர்பு கொள்ளும் போது பதிலளிக்கத் தவறும் அல்லது குறித்த காலத்திற்கு தேவையான பொருட்களை வழங்கத் தவறும் அல்லது வழங்கப்படும் பொருட்களை குறித்த மாதிரிக்கு அமைவாக அல்லது மாதிரிகளுடன் பொருத்தாதவிடத்து முன்றிவித்தலின்றி அவர்களது பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படும். (அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படும்)

3. வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. வழங்கலுக்கான விலைகள் பதிவுசெய்துள்ள வழங்குநர்களின் பட்டியலில் இருந்தே கோரப்படும். எனினும் தேவைப்படும் போது வேறு வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

4. பொருட்களுக்காக முன்கூட்டியே கொடுப்பனவுகளை எதிர்பார்ப்பவர்கள் பதிவு செய்யப்பட மாட்டார்கள். குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் கால எல்லை வழங்கப்படல் வேண்டும்.

5. பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் குறித்த நிறுவனம் பரிசீலிக்கப்பட்டு, பொருட்கள் அல்லது சேவைகள் வழங்குதல் பற்றி பரிந்துரையொன்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் அக்குழுவினால் பரிந்துரை செய்யப்படாத நிறுவனங்களை பதிவு செய்யப்படமாட்டாது.

6. சபையினால் விலைகள் கோரப்படும் வேளையில் அதற்கு பதிலளிக்காத நிறுவனங்களிடமிருந்து மீண்டும் விலைகள் கோரப்படமாட்டாது.
   (சகல விண்ணப்பங்களும் 'தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை, இல.117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை,**
**இல.117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை.**
2021-04-09.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளரை கட்சியே தீர்மானிக்கும்

### அம்பாறையில் முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா



கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக முதலமைச்சர் வேட்பாளரை கட்சி தான் முடிவு செய்யும் எனவும், கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளவே தான் வருகை தந்துள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவருமான பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திற்கு நேற்றுமுன்தினம் (8) விஜயம் செய்த அவர், சாய்ந்தமருது பகுதியிலுள்ள தனியார் விடுதியில் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முஸ்லிம் பிரதேச அமைப்பாளர்களை சந்தித்து சமகால அரசியல் நிலைகள் தொடர்பாகவும், அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வலுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுதந்திர கட்சியை வலுப்படுத்தும் இக்கலந்துரையாடலில், அமைப்பாளர்கள் சிலர் அவரை எதிர்வரும் கிழக்கு மாகாண தேர்தலில் முதலமைச்சராக களமிறங்க வேண்டும் என ஒரு முன்மொழிவை முன்வைத்திருந்ததுடன், இவ்வாறு போட்டியிடுவதன் ஊடாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் அபிவிருத்தியை தொடர முடியும் என குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் முஸ்லிம் அரசியல்வாதிகளில் தைரியமானவராகவும் முஸ்லிங்களின் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கும் பைஸர் முஸ்தபா அரசியலில் நிறைய அனுபவங்களை கொண்டவர். அவர் கிழக்கில் போட்டியிட்டு கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்றால் முஸ்லிம்களுக்கு சாதகமாக இருக்கும் என தெரிவித்திருந்தனர்.

இதற்கு பதிலளித்த அவர், எனது விஜயமானது எமது கட்சியின் மறுசீரமைப்பு விடயத்துடன் சம்பந்தமானது. எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதை கட்சி தான் முடிவெடுக்கும் என கூறியதோடு, தற்போதைய அரசாங்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் பேச்சுவார்த்தை ஒன்றின் ஊடாக அவற்றை தீர்வு கண்டு முன்னோக்கி செல்ல முடியும் என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தவிசாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## மின்வேலி அமைக்குமாறு பிரதேச சபை உறுப்பினர் உண்ணாவிரதம்



**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

மின் வேலி அமைத்து தருமாறு திருகோணமலை மொரவெவ பிரதேச சபை உறுப்பினர் எம்.டி.ரத்னாயக்க உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மொரவெவ பிரதேசத்தில் அனைத்து பகுதிகளுக்கும் யானை மின் வேலிகள் அமைத்து கொடுத்துள்ள போதிலும் அத்தாபெந்திவெவ, மிரிஸ்வெவ மற்றும் ரொட்டவெவ கிராமங்கள் அளவீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இன்னும் மின்வேலி அமைக்கப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இதனை கட்டுப்படுத்த அரசு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று (09) 7.30 மணி தொடக்கம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்று வருகின்றது.

யானை வேலி எங்களுக்கு இல்லை மொரவெவயில் யானை இல்லையா?

தீர்வு கிடைக்கும் வரை வீட்டுக்கு செல்ல மாட்டேன் என்ற பதாகையை ஏந்தியவாறு பிரதேச சபை உறுப்பினர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களின் புத்தாண்டு விழா

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**



தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 22 கமநல சேவை நிலையத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களை மையமாக வைத்து குறித்த புத்தாண்டு விழா நிகழ்வு இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ். வருணி தலைமையில் நேற்றுமுன்தினம் (08) மாவட்ட காரியலத்தில் இடம் பெற்றது.

இதில் கிடுகிழைத்தல், யானைக்கு கண் வைத்தல், மாவுக்குள் இருந்து நாணயக்குற்றி பொறுக்குதல் முட்டி உடைத்தல், சாரி அணிவித்தல் விழிப்புணர்வு வீதி நாடகம், சங்கீத கதிரை என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வு மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் கடமை புரியும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள், நிலைய உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜே. அருள்ராஜ், மாகாண விவசாய பாணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.ஹுசைன், விவசாய விரிவாக்க பிரதி பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பொறியியலாளர்கள், கணக்காளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளினாலும் மாவட்ட உதவி ஆணையாளரினாலும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, மாவட்ட உதவி ஆணையாளரினால் விவசாய விரிவாக்க பணிப்பாளர் மற்றும் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபருக்கு நினைவு சின்னமாக மூலிகை மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## புத்தாண்டு காலத்தில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்

### மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சித்திரை புத்தாண்டு காலத்தில் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொரோனா பரவலை கருத்திற்கொண்டு மக்களை மிகுந்த அவதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படுமாறு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தாக்கம் குறைவடைந்து வரும் நிலை காணப்பட்டாலும், தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு காலங்களில் அதிக சன நெரிசல் காணப்படுவதனால் அவ்வாறான இடங்களிற்கு செல்லும் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறும், அது அவர்களுக்கும் அவர்களது சுற்றத்தாருக்கும் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் நன்மையளிக்கும் என்பதால் பொது மக்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுவதாக அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே மக்கள் பண்டிகை காலங்களில் சனநெரிசல் அதிகமான இடங்கள் மற்றும் ஆலயங்கள் போன்றவற்றிற்கு செல்வதை இயன்றளவு தவிர்த்து வீட்டிலிருந்தவாறே தத்தமது குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபடுமாறும், அவசர தேவைகளுக்காக மாத்திரம் வெளியில் செல்வது சாலச் சிறந்ததாக அமையுமெனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினை நாட்டிலிருந்து இல்லாது ஒழிப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதனும் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, கொரோனா அற்ற நாடாக மாற்றி இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகும் என்றார்.

## திருகோணமலையில் பயிற்சிப்பட்டறை

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புதல் எனும் கருப்பொருளின் அடிப்படையில் Serving Humanity Foundation அமைப்பினால் தேசிய சமாதானப் பேரவையின் ஒருங்கிணைப்புடன் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சர்வமத தலைவர்கள், கிராம சேவகர்கள், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக பிரதேச சர்வமத குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் திறன் விருத்தியை அதிகரிக்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் (08) சட்டவாட்சி பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் பிலீப் முருகையா மற்றும் ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க்.ஆஷிக் அலாப்தீன் (நளீமி) ஆகியோரின் தலைமையில் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக எம்.ஏ.எம் ஹக்கீம், சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய சமாதானப் பேரவையின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தை



**பாசிக்குடா நிருபர்**

'அன்பான வணிகன்' எனும் தலைப்பிலான சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தை நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளர் க.தேவமனோகரி தலைமையில் நடைபெற்றது.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை சலுகை அடிப்படையில் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் முகமாகவும் சமுர்த்தி உதவி பெறும் விற்பனையாளர்களை வியாபாரத்தில் ஊக்குவிக்கும் முகமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், தானியங்கள், உடைகள், பொதி செய்யப்பட்ட பொருட்கள் என பல வகையான பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டன.

## அன்னமலை இயந்திர படகு சேவையினை ஏற்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

**(மண்டூர் குறூப் நிருபர்)**

கஞுவாஞ்சிக்குடி செயலகப் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை கிராமத்தில் இருந்து நாவிதன்வெளி செயலக அன்னமலை கிராமத்தினை இணைக்கும் மிதவைப் படகுச் சேவை, பல வருடமாக சேவையில் ஈடுபடாததனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் துறை வழியாக ஆற்றைக் கடப்பதில் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்தகால அசாதாரண சூழ்நிலையின்போது நிறுத்தப்பட்ட மிதவைப் படகுச் சேவையினை ஏற்படுத்தி தருமாறு, தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரியும் இற்றைவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என பொதுமக்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

இந்நிலையில் நாவிதன்வெளி மற்றும் போரதீவுப்பற்று செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்லோயா குடியேற்றக் கிராமங்களுக்கு செல்லும் பொதுமக்கள் மட்டு. வாவியினை கடக்க துறைப் போக்குவரத்து மார்க்கமின்றி, மூன்று பேர் பயணிக்கக்கூடிய சிறிய தோணியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் நாவிதன்வெளி, உகனை, லகுகல ஆகிய செயலகத்திற்குட்பட பல்வேறு அலுவலகங்களுக்கு பயணிக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை பெறுநர் தோணியில் பயணிக்கும் போது அச்சம் கொள்வதுடன் கடந்த காலங்களில் உயிராபத்துகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிதவை படகுச் சேவைக்கு செல்வோர் இளைப்பாறி தரித்து இருக்கும் கட்டடத்தின் கூரைகள் உடைந்து பற்றைக்காடு சூழ்ந்த நிலையில் காணப்படுவதனால் நுளம்புப் பெருக்கமும் விஷ ஜந்துக்களும் உருவாகும் இடமாக மாறி வருவதாக, பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் அத்தியாவசிய தேவை நலன் கருதி, இயந்திரப்படகுச் சேவையினை ஏற்படுத்துவதுடன் தரிப்பு நிலைய (அம்பலத்தடி) கட்டடத்தினையும் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## குறுஞ்சாக்கேணி பாலம் புனர் நிர்மாணம்

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக்கின் வேண்டுகோளுக்கிணங்க நீண்ட காலம் புனர் நிர்மாணம் செய்யப்படாமல், மக்களின் எதிர்பார்ப்பாக விளங்கிய குறிஞ்சாக்கேணி பால நிர்மாண வேலைகள் இன்று (10) ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் கிராமிய வீதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## உத்தேச அத்தாட்சி பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை

**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகத்தில் உத்தேச வயது அத்தாட்சி பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு தலைமையில் நடைபெற்றது.

நீண்டகாலமாக பிறப்பு, இறப்பு பதிவுகள், திருமணப் பதிவுகள், கிடைக்கப்பெறாமல் பிரதேச மக்கள் பெரும் சிரமமடைந்து காணப்பட்டனர்.

இவர்களது குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 18 கிராம சேவகர் பிரிவுகளில் இவ்வாறான குறைபாடுகள் உள்ளோர் அடையாளம் காணப்பட்டு, அதற்கான தீர்வு வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான திட்டம் மற்றும் நிதி அனுசரணை தொடர்பான நடவடிக்கையினை மட்டக்களப்பு காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த 20 வருடகால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் சுய நிர்ணய உரிமையோடு கூடிய ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். இவர்களது இவ்வாறான குறைபாட்டினை காவிய சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனம் அடையாளம் கண்டு, இதற்கான தீர்வினை பெற்றுக் கொள்ளும் முகமாக கிரான் பிரதேச செயலாளர் மற்றும் கிழக்கு வலய பிரதிப் பதிவாளரின் ஆலோசனையுடன் இத்திட்டத்தினை முன்னெடுக்க முடிந்ததாக அமைப்பின் பணிப்பாளர் திருமதி யோகமலர் அஜித்குமார் கருத்து தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சுமார் 200 இற்கும் மேற்பட்டோருக்கு உத்தேச வயது அத்தாட்சி பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது. இதில் மட்டக்களப்பு கிழக்கு வலய பிரதிப்பணிப்பாளர் க.திருவருள் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர் இ. சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

# எங்கள் பிரார்த்தனைகள்!!



ஆசானே! ராஸிக்ஆசானே!!
நீங்கள்வாழ்ந்தபோது
இந்தஊரேநிறைந்திருந்தது!

ஆசானே, ராஸிக்ஆசானே!
உங்கள்மேல்அத்தனைஅன்பு
இந்தஊருக்குள்நந்தவனமாகமணக்கிறது!

கல்வித்தாகம்தீர்க்க
நாம்புளுவவந்தேன்நானும்
ஒருதந்தையாக
அன்பைப்பொழிந்தீர்கள் நீங்களும்!

எறும்புகரும்பைவிரும்பி
ஊர்ந்துசெல்வதுபோல்
எனக்குள்ஒருதனிப்பற்றுஉங்களில்!!

நான்குபெண்களின்தந்தை
ஆண்களைவிடஅவர்களை
வாழ்க்கைஇலக்குகளைஅடையச்செய்தீர்கள்!

எட்டுதசாப்தங்களைஎட்டி
எத்தனைஆயிரம்மக்களைநீங்கள்
வழிப்படுத்திநெறிப்படுத்தியிருப்பீர்கள்!

கல்வியின்மகிமைஉணர்ந்து
கல்வியோடுகலையும்வளர்த்து
கவலைகளைதீர்த்துவிட்டீர்கள்!
கல்வியில்தான்உயர்வென்பதை
உறுக்கமாகக்கடைப்பிடித்துவழிகாட்டி
கலங்கரைவிளக்காகத்திகழ்ந்தவர்நீங்கள்!

ஆசானாகஇருபத்தெட்டுஆண்டுகள்
பின்னர்அல்லிநிறுவனத்தில்
முப்பதுஆண்டுகள்
ஆயுள்வரைஅலுக்காதசேவை!!

வெள்ளைமனதுஉங்களது
வெள்ளியன்றுதானேநீங்களும்
இறையழைப்பைஏற்றுக்கொண்டீர்கள்!

சொந்தபந்தம்உற்றார்உறவுகள்
பலஊர்களும்ஆசிரியர்களும்மாணவர்களும்
திரண்டிருந்தனர்உங்கள்பிரியாவிடையில்!

பிரியமின்றிநாங்களும்
பிரியவிடைகொடுத்தோம்!
மீண்டும்இறைசந்நிதியில்சந்திப்போம்!

அதுவரை உங்களுக்காய்
நீங்காமல்நீண்டுசெல்லும்
எங்கள்பிரார்த்தனைகள்!!

கவியரசி **எஸ்.ஏ.இஸ்மத்பாத்திமா**
பஸ்யால

(19/03/2021 ஆம்திகதியன்று
இறையடிசேர்ந்த
**நாம்புளுவமர்ஹூம்எம். ராஸிக்**
ஆசிரியரதுநினைவாகஇந்தக்கவிதை)

# முத்தமிட்டமழை



வாலாட்டிகளும்அடங்கி
பேய்களும்வெளிவராநடுநிசியில்
கூரையூடாகஅத்துமீறிஇறங்கி
என்னைதட்டிஎழுப்பி
தூக்கத்தைகலைத்துவிடுகிறது
துளியும்ஈரமற்றமழை
சிறுஉறுத்தலுமின்றி
தூக்கம்கலைத்தமழைமீது
சினம்பெருக்கெடுத்தபோதும்
அதன்குழந்தைமுகம்
அணைகட்டிஅடக்கிவிடுகிறது
திருட்டுப்பூனையென
படுக்கையறைநுழைந்தமழையை
துரத்திவிடமனசின்றி
பாத்திரத்தில்அமர்த்துகிறேன்
பின்னர்நானும்மழையுமாக
சூரியன்நெட்டிமுறித்தெழும்வரை
தேநீர்அருந்தியவாறு
நலைந்துபேசிக்கொண்டிருந்தோம்
ஒவ்வொருதுளியாக
அறைக்குள்இறங்கிவந்து
கைகுலுக்கிமுத்தமிட்டதுமழை

ஜமீல்

# இதயத்திலிருந்து என் உதயத்திற்கு



உம்மாஎனும்நீங்கள்
சும்மாஇல்லையம்மா
தினம்எம்மோடுஇருப்பீர்கள்
நாம்சிரித்தால்
நீங்களும் சிரிப்பீர்கள்

பொன்னானவார்த்தைகளால்
போற்றுவீர்எம்மை
கண்ணாகஅரவணைத்து
காப்பாற்றுவீரே

ஈஎறும்புதீண்டாமல்
இமைபோல. எமைக்காக்கும்
ஆறுயிர்உம்மா
அன்புநிறைந்தவர்
நற்பண்புநிறைந்தவர்

அருமையானஉம்பேச்சு
அழகழகாய்இருக்கும்
அன்னைஎன்றபெயருடைய
நீங்கள்அன்னமாய்இருப்பாய்

நாருசிக்கசமையல் செய்து
கதைகள்பலசொல்லிஊட்டிடுவீர்கள்
விதவிதமாய்ஆடைகள்தந்தெம்மை
சீராட்டிடுவீர்.

உம்மாஉங்களைதாயாய்பெற்றிட
என்னதவம்நாம்செய்தோம்
எண்ணிப்பார்க்கையிலே
கண்கள்பணிக்கின்றனஉம்மா

**மரியம்பர்வீன்**
தரம்7
அல்முபாரக்தேசியபாடசாலை
மல்வானை.

# விடியலை வாசிப்பவன்



அதிகாலை
பள்ளியெழுச்சியில்
ஆலாபனைபாடும்
பட்சிகளின்இன்னிசை
இனிமையாகத்தானிருக்கிறது
எல்லாராகங்களையும்
ஒன்றிணைத்தபாடலது
பனிக்குளிரில்கலந்து
காற்றின்கரம்பிடித்து
காதுகளைவந்தடைகிறது
வசீகரமிக்கஅப்பாடல்கள்
எந்தப்பறவையின்பாடலிது
பிரித்தறியமுடியாத
அபூர்வராகங்களவை
கச்சேரிக்குபோவதில்லை
இந்தப்பட்சிகள்
ஆனாலும்
ஓசைகளினால்தினமும்
ஒத்திகைபார்க்கின்றன
குரலிசையின்மூலம்
கும்மாளமிட்டு
குதூகளிக்கின்றன
அயர்ந்துதூங்கும்
அருக்கனைஎழுப்பவோ
அல்லதுவிடிகாலையின்
கங்குலைகலைத்துவிரட்டவோ
அல்லதுதூங்கமறுத்த
மின்மினிகளைமிரட்டவோ
எதுக்காகஇந்தஆலாபனை

வித்துவான்தோற்றுப்போகும்
விந்தைமிகுவித்தையிது
அற்புதஇசைக்கலவையின்
ஆரம்பமாஅல்லதுமுடிவாயிதுவென
அனுமானிக்கமுடியவில்லை

இருளும்ஒளியும்
இடமாறிக்கொள்ளும்
இரண்டாம்சாமத்தின்
கடைசிநொடிகளில்
தினமும்வந்துவிழும்
இந்தஇன்பஆலாபனையின்மூலம்
அன்றையதினம்
ஆரவாரமாய்பிறக்கிறது
விடியலைவாசிக்க
மொழியெதற்கு
புலன்கள்மட்டுமேபோதும்
அள்ளிப்பருகவும்
ஆனந்தமடையவும்.
விடியலைஆனந்தமாக்கும்
இந்தசின்னப்பட்சிகளிடம்
கற்றுக்கொள்ள
எவ்வளவோஇருக்கு
ஆமாம்எவ்வளவோஇருக்கு!

**நாச்சியாதீவு பர்வீன்**




புனிதத்தின்பெறுமானத்தை
புவியினில்புரிகின்ற
மனிதமனங்களையும்,
மாண்புறுமனைகளையும்
என்றும்இறையருளால்
இன்புறஇலங்கிடச்
செய்திடும்ரமழானே
வருக!!
மனிதவுருக்கொள்ளா
சதிகாரக்கும்பல்களாலும்,
அகிலமெங்கும்
அழிவைத்தந்த
ஆட்கொல்லிகொரோனாவாலும்
மீளாத்துன்பங்களில்
மீண்டும்மீண்டும்
மாண்டழிந்ததால்
ஈராண்டுரமழானை
ஜொலிப்பற்று
இழந்திட்டோம்
இப்லீஸியசகவாசங்களின்
இதயநேசத்தால்
இடர்கள்தொடரானது...
இனிவருகின்றரமழானே!!
இறைநேசத்தால்
இரட்டிப்பாய்அமல்களிலே
இடர்களறமூழ்கிட....
கிருபைசெய்திடு!
குர்ஆனியக்கலைகளோடும்,
ஈமானியஉணர்வுகளோடும்
வெறும்விரதமாய்அன்றி
திருமறைசாற்றிய
வழிமுறையோடு
வல்லோனைவணங்கிட...
எழிலருள்ரமழானே
எம்மைவந்தடைந்திடு!
இல்லாதோர்
உள்ளோர்என்னும்
இழிநிலைகள்
இனியும்தொடராது
இறைஉவப்பால்உயிரற்று,
குடிசைவீட்டின்
கோரப்பசியை
கோபுரமனையாளர்களின்
கரைபுரண்டோடும்
கல்புகளில்நிறைத்திட....
கண்ணியமோங்கும்
ரமழானேவருக!!
மனமொன்றெனமாறி
மற்றோரைமன்னித்து
அருளாளன்அல்லாஹ்வின்
மன்னிப்பிற்காய்...
மனமுருகிமன்றாடி...
மகத்துவம்சுமந்திட....
கூட்டுவணக்கம்
தௌபாக்களிலே
உபரியாய்மூழ்கி...
ரய்யானைஅடைந்திட....
ரம்மியமிகுரமழானே
வருக!!

ஏரூர்க்கவி
**எச்.எம்.எம்.றசீம்**

# குயிலே நீ எங்கிருக்கிறாய்




உனைப்பார்க்கவீறுநடைபோடுதடி
ஆழப்புதைந்தஎன்காதலதைநீ
அழித்துவிடஉலகில்நேர்ந்த்தேனோ

அண்ணாவென்றழைத்து
ஆரம்பஅறிமுகம்செய்துவிட்டாய்
டேய்நண்பாஎன்றழைத்து
தோள்அருகில்வந்துவிட்டாய்
செவியினிக்கமாமாஎன்றழைத்து
என்மார்பிலும்சாய்ந்துவிட்டாய்

என்உயிரின்முடிவுநீயென்றழைத்து
என்னுள்ளும்குடிபெயர்ந்தாய்
இன்றுஏனோஎன்மனதை
சிறையிட்டுஎனைஉதறிவிட்டுஅமைதியாகசென்றுவிட்டாய்
அழகேஎப்படிநான்நடிப்பேன்
என்னுள்ளேஇன்றுவலிஇல்லையென்று

உன்குரல்கேட்கதோணுதடி
மலரேநீஎங்கிருக்கிறாய்
உன்முகம்பார்க்கதோணுதடி
உயிரேநீஎங்கிருக்கிறாய்
உன்மூச்சில்கலக்கதோணுதடி

வேதனைதான்எனக்குமடி
வேலெடுத்துநெஞ்சில்குத்துதடி
பீறுட்டுவழியும்என்குருதி

உள்ளத்தில்எனக்குநீஅழகானஉறவுமடி
எல்லைஇல்லாக்காதலைமுதல்கொடுத்தவளும்நீயடி
மறையாதஞாபகங்கள்எனில்விட்டு
கனவுகளைஇரசித்திடவைத்தாயடி
இன்றுஇரசிக்கிறேன்உன்னை..
பத்திரமாய்புல்முளைத்தஎன்கல்லறையில்நான்இருந்துமடி....

**வன்னித்தமிழ்மறவன்..**

# சொந்த மண்ணில் தொடரை இழந்தது தென்னாபிரிக்கா





தென்னாபிரிக்கா அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது.

சென்சூரியன் மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 320 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பகர் சமான் 101 ஓட்டங்களையும் பாபர் அசாம் 94 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், மஹாராஜ் 3 விக்கெட்டுகளையும் மார்கிரம் 2 விக்கெட்டுகளையும் பெலுக்வாயோ மற்றும் ஸ்மட்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 321 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 49.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 292 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜேன்மேன் மாலன் 70 ஓட்டங்களையும் கைல் வெர்ரெய்ன் 62 ஓட்டங்களையும் என்டில் பெலுக்வாயோ 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மொஹமட் நவாஸ் மற்றும் ஷாயின் ஷா அப்ரிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்டுகளையும் ஹசன் அலி மற்றும் உஸ்மான் காதிர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, பாபர் அசாமும், தொடரின் நாயகனாக பகர் சமானும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கொரோனா அச்சுறுத்தலால்

# பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் ஒத்திவைப்பு

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டி பரிசில் அடுத்த மாதம் (மே) 23ம் திகதி தொடங்குவதாக இருந்தது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த போட்டி ஒரு வாரம் தள்ளிவைக்கப்பட்டு மே 30ம் திகதி தொடங்கும் என்று பிரான்ஸ் டென்னிஸ் சம்மேளனம் நேற்றுமுன்தினம் அறிவித்தது. பாதுகாப்பான சூழ்நிலையில் முடிந்த அளவுக்கு அதிக பார்வையாளர்கள் முன்னிலையில் போட்டி நடைபெறுவதை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கொரோனா பரவல் காரணமாக பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டி செப்டம்பர் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டதுடன், தினசரி 1,000 இரசிகர்கள் மட்டுமே போட்டியை காண அனுமதி அளிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

# கரப்பந்தாட்ட திடல் அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்



அக்கரைப்பற்று பிரதேச சபை நிர்வாகத்தின் கீழுள்ள அதாஉல்லா விளையாட்டு மைதான கரப்பந்தாட்ட திடல் அமைக்கும் வேலைத்திட்டம் அக்கரைப்பற்று பிரதேசசபை தவிசாளர் எம்.ஏ. றாஷீக் தலைமையில் (08) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேசசபை உப தவிசாளர் ஏ.எம். அஷ்ஹர், அக்கரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள், அக்கரைப்பற்று பிரதேசசபை செயலாளர் எல்.எம். இர்பான், பிரதேசசபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். இவ்வேலைத்திட்டத்தினை இப்பிராந்திய இளைஞர்களின் நன்மை கருதி வெற்றிகரமாக செயற்படுத்த முன்னெடுப்புக்களை செய்த வன ஜீவராசிகள் இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அகமட் முகிடீன் நிஹால், மற்றும் இவ்வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அஹமட் ஸகி ஆகியோருக்கும் இந்நிகழ்வில் பிராந்திய இளைஞர்களினால் நன்றி நவிலல் உரை நிகழ்த்தப்பட்டது.

## ரி–20 உலகக்கிண்ணம்:

# இந்தியாவிலிருந்து மாற்றப்படுமா? ஐசிசி பதில்




இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில், ஒக்டோபர் நவம்பரில் ரி-20 உலகக்கிண்ண தொடர் நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று மிகச்சிறப்பான வகையில் கட்டுப்படுத்தப்பட்டது. தினந்தோறும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கும் கீழ் வந்தது. இதனால் கொரோனா தொல்லை முடிந்தது என மக்கள் நினைக்கையில், திடீரென 2ம் அலையாக மீண்டும் கொரோனா மின்னல் வேகத்தில் பரவத் தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டைவிட தற்போது அதிதீவிரமாக பரவி வருகிறது. கொரோனா தொற்றால் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளது.

இந்தக் கொரோனா நெருக்கடிக்குள் ஐபிஎல் போட்டி ரசிகர்கள் இன்றி நாளைமறுதினத்தில் இருந்து நடைபெறுகிறது. இப்படியே சென்றால் இந்தியாவில் நடைபெற இருக்கும் ரி 20 கிரிக்கெட் தொடர் கேள்விக்குறியாகிவிடும்.

இதுகுறித்து ஐசிசியின் இடைக்கால சிஇஓ அல்லார்டைஸ் கூறுகையில் ''ரி 20 உலகக் கிண்ணத்தை நடத்த திட்டமிட்டுள்ள திட்டத்தின்படிதான் உறுதியாகச் செல்வோம். எங்களிடம் மாற்று திட்டம் உள்ளது. அதுகுறித்து இன்னும் யோசிக்கவில்லை. நாங்கள் பிசிசிஐயுடன் இணைந்து இதுகுறித்து ஆலோசித்து வருகிறோம். அதற்கான நேரம் வந்தால் மாற்று திட்டத்தை செயல்படுத்துவோம்.

கொரோனா காலத்திலும் ஏராளமான நாடுகளில் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. நாங்கள் அதில் இருந்து கற்றுக்கொண்டு வருகிறோம். உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளது. அதிலும் உறுதியாக இருக்கிறோம்'' என்றார்.

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய தேர்வுக்குழு நியமனம்

ஆறு பேர் அடங்கிய இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தேர்வுக்குழு (கடந்த (8) நியமனம் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் அறிவித்திருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் ப்ரமோத்ய விக்ரமசிங்க தலைமையில் நியமனம் செய்யப்பட்டிருக்கும் புதிய தேர்வுக்குழுவில் இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரர் ரொமேஷ் களுவிதாரன, ஹேமந்த விக்ரமரட்ன, வருன வரகொட, உவைசுல் கர்னைன் மற்றும் திருமதி திலக்கா நில்மினி குணரத்ன ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தேர்வுக்குழுவிற்கு அனுமதி வழங்கியிருப்பதோடு, புதிய தேர்வுக்குழு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது பணிகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.



### தேர்வுக்குழு உறுப்பினர்கள்

**ப்ரமோத்ய விக்ரமசிங்க (தலைவர்)**
**ரொமேஷ் களுவிதாரன (உறுப்பினர்)**
**ஹேமந்த விக்ரமரட்ன (உறுப்பினர்)**
**உவைசுல் கர்னைன் (உறுப்பினர்)**
**வருண வரகொட (உறுப்பினர்)**
**பி .ஏ. திலக்கா நில்மினி குணரட்ன (உறுப்பினர்)**

# அக்கரைப்பற்றில் தமிழ்–சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த தமிழ்-சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா நிகழ்வுகள் வைத்தியசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றன.

நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் ஏ.சி.அப்துல் ரஷாக் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிர் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

வைத்தியசாலை விஷேட வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதியபரிபாலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். இனங்களுக்கிடையில் ஐக்கியம், நல்லிணக்கம் என்பனவற்றைக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில், வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.







பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் விஷேட அம்சமாக இடம்பெற்றன. அனைத்து இன ஊழியர்களும் போட்டிகளில் பங்குபற்றினர். வெற்றியாளர்கள் அதிதிகளினால் பரிசில் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

வருடாந்த தமிழ் சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உதவி, ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.